15 மே 1994 □ ரூ. 3.00

www.padippakam.com

காட் – காங்கிரசின் 'தேசத் துரோகம்

# புதிய ஜனநாயகம்




படிப்பகம்

www.padippakam.com

# ரயில் மறியல், கறுப்புநாள் இயக்கம் அடிமைசாசனம் 'காட்'டிற்கு எதிர்ப்பு

இந்திய மக்களின் கடுமையான எதிர்ப்பை கொஞ்சமும் மதியாது ஏப்ரல் 15-ம் தேதியன்று நரசிம்மராவ் அரசு, டங்கல் திட்டத்தை உள்ளடக்கிய 'காட்' ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. அமெரிக்கா, ஐரோப்பிய சமூகம், ஜப்பான் போன்ற வல்லரசுகளின் முழு வேட்டைக் காடாக இந்தியாவை மாற்றி, மீண்டும் காலனி - அடிமை நாடாக்குவதற்குரிய பணி இனி துரிதமாக நடக்கும். விவசாயத்தையும் தொழில் துறையையும் சீர்குலைத்து விலைவாசி - வேலையில்லாத் திண்டாட்டத்தைப் பெருக்கி மக்களை சொல்லொணாத துயரில் தள்ளுவதே இந்த ஒப்பந்தத்தின் விளைவாக இருக்கும். இந்த நாசகார ஒப்பந்தத்தில் நரசிம்மராவ் அரசு கையெழுத்திடுவதை எதிர்த்து 14-4-94 அன்று மக்கள் கலை இலக்கியக் கழகம், விவசாயிகள் விடுதலை முன்னணி, புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி ஆகிய அமைப்புகள் இணைந்து தமிழகம் தழுவிய ரயில் மறியல் போராட்டம் நடத்தின.

திருச்சி, சென்னை, தஞ்சை, மதுரை, விழுப்புரம், ஜோலார் பேட்டை, ஈரோடு, திண்டுக்கல் ஆகிய பகுதிகளில் 20-லிருந்து 60 பேர் வரை ஒவ்வொரு இடத்திலும் ரயில் மறியலில் ஈடுபட்டு கைதாகினர். திருச்சியில் 60 பேர் இரு குழுவாகப் பிரிந்து பல்லவன் விரைவு ரயிலை திருச்சி சந்திப்பிலும் திருவரங்கத்திலும் மறித்தனர். மறுநாள் - ஏப்ரல் 15-ஐ கறுப்பு நாளாக அறிவித்து துவாக்குடி, திருவாணைக் கோவில், செங்குளம் காலனி, தி.வி.க. நகர் ஆகிய பகுதிகளில் முழக்கங்கள் அடங்கிய தட்டிகளுடன் சைக்கிள் ஊர்வலம் நடத்தி பிரச்சாரம் செய்யப்பட்டது. ஒவ்வொரு பகுதியிலும் கறுப்புக் கொடி ஏற்றி எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.

சென்னையில் 24 பேர் கோரமண்டல் விரைவு ரயிலை மறித்துப் போராடியதால் 25 நிமிடம் தாமதமாக ரயில் புறப்பட நேரிட்டது.

மதுரையில் நகரின் மையப் பகுதிகளில் கறுப்புக் கொடிகள் கட்டப்பட்டு கறுப்பு நாள் மற்றும் ரயில் மறியலுக்கான முழக்கத் தட்டிகள் பரவலாக வைக்கப்பட்டன. சுவரெழுத்துகள் மூலமும் பிரச்சாரம் செய்யப்பட்டது. 11-4-94 அன்று சைக்கிள் ஊர்வலமும் தெருமுனைப் பிரச்சாரமும் நடத்தப்பட்டது. தெரு முனைக் கூட்டம் 22 இடங்களில் நடத்தப்பட்டதில் ம.க.இ.க., பு.மா.இ.மு-வைச் சேர்ந்த தோழர்கள் கதிரவன், ரவீந்திரன், மகிழன் ஆகியோர் "காட்" ஒப்பந்தத்தை எதிர்த்து நடத்தும் ரயில் மறியல் மற்றும் கறுப்பு நாளைப் பற்றி விளக்கிப் பேசினர். "ஏப்ரல்-15 கறுப்பு நாள்" என அறிவிக்கும் அட்டைகள் சட்டையில் குத்திக் கொள்வதற்காக பரவலாக மக்கள் மத்தியிலும் விநியோகிக்கப்பட்டது. 13-ந் தேதி இரவு முன்னெச்சரிக்கை நடவடிக்கை என கைது செய்வதற்காக சமயநல்லூர், ஜெய்ஹிந்த்புரம் பகுதியில் தோழர்களைத் தேடியது போலீசு. எவரும் கைக்கு கிடைக்காததால் பகுதி மக்கள், தோழர்களின் குடும்பத்தினர், வீட்டுச் சொந்தக்காரர்களை எல்லாம் மிரட்டிச் சென்றது.


14-4-94 அன்று மதுரை ரயில் நிலையத்தில் போலீசு குவிக்கப்பட்டு இருந்ததால் பின்புறமாக சென்று தோழர்கள் வைகை விரைவு ரயிலை மறிக்க முற்பட்டனர். அதற்குள் போலீசு வளைத்து கைது செய்து நீதிமன்றத்திற்கு கொண்டு சென்றது. நீதிபதி 15 நாள் காவலில் வைக்குமாறு உத்திரவிட்டார். வழக்கறிஞர் திருமதி. டெய்சி பாய் அவர்களின் உதவியோடு தோழர்கள் பிணையில் வெளிவந்தனர்.

வி.வி.மு. உத்தமபாளையம் வட்டாரச் செயலாளர் மோகன் மற்றும் ஆண்டிப்பட்டி வட்டாரச் செயலாளர் செல்வராசு தலைமையில் திண்டுக்கல்லில் 33 பேர் மறியலில் ஈடுபட்டு கைதாகினர். இதில் 7 பேர் தவிர மற்றவர்கள் ரயில் நிலையத்திற்குள் நுழைந்ததும் கைது செய்யப்பட்டனர். 7 தோழர்கள் ரயிலுக்காக காத்திருந்து மறிக்க முயலும்போது கைது செய்து திண்டுக்கல் போலீசு நிலையத்தில் வைக்கப்பட்டனர். மதியம் அனைவரும் விடுவிக்கப்பட்டனர். ஏப்ரல் 15-ஐ கறுப்பு நாளாக கடைபிடிக்கும் பொருட்டு லோயர் கேம்ப் பேருந்து நிலையத்தில் தோழர் பாண்டி தலைமையில் தோழர் வேலாயுதசாமி கறுப்பு கொடி ஏற்றி வைத்தார். தெருமுனைக் கூட்டத்தில் தோழர் சேகர் சிறப்புரையாற்றினார்.

நாராயணத் தேவன் பட்டியில் தேவராஜ் தலைமை தாங்க கதிரவன், கிருஷ்ணன் ஆகியோர் சிறப்புரையாற்ற கறுப்புக் கொடி ஏற்றி தெரு முனைக் கூட்டம் நடத்தப்பட்டது. "காட்" ஒப்பந்தத்தின் நகல் தீயிலிடப்பட்டது. தேவாரத்தில் எஸ்.கே. கணேசன் தலைமையில் பாக்கியராஜ் கறுப்புக் கொடி ஏற்ற தெரு முனைக் கூட்டம் நடத்தப்பட்டது. தோழர் மோகன் சிறப்புரையாற்றினார். கம்பத்தில் அன்று மாலை ஊர்வலமாகச் சென்று நரசிம்மராவ்வின் கொடும்பாவி கொளுத்த திட்டமிடப்பட்டது. ஆனால் வை.கோ. - கருணாநிதி கோஷ்டிகளிடையே கலவரம் நடந்து கொண்டிருந்ததால் ஊர்வலம் நடத்த முடியவில்லை. கம்பம் பேருந்து நிலையத்தில் மோகன் தலைமையில் கொடும்பாவி கொளுத்தப்பட்டது. நூற்றுக்கணக்கான மக்கள் மத்தியில் இந்நிகழ்ச்சி சிறப்பாக நடத்தப்பட்டது.

தஞ்சை, விழுப்புரம், ஜோலார் பேட்டை, ஈரோடு ஆகிய பிற பகுதிகளிலும் இதேபோல் பிரச்சார இயக்கம் எடுக்கப்பட்டு "காட்" ஒப்பந்தத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. மொத்தத்தில் ரயில் மறியலும் கறுப்புநாள் இயக்கமும் தமிழகம் முழுவதும் பத்தாயிரக்கணக்கான மக்களிடையே கருத்து பரவ சிறந்த வடிவமாக அமைந்தது.

மதுரை சந்திப்பு ரயில் நிலையத்தில் நடந்த மறியல் போராட்டம்





படிப்பகம்

www.padippakam.com

புதிய ஜனநாயகம்

மார்க்சிய — லெனினிய அரசியல் ஏடு

ஒன்பதாம் ஆண்டு

**11-12**

15 ஏப். - 15 மே. '94

உள்நாடு:
தனி இதழ்: ரூ.3.00
ஆண்டு சந்தா: ரூ.72.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 16

ஓவியம்: சுரோ

படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்

இரா.சண்முகராஜ்,
ஆசிரியர், புதிய ஜனநாயகம்,
4, சாமியார் தோட்டம்,
ஆலந்தூர் சாலை,
சைதாப்பேட்டை,
சென்னை - 600 015.

# ஏழுமலை கொலைப்பழி: ஜெயா - வை.கோ. அயோக்கிய அரசியல் கூட்டு

வை. கோபால்சாமியின் கட்சி தனது முழு பலத்தையும் காட்டும் வகையில் கடந்த மாதம் சென்னையில் ஒரு ''எழுச்சிப் பேரணி''யை நடத்தியது. அதற்கான அமைப்புப்பணிகளை முன்னின்று நடத்தியவரும் அக்கட்சியின் சென்னை மாவட்டப் பொறுப்புக்குழுத் தலைவருமான ''நாயக்கர்'' என்றழைக்கப்பட்ட ஏழுமலை, பேரணி நடந்து முடிந்த இரண்டாவது நாள் இரவு அடையாளந் தெரியாத ஒரு கும்பலால் மிகவும் பயங்கரமான முறையில் படுகொலை செய்யப்பட்டார். ஏழுமலையின் உடலைக் கண்ட வை.கோ.வும் அவரது அணித் தலைவர்களும் தலையிலடித்துக் கொண்டு கதறித் கதறி அழுதார்கள். ஆனால் ஏழுமலையின் உடலைச் சிதையில் வைத்துக் கொண்டு வை.கோ. பேசிய பேச்சுக்களும், பின்னர் அவரது நடத்தையும் ஏழுமலையை இழந்ததால் ஏற்பட்ட துயரத்தை விட அவரது கொலையை வைத்து கொலைப்பழி அரசியல் நடத்தி ஆதாயம் தேடி விடவேண்டும் என்கிற துடிப்பே வை.கோ. விடம் மிகுந்திருப்பதாகக் காட்டி விட்டன.

''ராஜீவ் காந்தியை விடுதலைப் புலிகள் கொலை செய்ததைப் பற்றி என்ன சொல்கிறீர்கள்'' என்று இன்றுவரை வை.கோ.விடம் பத்திரிக்கையாளர்கள் கேட்கும் போதெல்லாம் அவர் என்ன சொல்கிறார்? ''விடுதலைப் புலிகள் மீது குற்றம் சாட்டி சிலரைக் கைது செய்துள்ளனர். இன்னமும் வழக்கு நடந்து கொண்டிருக்கிறது. அவர்கள் தான் கொலை செய்தார்கள் என்று நிரூபிக்கப்படவில்லை; தீர்ப்பும் வந்து விடவில்லை; அதற்குள் எப்படி புலிகள் தான் ராஜீவைக் கொன்றார்கள் என்று கூற முடியும்''. வை.கோ. ஒரு நேர்மையான அரசியல்வாதியாக இருந்தால் இந்த அடிப்படையில் தானே ஏழுமலை கொலை பற்றியும் கூற வேண்டும். ஆனால் தி.மு.க. காரர்கள், குறிப்பாகத் தலைமையின் தூண்டுதலின் பேரில்தான் இந்தக் கொலையை செய்தார்கள் என்கிற தோரணையில் சம்பவம் நடந்த ஒரு சில மணி நேரங்களிலேயே குற்றம் சுமத்திப் பேசுகிறார், வை.கோ. குறிப்பாக ''கருணாநிதி, ஸ்டாலின், அழகிரிதான் கொலைகாரர்கள், உடனே கைது செய்'' என அவரது அணியினர் சுவரொட்டி போடுகின்றனர். இதற்கு ஆதாரமாக, தடை செய்யப்பட்ட பின்னரும் தி.மு.க கொடியை வை.கோ. அணியினர் ஏந்தி வந்தால் அவர்களுக்கு கை இருக்காது என்று ஸ்டாலின் பேசியதாக பார்ப்பன - பாசிச ஏடான தினமலரில் வந்த செய்தியைக் காட்டுகிறார்கள்; வை.கோ அணி சுவரெழுத்துக்களை கரிபூசி அழித்ததற்காக தி.மு.க முன்னாள் எம்.எல்.ஏ. மதிவாணனையும், ஸ்டாலினையும் தொலைபேசியில் ஏழுமலை திட்டினதாகவும், இதை வை.கோ. அணி எம்.எல்.ஏ. விடம் ஏழுமலையே கூறியதாகவும் சொல்லுகிறார்கள்.

இந்த ஆதாரங்கள் பார்ப்பன - பாசிச ஜெயாவிடம் தரப்பட்டு, கொலை நடந்த இரண்டாம் நாளே, கருணாநிதி அணியினர் மீது கொலைப்பழி சுமத்தி சட்டசபையில் ஜெயா குற்றம்சாட்டுகிறார். மதிவாணன் உட்பட அந்தப்பகுதி தி.மு.க. பிரமுகர்கள் சிலர் கைது செய்யப்படுகின்றனர். தாமே சரணடைந்ததாகச் சொல்லி போலீசே கொண்டுவந்த சிலர் நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்பட்டு, விசாரணைக்காக எடுக்காமல் நேரடியாகச் சிறைக்கு அனுப்பப்படுகின்றனர். இந்த வழக்கில் போலீசின் நடத்தை சந்தேகத்துக்குரியதாக இருக்கிறது. கொலையாளிகள், ஆளும் பார்ப்பன - பாசிச ஜெயாவின் கிரிமினல் குற்றங்களை நிறைவேற்றித்தரும் மந்திரியின் தொழில் முறை கிரிமினல் - ரௌடிகள்; மந்திரியும், அவரது நெருங்கிய கட்சிக்காரர்களுமே கொலையாளிகளுக்குப் புகலிடம் தந்தனர்; ஆளும் கட்சியுடன் கொலையாளிகளுக்கு நேரடி - நெருங்கிய தொடர்பு இருப்பதால் நிரபராதிகள் மீது பொய்க்குற்றங்கள் - சாட்சியங்கள் சோடிக்கப்படுகின்றன; இதற்காக போலீசை ஜெயலலிதாவே நிர்பந்திக்கிறார் என்று வை.கோ. ஆதரவு பத்திரிகையாளர்களே எழுதுகின்றனர். தராசு ஊழியர் கொலை; சந்திரலேகா மீது திராவக வீச்சு ஆகிய வழக்குகளில் நடந்தது போலவே இதிலும் குற்றவாளிகள் போலீசால் காப்பாற்றப் படுகின்றனர் எனக் குற்றஞ்சாட்டுகின்றனர். இவை பற்றி வை.கோ.வோ, பார்ப்பன பாசிச ஜெயாவோ மூச்சுவிடவில்லை. கருணாநிதி அணியினர் ''சி.பி.ஐ'' பிரிவு விசாரணை நடத்த கோருகையில், வை.கோ.வோ வெட்கெங்கெட்டு போய் தமிழக அரசு போலீசு மீது நம்பிக்கையுள்ளதாகவும் அதன் விசாரணையே போதும் என்கிறார்.

அதைவிட முக்கியமானது, அரசியலைக் கிரிமினல்மயமாக்கும் தலைவர்களில் ஒருவராக வை.கோ. உள்ளதுதான். கொடூரமாகக் கொல்லப்பட்டாலும், அதற்காக அனுதாபத்துக்குரிய அரசியல் பிரமுகரா ஏழுமலை? இறந்தவர்கள் எல்லாம் புனிதமானவர்கள், கொல்லப்பட்டவர்கள் எல்லாம் அனுதாபத்துக்குரியவர்களா? இந்திரா, ராஜீவ், பிரேமதாசா போன்றவர்கள் தனது கொலைகார எதிரிகளைத் தாமே தேடிக் கொண்டவர்கள். அதாவது கொலைக்கான காரணங்களை விசாரிக்கப் போனால், அவர்களே குற்றவாளிகளாக நிற்கக் கூடியவர்கள். அந்த அளவுக்கு இல்லாவிட்டாலும்,

தொடர்ச்சி 7-ஆம் பக்கம்

படிப்பகம்

www.padippakam.com

# எவ்வகையில் மாறுபட்டது வை.கோ.வின் அரசியல்?

**வை.கோ. அணியினர் அண்ணாவின் காலத்தை, கொள்கைப் பூர்வ தி.மு.க.வை மீட்டு விடுவதாகவும் அரசியலில் புதிய போக்கு உருவாகிவிட்டதாகவும் தமிழகத்தில் பெரிய மறுமலர்ச்சி வரப்போவதாகவும் மாயையை உருவாக்குகிறார்கள்.**

"அரசியல் போட்டியில் தற்போது கருணாநிதிக்கு இறங்குமுகம்; வை. கோபால்சாமிக்கு ஏறுமுகம்" என்று அரசியல் வட்டாரத்தினர் பேசிக் கொள்கிறார்கள். மு.க.-வின் சமூக நீதிப் பேரணியை முறியடிக்கும் வண்ணம் அதுவும் தடையை மீறி தி.மு.க. பெயர், கொடியுடன் வை.கோ-வின் எழுச்சி நாள் பேரணிக்கு கூட்டம் திரட்டப்பட்டதைச் சுட்டிக் காட்டியே இப்படி பேசிக் கொள்கின்றனர்.

"அண்ணா, எம்.ஜி.ஆர், கருணாநிதி, ஜெயலலிதா போல் நாடகம் — திரைப்படம் மூலம் மக்களை கவர்ந்து மயக்கி அரசியலுக்கு வந்தவர் அல்ல, வை.கோ.! இவர் அரசியலில் நேர்மை, பொதுவாழ்வில் தூய்மை, கொள்கையில் உறுதியாக இருந்ததன் மூலம் பிரபலமடைந்துள்ளார். இப்படிப்பட்ட தலைவர் ஒருவர் அரசியலுக்கு வந்திருப்பது தமிழக அரசியலில் புதிய போக்கு உருவாகியிருப்பதையே காட்டுகிறது" — இது ஒரு சாராரின் பேச்சு.

"தமிழர்களுக்காக அனைத்து பிரச்சினைகளிலும் பாராளுமன்றத்தில் குரல் கொடுத்தது மட்டுமல்லாமல், ஈழப் பிரச்சினைக்காகவும் குரல் கொடுத்ததால், வை.கோ. டில்லி எம்.பி.க்கள் வட்டாரத்தில் 'டைகர்' என்று பெயர் பெற்றார். ஈழப் பிரச்சினையில், குறிப்பாக விடுதலைப் புலிகளைப் பற்றி பொதுக் கூட்டங்களில் பேசி அனைவரையும் கவர்ந்தார். இன்று அ.தி.மு.க., காங்கிரசிலிருந்து எல்லாம் தமிழுணர்வாளர்கள் வெளியேறி வை.கோ.வின் பின்னே திரண்டுள்ளது ஒரு மறுமலர்ச்சியையே குறிக்கிறது." இப்படி ஒரு கூற்று.

"அண்ணாவை எதிர்த்த சம்பத்துக்கும் கருணாநிதியை எதிர்த்த நெடுஞ்செழியனுக்கும் ஏற்பட்ட கதி வை.கோ.விற்கு ஏற்படாது. இருவரும் தனிக்கட்சி தொடங்கியதால் தான் வளர முடியாமல் சம்பத் காங்கிரசிலும், நெடுஞ்செழியன் அ.தி.மு.க.விலும் கரைந்துவிட நேரிட்டது. ஆனால் வை.கோ. கட்சியைக் கைப்பற்ற முனைவதோடு தக்க தருணத்தையும் பயன்படுத்தி எம்.ஜி.ஆரைப் போலவே அண்ணாவை முன்னிறுத்தி முன்னேறி வருகிறார். இதன் மூலம் கருணாநிதியை விட வை.கோ. சிறந்த ராஜதந்திரி என நிரூபணமாவதோடு வெற்றியும் உறுதி செய்யப்பட்டுள்ளது." — இது அரசியல் வட்டாரத்தினர் முன் வைக்கும் ஆருடம்.

"வை.கோ. தமிழகத்து பிரபாகரன். தற்போது ஈழப் பிரச்சினையில் சட்டத்திற்காக ஆழ்ந்த ஈடுபாடு இல்லாததுபோல் வை.கோ. காட்டுவது ராஜதந்திரம். தக்க தருணம் வரும்போது, தேவை ஏற்படும்போது இச்சட்டத்தையும் தூக்கியெறிந்து விட்டு எப்படிபட்ட போராட்டத்திற்கும் தலைமைக் கொடுக்க முன்வருவார். இதை, நெருக்கடியான நேரத்திலும் ஈழத்திற்கு பயணம் செய்ததன் மூலம் நிரூபித்துக் காட்டியுள்ளார். எனவே தமிழ்நாட்டின் தலைவிதி இனி வை.கோ. கையில் தான்". இப்படி வெறி-குருட்டு நம்பிக்கை கலந்த பேச்சுகள்.

— இப்படி ஏதாவது ஒரு வாதத்தை முன் வைத்துக் கொண்டு வை.கோ. பக்கம் நிற்பவர்களையும் அவரை ஆதரிப்பவர்களையும் பார்த்தால் பாமரர்கள், படித்தவர்களிலிருந்து சில தமிழின குழுக்களைச் சேர்ந்தவர்கள் வரை இருக்கிறார்கள். கருணாநிதியின் கட்சிக்குள் பழி வாங்கப்பட்டவர்கள், ஒதுக்கப்பட்டவர்கள் என ஒரு சிறு கும்பல்தான் வை.கோ. அணியின் பொறுப்புகளுக்கு - தலைமைக்கு இடம் பெயர்ந்துள்ளனர். கருணாநிதியின் எதேச்சதிகாரம், குடும்ப-வாரிசு அரசியல்தான் தி.மு.க. சீரழிந்து போனதற்கு காரணம் என்று கூறி இச்சிறுபிரிவினர், பகுத்தறிவு - மொழி - இன உணர்வு கொண்ட தி.மு.க. தொண்டர்களையும் பிற கட்சிகளிலுள்ள சிறுவீதம் பேரையும் குறிப்பாக இளைஞர்களையும் திரட்டிக் கொண்டுள்ளனர்.

இச்சிறு பிழைப்புவாத கும்பல், தி.மு.க.வின் துரோகத்தால் விரக்தியிலிருக்கும் இளைஞர்களை வை.கோ. போன்ற அதிரடி நபர்களால்தான் கவர முடியும் என்பதை உணர்ந்து கொண்டே வை.கோ.வைத் தூக்கிப் பிடிக்கிறது. இக்கும்பலை மீறி வை.கோ. தனிப்பட்ட முறையில் எதையும் செய்துவிட முடியாது. செய்யவும் விடமாட்டார்கள். ஆனால், அண்ணாவின் காலத்தை - கொள்கைப்பூர்வ தி.மு.க-வை மீட்டு விடுவதாகவும் அரசியலில் புதிய போக்கு உருவாகிவிட்டதாகவும் தமிழகத்தில் பெரிய மறுமலர்ச்சி வரப்போவதாகவும் கருத்தைப் பரப்பி மாயையைத் திட்டமிட்டு உருவாக்குகிறார்கள்.

பழைய தலைவர்களின் சந்தர்ப்பவாதம், துரோகம், சுயநலம், ஊழல், ஒழுக்ககேடுகள், அராஜகம், அக்கிரமங்களால் பாதிப்புக்குள்ளாகி வெறுப்புற்றிருக்கும் மக்களிடையே புதியவர்கள் எளிதாக ஏய்த்து இடம் பிடித்து விடுகிறார்கள். பழையன கழிதலும் புதியன புகுதலும் இயல்பு. ஆனால் காமராஜர், அண்ணா, எம்.ஜி.ஆர், கருணாநிதி, ஜெயலலிதா, வை.கோ என்ற பெயர்களையும், உருவங்களையும் தவிர கழிந்ததும் புகுந்ததும் வேறு எதுவுமில்லை.

தனிநபர்வாத - கவர்ச்சி அரசியலில் கருணாநிதியிடம் பாடம் கற்று கொண்டு வந்த வை.கோ. 'திறமையாகவே' செயல்படுகிறார். அண்ணாவின் கொள்கை, பாதையில் வழிநடப்பதாக வை.கோ. கூறிக்கொண்டாலும் அடியொற்றி நடப்பது என்னவோ கருணாநிதி வழியில் தான். கருணாநிதியால் அரசியலில் குடும்ப வாரிசைத்தான் உருவாக்க முடியவில்லை; தனது பொறுக்கி, கவர்ச்சி அரசியலின் வாரிசாக வை.கோ-வை உருவாக்கித் தந்துள்ளார்.

வை.கோ. தலைமையிலான அரசியல் பாதையின் முதல் அடியே தனிநபர்வாத - கவர்ச்சி அரசியல் அடிப்படையிலானதுதான். கருணாநிதியின் சந்தர்ப்பவாத - துரோகச் செயல்களோடு எல்லாம் சமரசம் செய்து கொண்ட வை.கோ., தன் மீது கொலைப் பழி சுமத்தியதில் மட்டுமே முரண்பட்டு நின்றார். 'கொள்கை'யை அல்ல; தன்னை முன்னிறுத்தியே அரசியல் நடத்துகிறார். "டில்லியின் டைகர்", "தமிழகத்து பிரபாகரன்" என்று பெயர் ஈட்டியவர், மேடைக்கு மேடை ஈழம், புலிகள் பற்றி முழங்கியவர் ஈழப் பிரச்சினையில் கருணாநிதியின் பச்சோந்தித்தனம் வெளிப்பட்டும்கூட வாய்மூடி இருந்தாரே ஒழிய, முரண்பட்டு வெளிவரவில்லை.

தனது மாற்றுக்குரலை கட்சிக்குள் எழுப்பி, (இத்தனைக்கும் தி.மு.க. மட்டுமே உன்னத ஜனநாயக முறை கொண்ட கட்சி!) கொள்கைக்காக நின்று முரண்பட்டு வெளிவந்திருந்தால்கூட "வை.கோ. கொள்கைவாதி" என்று சொல்வதில் ஒருவிதத்தில் அர்த்தமிருக்கிறது. அப்படி இல்லாதபோது வை.கோ.விற்கு "எஃகுறுதி வாள்", "கொள்கைச் சிங்கம்" "புரட்சி புயல்", "நீதியின் போர்



படிப்பகம்

www.padippakam.com




வாள்'' என்ற அடை மொழிகள் வழங்கப்படுவது, ஜெயலலி தாவிற்கு போடுகிற ''புரட்சித் தலைவி''யைப் போல அசிங்கமானதே! இது ''கட்டைக்குப் பட்டுக் குஞ்சலம்'' கட்டுகிற தனிநபர் துதி அலங்கார மல்லாமல் வேறென்ன?

கட்சிக்குள் தன் பின்னே ஒரு ஒளி வட்டம் சுற்றுவதற்காகத்தான் தமிழ், ஈழம், புலி எனச் சவடாலடித்தார், வை.கோ.! இது அவர் மீது வீசுகிற சேறல்ல; அவதூறல்ல; உண்மை. நக்கீரன் வார இதழில் ''யமுனைக் கரையில்'' என்று வை.கோ. எழுதுகிற தொடரில் தி.மு.க. கொள்கைக்காக, தமிழர்களுக்காக மட்டுமல்ல தனது சுயமரியாதைக்காக பாராளுமன்றத்தில் குரல் கொடுத்ததைக்கூட கருணாநிதி தனது சுயநல அரசியல் லாபம் கருதி எதிர்த்ததாக, கட்டுப்படுத்தியதாக பட்டியலிடுகிறார். இவற்றை இதுவரை ஏன் பொறுத்துக் கொண்டார்?

தனது ஈழ ரகசியப் பயணத்தில் தன்னை மாட்டி விட்டு கருணாநிதி தப்பித்துக் கொண்டது, புலிகள் தொடர்பாக பேசக்கூடாது எனக் கட்டுப்படுத்தியது, பொதுக்கூட்டங்களில் - கட்சிப்பணிகளில் ஓரங்கட்டப்பட்டது, தம்பி ரவிச்சந்திரன் கைதுக்கு கருணாநிதி மௌனம் சாதித்தது... எனத் தொடர்ந்து கருணாநிதி தனக்கு இழைத்த கொடுமையையெல்லாம் வை.கோ. எப்படி, ஏன் பொறுத்துக் கொண்டார்?

காலம் கனியட்டும் எனக் காத்திருந்ததாக பதில் கூறி தலைமைப் பதவிக்குதான் வைத்திருந்த குறியை ஒத்துக் கொள்கிறார், வை.கோ. எனவே கருணாநிதியின் குடும்ப - வாரிசு அரசியல்தான் வை.கோ. வளர்ச்சிக்குக் காரணம் என்பது முழுமையானது அல்ல; இது வை.கோ.விற்கு கிடைத்த ஒரு எதிர்மறை தூண்டுதல் அவ்வளவுதான்.

சொல்லிலோ பகுத்தறிவு; செயலிலோ தனிநபர் பக்தியை திட்டமிட்டு ஊட்டி வளர்ப்பது கழகங்களின் பாரம்பரியமாக உள்ளது. குருட்டு பக்தியை வளர்த்துத் தீக்குளிக்கிற, அலகு குத்திக் கொள்கிற, பச்சை குத்திகொள்கிற தொண்டர்களை உருவாக்கி விட்டு பிறகு இத்தகைய மடமையை விரும்பாதது போல், தடுப்பது போல் நாடகமாடுவது குறிப்பாக கருணாநிதிக்கு கைவந்த கலை. வை.கோ. இதில் வேறுபட்டு விட்டாரா என்ன?

பெரிய கட்-அவுட்டுகளிலிருந்து சிறிய சாவிகொத்து வரை தனது மூஞ்சியை விளம்பரப்படுத்திக் கொள்வதில் வை.கோ. குறைந்து விடவில்லை. தனது பேச்சு, எழுத்துகளில் வெளிநாட்டு இலக்கியங்களை, சம்பவங்களை இடையிடையே சொருகி தன்னை சகலமும் படித்த மேதையாக காட்டிக் கொள்ள வை.கோ. தவறுவதில்லை. பேரணி, இயக்கங்களில் எல்லாம் அதன் நோக்கத்தையல்லாமல் தனது பெயர், முகத்தை மட்டுமே முதன்மையாக்குவதுதான் நடக்கிறது. ஏப்ரல் 16, எழுச்சிப் பேரணிக்குக் கூறப்பட்ட காரணங்களை, முழக்கங்களை ''இலட்சியப் பாதை'' வெளியிட்டதோடு சரி; மூலை முடுக்குகளில் எல்லாம் எழுதப்பட்ட அதன் சுவரெழுத்துக்களில் அவை ''சென்சார்'' செய்யப்பட்டுவிட்டன. வை.கோ.வின் பெயரும் மூஞ்சியும் மட்டுமே கண்ணுக்குத் தெரிந்தன.

முஸ்லீம் குல்லாயுடன், தொண்டனுடன், ஏழைகளுடன் என ராஜீவ், கருணாநிதி, எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா பாணியில் வை.கோ.வும் ''காமிராவிற்கு'' எத்தனை ''போஸ்'' கொடுக்கிறார்? செல்லும் இடங்களிலெல்லாம் தன்னைக் காது புளிக்குமளவிற்கு தொண்டர்கள் உச்சி குளிர புகழ்ந்து கோஷம் எழுப்புவதை வை.கோ. ஏற்றுக் கொள்கிறார். வை.கோ.வைப் புகழ்ந்து துதிப் பாடல்கள் விஜயா தாயன்பனால் நிகழ்ச்சி தோறும் பாடப்படுகிறது. தனக்காக தீக்குளிக்குமளவிற்கு தொண்டர்கள் இருப்பதை எண்ணி அவமானப்பட வேண்டும்; ஆனால் வை.கோ., தீக்குளித்தவர்களை வைத்து அனுதாப அரசியல் நடத்தினார். தன் பெயரில் பேரவை, பாசறை உருவாகுவதை கருணாநிதி மற்றும் குடும்பத்தினரால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை என்றும் வை.கோ. ஆதங்கப்படுகிறார்.

**கட்சிக்குள் தன் பின்னே ஒரு ஒளிவட்டம் சுற்றுவதற்காகத்தான் தமிழ், ஈழம், புலிகள் பற்றி சவடாலடித்தார், வை.கோ.!**

பாமர மக்களுக்கு தனது முகமும், பெயரும் தெரியாததால், தெரியும் வரை விளம்பரம் செய்வதை சகதோழர்கள், தொண்டர்கள் வேண்டுகோளுக்கிணங்கி ஏற்றுக் கொண்டதாகக் கூறுகிறார், வை.கோ. தன்னை வாழ்த்தி கோஷம் போட்ட ஒரு தொண்டனை மேடையில் அடித்ததற்கு ( இது கருணாநிதியை ஆத்திரமூட்டியதால்தான் என்பது முக்கியமானது) வை.கோ. வருத்தப்படுகிறார். தமது அணியின் தொண்டர்களின் உணர்வுகளை மதித்துதான் பொதுச் செயலாளர் பதவியை ஏற்றுக் கொண்டாராம். தன்னை நம்பியிருக்கும் தொண்டர்களுக்கு சரியான வழிகாட்ட தனது உயிரையும் கொடுப்பதாக அடிக்கடி உணர்ச்சிவசப்படுகிறார், வை.கோ.! தனக்காக தீக்குளிக்க தொண்டர்கள் முயன்றால் உண்ணாவிரதம் இருப்பதாகவும் செல்லமாக மிரட்டினார். - இவற்றையெல்லாம் பார்க்கையில் கழகங்களின் பாரம்பரியத்தில் ஒரு தலைவன் ''அந்தஸ்து'' வை.கோ-விற்கு உண்டு எனச் சான்றிதழ் வழங்கலாம்! வரலாறைப் புரட்டிபாருங்கள்; தொடக்க காலத்தில் கருணாநிதியின் பேச்சுகளும் செயல்களும் தான் இவை.

''ஊழிக்காற்று என் உடலில் புகுந்து இயக்கும் வரை என் ஒரே தலைவர் கலைஞரே'' என்று கூறி முதலில் ''கொலைப் பழி சுமத்தியது நீதியா?'' என்று மட்டுமே வை.கோ. கேட்டார். தொண்டர்களின், மாவட்டங்களின், வட்டங்களின் ஆதரவு குறிப்பிட்ட அளவு கிடைத்ததைப் பொறுத்துதான் மெல்ல அடியெடுத்து முன்னேறி கருணாநிதியை தமிழினத் துரோகி, சர்வாதிகாரி, ஊழல்பேர்வழி என்றெல்லாம் தாக்குகிறார். எனவே, தனக்கு வரவேற்பும் ஆதரவும் இந்த அள



படிப்பகம்

www.padippakam.com




விற்கு கிடைத்த துகூட, இல்லாமல் போயிருக்குமானால் நாஞ்சில் மனோகரன் விவகாரத்தில் நடந்தது போல் கருணாநிதியிடம் வை.கோ. பணிந்து போயிருப்பார்.

கருணாநிதியின் எதேச்சதிகாரத்துடன் மட்டுமே முரண்பட்டு, அவரது பிழைப்பு வாத - சந்தர்ப்பவாத நடை முறையிலோ, தி.மு.க-வின் போலியான கொள்கை, அமைப்பு முறையிலோ முரண்படாததால் கழகங்களின் அத்தனை நோய்களும் வை.கோ. அணியிலும் குடியிருக்கின்றன. பொதுக்குழு உறுப்பினர்களைப் பணத்திற்கு விலைபேசியது; எழுச்சிப் பேரணிக்கு பணம் கொடுத்து ஆட்களையும், வாகனங்களையும் திரட்டியது; எம்.ஜி.ஆர். புகழ் பாடுவது; எஸ்.எஸ். சந்திரன், ராதாரவி, மணிவண்ணன், தாணு போன்ற சினிமாக்காரர்களை மேடையில் காட்டியும் வேட்பாளராக நிறுத்தியும் ஓட்டுப் பொறுக்குவது; நாயக்கர், தேவர், நாடார், கவுண்டர் என அவரவர் சாதிக்காரர்களைத் திரட்டி - முன்னிறுத்தி அரசியல் நடத்துவது; நூற்றுக்கணக்கான கார்களில் ஆடம்பரமாக வலம்வருவது; ஆபாச - கொச்சைப் பேச்சாளர்களைக் கொண்டு கருணாநிதியையும் அவரது குடும்பத்தினரையும் அநாகரிகமாகத் தாக்கிப் பேசுவது; அடிதடி - வெட்டுக் குத்து - கொலையில் கைதேர்ந்த ரௌடிகளும் கிரிமினல்களும் கட்சிப் பொறுப்புகளில் பிரமுகர்களாக வலம் வருவது; கள்ளச்சாராயம், கஞ்சா கடத்துவது - விற்பது, விபச்சாரம் முதலான சமூக விரோத தொழில் செய்பவர்கள் முக்கியப் பிரமுகர்களாக கட்சியிலிருப்பது என குட்டி தி.மு.க-வாக அனைத்தும் நீக்கமற நிறைந்து விளங்குகிறது, வை.கோ. அணி. இவற்றிற்கு எதிரிகளால் வெட்டிக் கொல்லப்பட்ட நெல்லையைச் சேர்ந்த தமிழரசனும் ராயபுரத்தைச் சேர்ந்த ஏழுமலையும் ரௌடிகள் என்கிற ஒரு உதாரணமே போதுமானது.

எத்தனையோ மக்கள் பிரச்சினைகள் இருக்கையில் வை.கோ. கருணாநிதியை எதிர்ப்பதும் தி.மு.க-வை கைப்பற்றுவதுமே முதல் குறிக்கோள் என்கிறார். இது குத்துச் சண்டையை வேடிக்கை பார்க்கும் நிலைக்கு மக்களைத் தள்ளி அந்நியப்படுத்தி வைத்திருக்கிறது. தி.மு.க-வைக் கைப்பற்றிய பின் அத்தொண்டர்களின் துணையோடு தமிழகத்தின் தெருக்களில் சுற்றித்திரிந்து மக்களைத் திரட்டி மத்திய, மாநில ஊழல் அரசுகளைத் தூக்கி எறிவதாக வை.கோ. கூறுவது நல்ல வேடிக்கை! இதைச் சாதகமாக்கிக் கொண்டுதான் கருணாநிதி தண்ணீர் பிரச்சனை, விலைவாசி எதிர்ப்பு, ஹிந்தி எதிர்ப்பு, இட ஒதுக்கீடு போன்றவற்றிற்காக இயக்கம் எடுத்துத் தொண்டர்களின் - மக்களின் கவனத்தை கவர முயல்கிறார்.

ஓட்டுப் பொறுக்கும் இந்த கேடு கெட்ட அரசியலில் கூட தனக்கென்று ஒரு மாற்று கொள்கை, பாதை, திட்டம் எதுவுமில்லாததால்தான் வை.கோ. தனக்கு இழைக்கப்பட்ட அநீதியை மட்டுமே வைத்து அரசியல் நடத்துகிறார்; ''ஒன்றே குலம், ஒருவனே தேவன்'' என்கிற அண்ணாவின் கொள்கைதான் தனது கொள்கை என்றும் பார்ப்பன எதிர்ப்பு

**இது 'தமிழகத்து பிரபாகரன்' என வை.கோ. மேல் குருட்டு நம்பிக்கை வைத்திருக்கும் தமிழ், இன உணர்வாளர்களின் தலையில் விழுந்த இடி.**



என்பது சாதி வெறியில் சமுதாயத்தை சீரழித்துவிடும் என்றும் வை.கோ. தெளிவாகக் கூறுகிறார். கழகங்களின் இருமொழிக் கொள்கையும், மாநில சுயாட்சியும் தான் வை.கோ-வின் கொள்கை என்றாலும் தமக்கு ஆதரவளிக்கும் சில தனித்தமிழ், தனித்தமிழ்நாடு கொள்கை கொண்டவர்களுக்காகத் தெளிவாகக் கூறுவதில்லை. ஈழம், புலிகள் விசயமும் வை.கோ. விற்கு ஆட்சிக்கட்டில் வரைக்கும்தான்; கருணாநிதியைப் போலவே எந்நேரத்திலும் கைகழுவிவிட வை.கோ. தயங்கமாட்டார்.

சென்னையில் ''போர்வாள்'' பத்திரிக்கை வெளியீட்டு விழாவில் ''பார்ப்பன எதிர்ப்பு துருப்பிடித்த ஆயுதம்; தூக்கி யெறியுங்கள்'' என்று பேசிய தினமணி'' ஆசிரியர் குழுவைச் சார்ந்த சுதாங்கனுக்குப் பதிலளிக்கையில் ''பார்ப்பனீயத்தின் எலும்பை முறிக்கும்வரை அந்த ஆயுதத்தைக் கீழே போட முடியாது'' என்றார், வை.கோ. ஒரு மாதத்திற்குப் பின் ''ஜுனியர்விகடன்'' பேட்டியில் சாதி அரசியல் வளர்ந்து வருவதற்குத் தான் துணை போகும் என்றும் அண்ணாவைப் போல் பிராமண எதிர்ப்பை தாமும் கைவிடுவதாகவும் கூறியுள்ளார். இது ''பல்டியா'', இடத்திற்கு ஏற்றாற் போன்ற பேச்சா? எதுவாயிருந்தாலும் வை.கோ. வும் பிழைப்புவாதி - சந்தர்ப்பவாதி என்பதை இனங்காட்டி விடுகிறது.

''அரசியலில் நிரந்தர நண்பர்களும் இல்லை; நிரந்தர எதிரிகளும் இல்லை'', ''அரசியலில் மோதிக் கொள்வது வேறு; தனிப்பட்ட முறையில் நட்பு, உறவு கொள்வது வேறு'' என்பவை ஓட்டுப் பொறுக்கித் தலைவர்களின் அருவருப்பான கலாச்சாரம். எம்.ஜி.ஆர், சங்கர் தயாள் சர்மா, காங்கிரசுக்காரர்கள் என அனைத்துக் கட்சித் தலைவர்களுடன் தனக்கிருந்த உறவையும், மதிப்பையும் அவர்களது புகழையும் விலாவாரியாக எழுதுவதிலிருந்து வை.கோ.வும் தன்னை அக்கலாச்சார நீரோட்டத்தில் ஒருவர் என்பதை உறுதி செய்கிறார். கருணாநிதி காங்கிரசுடன் உறவு கொண்டதையும், உறவு கொள்ள முயல்வதையும் சாடும் வை.கோவும் நாளை இப்படி சோரம் போக மாட்டார் என்பதற்கு உத்திரவாதமில்லை.



படிப்பகம்

www.padippakam.com

மேலும் ''கருணாநிதியைப் போல் அரசியல் போராட்ட அனுபவமோ, இலக்கிய அறிவோ, திறமையோ வை.கோ.விற்கு இல்லை; நேற்று வந்த கற்றுக் குட்டி'' என்ற கருத்து நிலவுகிறது. கருணாநிதி பக்கம் பெருவாரியாக இருக்கும் முதிய - நடுத்தர வயதுடைய, பரம்பரை தி.மு.க.காரர்கள் இதையே பிரச்சாரம் செய்கிறார்கள். இதனால்தான் வை.கோ. தன்னை பல பழந்தலைவர்களுடன் பழகிய அனுபவசாலியாகவும் சகலமும் படித்த மேதையாகவும் எழுத்து, பேச்சு மூலம் காட்டிக் கொள்கிறார். அண்ணாவை துணைக்கு அழைத்துக் கொள்கிறார்.

பெரியாரிடம் இருந்து பிரிந்த அண்ணாதுரைக்கு தி.மு.கழகத்தைக் கட்டி வளர்த்து ஆளுங்கட்சியளவிற்கு உயர்த்துவதற்கே அவரது பெரும்பகுதி காலமும் பணியும் பயன்பட்டது. இதற்கு கொள்கை பேசவும் ஒரு அரசியல் மாற்றாக நடக்கவும் அவ்வாறு காட்டிக் கொள்ளவும் தேவையிருந்தது. இதனால் தான் அண்ணாதுரை பிழைப்புவாதியாக அவ்வளவாக அம்பலப்பட்டு போகவில்லை. பின்னர் வந்த கருணாநிதிக்கு தி.மு.க-வை தொடர்ந்து ஆளுங்கட்சியாகவே தக்க வைத்துக் கொள்ள வேண்டிய பணியும், போட்டியும் இருந்ததால் எளிதாக இந்த அளவிற்கு கருணாநிதியின் பிழைப்புவாதம் சந்திக்கு வந்தது. மற்றபடி கழகங்களின் இத்தகைய கேடுகெட்ட அரசியலுக்கு அஸ்திவாரம் போட்டு அடியெடுத்துக் கொடுத்தவரே அண்ணாதுரைதான். கொள்கைக்கும், தூய்மையான அரசியலுக்கும் அண்ணாதுரையை முன்னிறுத்துவதால் மட்டுமே கருணாநிதிக்கு மாற்றாகிவிட முடியுமா? அண்ணாதுரையின் நாமம் எம்.ஜி.ஆருக்கும், ஜெயலலிதாவுக்கும் ஒருவேளை வை.கோ.வுக்கும் கூட வாழ்வளிக்கலாம்; தமிழ், இன உணர்வு தொண்டர்களுக்கோ, தமிழக மக்களுக்கோ மீண்டும் கழகங்களின் அதே பாதையில் ஏமாற்றமும் விரக்தியுமே மிஞ்சும்.

தி.மு.க. இளைஞர்கள் மட்டுமின்றி பிற கட்சிகள், கட்சி சார்பற்ற இளைஞர்கள் உங்கள் மீது ஒரு எதிர்பார்ப்புடன் வருகிறார்களே என்று கேட்ட கேள்விக்கு ''நீதியின் போர்வாள்'' பத்திரிக்கையில் வை.கோ. கொடுக்கும் பதில் இது. ''ஏமாற்றம், விரக்தி, வேதனைப் பிடியில் சிக்கியுள்ள இளைஞர் சமுதாயம் மாறுதலுக்காக ஏங்குகிறது. இவர்கள் ஜனநாயக மார்க்கத்தில் மீட்சிக்கு வழியில்லை என்று திடமான முடிவுக்கு வருவார்களேயானால் ஆயுதக் கலாச்சாரத்தை நாடுவார்கள். தீவிரவாதம் பக்கம் செல்லாமலேயே தமிழகத்தின் உரிமைகளைக் காக்க அண்ணா வழியில் இளைஞர்களை அணி வகுக்க முடியும் என்ற நம்பிக்கை உண்டு''

கழகங்களின் ஆட்சியை மீட்டெடுப்பதற்கு ஆளும் வர்க்கங்களின் பிரதிநிதியாக இதை விட வேறு எப்படி முரசறிவிக்க முடியும்? இளைஞர்காள்! இந்த கேடு கெட்ட, போலி ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் வை.கோ. பின்னால் தான் உங்கள் பயணமா? ஒரு மாற்று சமூக அமைப்பை - புதிய ஜனநாயக அரசை ஆயுதப் புரட்சியின் மூலமே சாதிக்க முடியும் என்று கூறுகிற புரட்சியாளர்களுக்கு எதிரான அறிவிப்பு மட்டுமல்ல இது; தமிழினத்திற்காக, மொழிக்காக, ஈழத்திற்காக ஆயுதப் போராட்டத்தையும் முன்னெடுத்து தனது இன்னுயிரையும் கொடுக்கும் தமிழகத்து பிரபாகரன் என வை.கோ. மேல் குருட்டு நம்பிக்கை வைத்துக் கொண்டிருக்கிற தமிழ், இன உணர்வாளர்களின் தலையில் விழுந்த இடியும் கூட.

● ராசு.




சுவரெழுத்தில் 'கொள்கை' முழக்கமில்லை; தனிநபர் புகழ் வாடை!

### தலையங்கம் தொடர்ச்சி

ஏழுமலையும் எப்படி வீழ்ந்தார் என்பதற்கு காரணம் தேடவும் எப்படி வாழ்ந்தார் என்பதை பார்க்கவும் வேண்டும். லாரி டிரெயிலர்கள், பிராந்திக் கடைகள், வட்டிக் கடைகள் என்று பெரும் பணக்காரரான ஏழுமலை, பல கிரிமினல் குற்றங்கள் செய்துதான் அந்நிலைக்கு உயர்ந்தார். வட்டார கிரிமினல் கும்பல் தலைவராக - தாதாவாக வாழ்ந்து, அந்த வகையில் எதிரிகள் பலரைக் கொண்டிருந்தார். சந்தேகிக்கப்படும் மந்திரி உட்பட வட்டார கிரிமினல் கும்பல்களுடன் ஏழுமலை கொலைப்பகை கொண்டிருந்தார் என்பதற்கான ஆதாரங்களும் உள்ளன. ஆகவே, பம்பாய், கல்கத்தா நகரங்களில் இருந்து சென்னைக்கு அறிமுகமாகி இருக்கும் கிரிமினல் கும்பல் சண்டை (கேங் வார்)களில் ஒன்றாக ஏழுமலை கொலை நடந்தது என்று கூறப்படுவது நம்பக் கூடியதே. நாடு முழுவதும், குறிப்பாக தமிழ்நாட்டில் வளரும் போக்கு, தொழில்முறை கிரிமினல்கள் அரசியலில் புகுந்து தலைவர்களாகி, பாதுகாப்பும் அதிகாரமும் தேடிக் கொள்வதாகும். அந்த வகையில் எம்.ஜி.ஆர்., கருணாநிதியிடம் முயன்று, போட்டி காரணமாகவே நிராகரிக்கப்பட்ட ஏழுமலையைத் தனது கட்சித் தலைவர்களில் ஒருவராக்கினார், வை.கோ.

கருணாநிதி அணியினர் கிரிமினல் கொலைக் குற்றங்களுக்கு அப்பாற்பட்டவர்கள், நேர்மையானவர்கள் என்கிற பரிவின் காரணமாக இதை நாம் எழுதவில்லை; இத்தகைய சம்பவங்களின்போது, அரசியல் எதிரிகள் மீது சந்தேகம் எழுவதும் இயல்புதான். ஆனால் தகுந்த விசாரணையும் தக்க ஆதாரமும் இல்லாமலேயே கொலைப் பழி சுமத்துவதன் விளைவுகளை நன்கு அறிந்தே வை.கோ. செய்கிறார்; அதுவும் புதிய ஆதாரங்கள் வேறுவிதமாக இருப்பதை அறிந்தே இப்படிக் கொலைப் பழி சுமத்துகிறார். ராஜீவ் கொலைக்கு அப்போது தி.மு.க. மீதும், தன் மீதுமே கொலைப்பழி சுமத்தி காங்கிரசு - ஜெயா கட்சி குண்டர்கள் வெறியாட்டம் போட்டதையும், அரசியல் ஆதாயம் தேடியதையும் கண்டவர் தான், வை.கோ. தன் மீது கருணாநிதி கொலைப்பழி சுமத்துவதாகக் கூறி துடிதுடித்து கதறி அழுது, நீதி கேட்டுப் பயணம் போய் தனிக் கட்சி கண்டவர் தான், வை.கோ. ஆனால் தனது முப்பெரும் கொள்கைகளில் முதலாவதாக ''அரசியலில் நேர்மை'' என்று பிரகடனம் செய்த வை.கோ. தான் கொஞ்சமும் நேர்மையற்ற முறையில் ஜெயாவுடன் அயோக்கிய அரசியல் கூட்டுச் சேர்ந்து கொலைப் பழி சுமத்தி, அனுதாப ஆதாயம் தேட முயற்சிக்கிறார்.●



படிப்பகம்

www.padippakam.com

## 'காட்'டாட்சிக்கு வக்காலத்து

**நாட்டை மறுகாலனியாக்கும் "காட்" ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ள துரோகி ராவ் கும்பல், இப்போது அதை நியாயப்படுத்தி, பொய்களையும் பிரமைகளையும் அவிழ்த்துவிட்டு மக்களை ஏய்க்கவும் கிளம்பிவிட்டது.**

**"காட்" ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதால், இந்தியாவுக்குக் கிடைக்கக் கூடிய ஆதாயம் என்ன?**

இது, சாதாரணமாக எல்லா மக்களும் கேட்கின்ற கேள்வி. இதற்கு இந்திய அரசோ, அமைச்சர்களோ இதுவரை நேரடியாக எந்த பதிலும் கூறவில்லை. அவர்கள் சொல்வதெல்லாம் - அல்லது வாசிப்பதெல்லாம் உலக வங்கி அறிக்கையில் என்ன சொல்லப்பட்டிருக்கிறதோ, அதைத்தான்!

### "காட்"டில் சேர்வதால் கடுகளவுதான் வளர்ச்சி

உலக வங்கியின் அறிக்கை என்ன சொல்கிறது? "காட்" உடன்பாடு காரணமாக, வளர்ச்சி அடைந்த நாடுகளில் இப்போதுள்ள இறக்குமதிக் கட்டுப்பாடுகளும் தீர்வைகளும் கணிசமாகக் குறைக்கப்படும். இதனால் சர்வதேச வர்த்தகம் 6 லட்சம் கோடி ரூபாய் அளவுக்கு அதிகரிக்கும். இதன் மூலம் சர்வதேச வர்த்தகத்தில் இந்தியாவின் பங்கு இருமடங்கு உயரும்" என்கிறது உலக வங்கியின் அறிக்கை.

கடந்த ஜனவரியில் இந்திய முதலாளித்துவப் பத்திரிகைகள் இதை ஊதிப் பெருக்கத் தொடங்கின. "எக்னாமிக் டைம்ஸ்" நாளேடு 6 லட்சத்து 40 ஆயிரம் கோடி ரூபாயாக உயரும் என்று மதிப்பீடு செய்தது. "இந்துஸ்தான் டைம்ஸ்" நாளேடும் "டைம்ஸ் ஆப் இந்தியா" நாளேடும் 8 லட்சத்து 25 ஆயிரம் கோடியாக அதிகரிக்கும் என்று புள்ளி விபரக் கணக்கு காட்டியது. அதன் பிறகு "இந்தியா டுடே" இதழ் 10 லட்சம் கோடியையும் மிஞ்சிவிடும் என்றும், இந்தியாவுக்குக் கிடைக்கக் கூடிய ஆதாயங்களையும் பட்டியலிட்டது. "காட்" உடன்பாட்டினால் இந்தியா சொர்க்கபுரியாக மாறிவிடும் என்பதாக பத்திரிகைகள் பிரமையூட்டின.

எல்லாம் சரி! இன்றைய நிலையில் சர்வதேச வர்த்தகத்தில் இந்தியாவின் பங்கு எவ்வளவு தெரியுமா? வெறும் 0.5 சதவீதம் தான்! "காட்" உடன்பாட்டினால் இரு மடங்கு வர்த்தகம் பெருகினாலும், இந்தியாவின் பங்கு ஒரு சதவீதமாகத் தான் இருக்கும்! அதாவது இந்தியாவின் வர்த்தகம் ஏறத்தாழ 60,000 கோடி ரூபாயாக இருக்கும்.

ஆனால் 1993-94-ம் நிதியாண்டிலேயே இந்தியாவின் ஏற்றுமதி 20 சதவீதம் அதிகரித்து, 60 ஆயிரம் கோடியை எட்டிவிட்டது. இதைக் கணக்கில் கொண்டு, "காட்" உடன்பாட்டினால் அடுத்த எட்டாண்டுகளில் இந்தியாவின் ஏற்றுமதி 25% உயரும் என்ற கணிப்பைக் கொண்டு பார்த்தால் ஏற்றுமதி 75,000 கோடியாக உயரும். அதாவது, ஆண்டுக்கு 2.5% அளவுக்குத்தான் ஏற்றுமதி அதிகரிக்கும்.

முதலாளித்துவப் பொருளாதார நிபுணர்களை மட்டுமல்ல; பட்டிக்காட்டிலுள்ள பாமர விவசாயியையும் இந்தப் புதிர் குழப்புகிறது. "அய்யா "காட்" உடன்பாட்டில் சேர்வதற்கு முன்பே கடந்த நிதியாண்டில் இந்தியாவின் ஏற்றுமதி 20% உயர்ந்துள்ளது. 'காட்' அமைப்பில் சேர்வதால் 2.5% தான் உயரும் என்றால் அது நட்டம் தானே?" என்று பாமர மக்களே கேட்கிறார்கள். இதற்கு அரசோ "காட்" டை நியாயப்படுத்தும் பத்திரிகைகளோ இன்று வரை பதில் தரவில்லை.

### நாடுகளுக்கிடையிலான வர்த்தகமா?

இது ஒரு புறமிருக்கட்டும். "காட்" எனப்படுவது உலகின் பல நாடுகளுக்கிடையிலான சமச்சீரான வர்த்தக உடன்பாடு என்று கூறப்படுவதே மோசடியானதாகும். உண்மையில் உலகின் 50% வர்த்தகம் தேசங்கடந்த தொழிற்கழகங்களுக்கிடையே நடைபெறுகிறதே தவிர, நாடுகளுக்கிடையே அல்ல. உலகின் மூன்றிலிரு பங்கு வர்த்தகத்தை தேசங்கடந்த தொழிற் கழகங்களே கட்டுப்படுத்துகின்றன. 1989-ம் ஆண்டின் வர்த்தக விபரங்களின் படி 20 பெரிய ஏகபோக நிறுவனங்களே, உலகின் 94% இரசாயன உரம் - பூச்சி மருந்து வர்த்தகத்தைக் கட்டுப்படுத்தியுள்ளன. இவற்றில் 9 நிறுவனங்கள் ஐரோப்பிய சமூகத்தையும், 6 நிறுவனங்கள் அமெரிக்காவையும் 5 நிறுவனங்கள் ஜப்பானையும் சேர்ந்தவை.

இந்நிலையில் "காட்" உடன்பாட்டினால் இந்தியாவின் வர்த்தகம் பத்து மடங்கு பெருகினால் கூட அதனால் ஆதாயம் ஏதுமில்லை. தேசங்கடந்த, பன்னாட்டு ஏகபோக நிறுவனங்களின் கொள்ளையையும் ஆதிக்கத்தையும் தடுக்கவும் வழியில்லை.

### மானியம் பற்றிய மாய்மாலம்

"காட்" ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்ததும் விவசாயத் துறைக்கான மானியம் இப்போது உள்ள அளவிலேயே தொடர்ந்து நீடிக்க வாய்ப்பே கிடையாது. ஆனால், விவசாயத் துறைக்கான மானியத்தைக் குறைக்குமாறு "காட்" விதிகள் கூறவேயில்லை என்று மேம்போக்கான விளக்கத்தை அளித்து அரசும், பத்திரிகைகளும் மக்களை ஏய்த்து வருகின்றன. உண்மையில் "காட்" விதிகளின் சாராம்சம் என்னவென்றால், விவசாய மானியம் இப்போதைய அளவைவிட இனி எப்போதும் தாண்டக் கூடாது என்பது தான். "காட்" உடன்பாட்டினால், இந்திய விவசாயிகள் பயன்படுத்தும் அனைத்து இடு பொருட்களின் விலையும் சர்வதேச விலைக்குச் சமமாக உயரும் போது, என்ன செய்வது என்பதுதான் கேள்வி. உரம், விதை, பூச்சி மருந்துகளின் விலை உயரும் போது விவசாயத்திற்கான மானியத்தை அதிகரிக்கா விட்டால் விவசாயிகளால் பயிர் வைக்கவே முடியாது. ஆனால் "காட்" விதிகளின் படி மானியத்தின் அளவை உயர்த்தக் கூடாது. விவசாய இடு பொருட்களின் விலையும் உயர்ந்து, மானியமும் இல்லாத நிலையில் விவசாயிகள் பிழைக்கத் தான் முடியுமா? உற்பத்தி பெருகத்தான் செய்யுமா? விளைபொருட்களை ஏற்றுமதி செய்யத்தான் முடியுமா? இதிலே வேடிக்கை என்னவென்றால், ஏற்றுமதி வளர்ச்சியில் இந்திய அரசு மலை போல நம்பியிருப்பது விவசாயத் துறையைத்தான்!

"காட்" உடன்பாட்டின் மூலம் அமெரிக்க, மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கு ஏராளமான விவசாய உற்பத்திப் பொருட்களை ஏற்றுமதி செய்ய கதவுகள் திறந்து விடப்பட்டுள்ளதாக இந்திய அரசு கூறுகிறது. உண்மையில் அவ்வாறு ஏற்றுமதி செய்வதற்கான சாத்தியக் கூறுகளே கிடையாது. ஏனெனில், இதற்கு மேல் வளர்ச்சி இல்லை என்கிற அளவுக்குச் சென்றுவிட்ட இந்த ஏகாதிபத்திய நாடுகளில், பொருளாதார மந்த நிலையும் நெருக்கடிகளும் முற்றி வருகிறது. இந்நிலையில் "வெளிநாட்டுப் பொருட்கள் இங்கே குவிக்கப்படுவதால் தான் உள்நாட்டு உற்பத்தி பாதிக்கப்பட்டு வேலையிழப்பும் நெருக்கடியும் ஏற்படுகிறது" என்று கூறி இந்நாடுகளின் இறக்குமதியைக் குறைத்து விடுவதற்கான வாய்ப்புகளே அதிகமாக உள்ளன. "காட்" ஒப்பந்தப்படி எந்த நாடும் தனது சந்தையின்



படிப்பகம்

www.padippakam.com

கதவுகளை மூடக்கூடாது என்றாலும், ஏகாதிபத்திய நாடுகள் வேறு காரணங்களைக் காட்டி, ஏழை நாடுகளிடமிருந்து இறக்குமதியைக் குறைத்து விட முடியும்.


### தடுக்கவும் முடியாது; தண்டிக்கவும் முடியாது

உண்மையில், அமெரிக்கா அதற்கான ஏற்பாடுகளில் ஏற்கனவே இறங்கிவிட்டது. மிகப் பெரிய பொருளாதார வல்லரசான ஜப்பானுக்கே சூப்பர் 301 விதிகளின் கீழ் வர்த்தகத் தடை விதித்துள்ள அமெரிக்காவுக்கு, இந்தியா போன்ற ஏழைநாடுகளை மிரட்டி ஓரங்கட்டுவதென்பது சிரமமானதல்ல. ''காட்'' ஒப்பந்தம் கையெழுத்தாவதற்கு சில தினங்களுக்கு முன்பாக, ''இந்தியத் துணி உற்பத்தியாளர்கள் தமது தொழிலாளர்களுக்கு மிகவும் குறைந்த கூலி கொடுக்கிறார்கள்; அதிக நேரம் கட்டாய வேலை வாங்குகிறார்கள்; ஆலைகளில் மனித உயிருக்குப் போதிய பாதுகாப்பில்லை'' என்று தொழிலாளர் நலன், மனித உரிமை போன்றவற்றை ஆயுதங்களாகக் கொண்டு இந்தியத் துணிகள் தனது சந்தைக்குள் நுழைய விடாமல் அமெரிக்கா தடுக்க முயன்றது. உலகை மேலாதிக்கம் செலுத்திவரும் அமெரிக்கா, உழைக்கும் மக்களின் பாதுகாவலனாக காட்டிக் கொள்வது ஆச்சரியமானதாக இருக்கலாம். ஆனால் நடப்பது வர்த்தக யுத்தம்; யுத்தத்தில் எந்த அணுகு முறையும் தவறானதல்ல என்பதே அதன் கோட்பாடு.

எனவே, ''காட்'' விதிகள் உலக அளவில் நடைமுறைக்கு வந்துவிட்டால். அமெரிக்கா போன்ற வல்லரசு நாடுகள், இப்போது செயல்படுத்தி வரும் தங்களது வர்த்தகச் சட்டங்களைப் பெட்டியில் வைத்துப் பூட்டிவிடும் என்று எதிர்பார்ப்பது முட்டாள்தனமாகும். ஏனெனில் ஏதாவது ஒரு ''காட்'' விதி தமக்குச் சாதகமாக இல்லை என்று எந்த வல்லரசு நாடும் அதை மீற முடியும். ஏழை நாடுகள் இதைக் கண்டிக்கலாம்; ஆனால் தடுத்துவிட முடியாது.

### மேலை நாடுகளில் மானியம்; ஏழை நாடுகளில் சூனியம்

''காட்'' ஒப்பந்தப்படி ஏகாதிபத்திய நாடுகளில் விவசாயத்திற்கான மானியம் தற்போதுள்ள அளவை விட குறைக்கப்படும். இதனால் அந்நாட்டு விவசாய உற்பத்திப் பொருட்களின் விலையைவிட ஏழை நாட்டுப் பொருட்கள் விலை குறைவாக இருப்பதால், ஏற்றுமதி பெருகும் என்று வர்த்தக அமைச்சர் பிரணாப் முகர்ஜி ஓயாமல் பிரச்சாரம் செய்து வருகிறார். ஆனால் ''காட்'' விதிகள் நேரடி மானியத்தைக் குறைக்க வேண்டும் என்று தான் கூறுகின்றன. இந்த ஓட்டையைச் சாதகமாக்கிக் கொண்டு, ஏகாதிபத்திய நாடுகள் மறைமுக வழிகளில் - வடிவங்களில் மாற்றங்களைச் செய்து அதே அளவிலான மானியங்களை அளிக்கத் தீர்மானித்துள்ளன.




உற்பத்தியின் அளவைச் சாராத மானியம், சுற்றுச் சூழல் பாதுகாப்பு மானியம், பின் தங்கிய பகுதிகளுக்கான மானியம் என மூன்று வழிகளில் ஏகாதிபத்திய நாடுகளில் விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்படுகிறது. இத்தகைய மறைமுக மானியங்களின் மூலம் மேலை நாட்டு - குறிப்பாக ஐரோப்பிய சமூக நாடுகளின் விவசாயிகள் பாதுகாக்கப்படுகின்றனர். உதாரணமாக, 1995 - 96 ல் பருப்பு பயிரிட ஒரு ஹெக்டேருக்கு ரூ. 8,000, எண்ணெய் வித்துக்களுக்கு ரூ. 15,000 என ஐரோப்பிய சமூகத்தின் விவசாயிகள் மானியம் பெறுவார்கள். இதனால் அவர்கள் சர்வதேசச் சந்தையில் குறைந்த விலைக்கு விற்பது எளிதாகிவிடும். ஏழைநாட்டு விவசாயிகளுக்குப் பெரும் அச்சுறுத்தலாகி விடும். ஏழை நாடுகள் தமது விவசாயிகளுக்கு நேரடி மானியம் கொடுக்கவே தத்தளிக்கும் போது, இப்படி மறைமுக வழிகளில் மானியம் கொடுக்க அறவே சாத்தியமில்லை. ஏழை நாடுகள் விவசாய உற்பத்திப் பொருட்களை ஏற்றுமதி செய்வது ஒருபுறம் கிடக்கட்டும்; உள்நாட்டுச் சந்தையைக் கூட அவர்களால் பாதுகாக்கவே முடியாது.

''காட்'' உடன்பாட்டினால் தொழில் நுட்பம் - குறிப்பாக உயிரியல், தாவரவியல் தொழில் நுட்பம் வளர்ச்சி பெறும்; இதனால் நாட்டில் உற்பத்தி பெருகி ஏற்றுமதி பெருகும்; விலைவாசிகள் குறையும் என்பதாக வானொலி, தொலைக்காட்சிகளில் பிரச்சாரம் செய்யப்பட்டு வருகிறது. இது அப்பட்டமான பொய் என்பதைத் தவிர வேறொன்றுமில்லை. ஏனெனில் ஏகாதிபத்திய நாடுகள் தமது தொழில் நுட்பத்துக்கு வடிவுரிமை பெற்றுள்ளன. 'ராயல்டி' எனப்படும் சேவைத் தொகையைச் செலுத்தினால்தான் இந்தியா அவற்றைப் பெற முடியும்.

தொழில் நுட்பத்தை இலவசமாகப் பரிமாறிக் கொள்ள வேண்டும் என்று எந்த ''காட்'' விதியும் கூறவில்லை. மேலும், நாட்டின் 80% விவசாயம் இன்னமும் புராதன முறையில் நடைபெறும் போது, மேலை நாட்டு நவீன விவசாய் முறைகளை இங்கே இறங்குமதி செய்து உற்பத்தியைப் பெருக்க ஒரு போதும் சாத்தியமேயில்லை. பசுமைப் புரட்சித் திட்டத்தைப் போல, நாட்டின் ஒரு சில பகுதிகளில் நவீன வகை விவசாய உற்பத்தி நடந்தாலும் அது ஏகாதிபத்தியங்களின் தேவைக்கான ஏற்றுமதி அடிப்படையிலான உற்பத்தியாகவே அமையும். நாட்டின் சுய சார்பான வளர்ச்சிக்கு அது ஒரு போதும் பயன்படாது.

### இந்தியாவும் சீனாவும் இணையான பொருளாதாரமா?

இப்படி நாலா பக்கமும் கேள்விகளால் தாக்கப்பட்டு, அம்பலப்பட்டு தனிமைப்பட்டுள்ள ராவ் அரசு, சீனாவைக் காட்டி தப்பித்துக் கொள்ளப் பார்க்கிறது. சீனா, மிகுந்த ஆர்வத்துடன் ''காட்'' உடன்பாட்டை ஏற்கும் போது, இந்தியா மட்டும் ஏன் ஒதுங்கி நிற்க வேண்டும் என்று கேட்கிறது. ஆனால் ஏழை நாடான இந்தியாவின் திவாலான பொருளாதாரமும் சீனாவின் பொருளாதாரமும் ஒன்றானதல்ல; அன்னிய ஏகாதிபத்தியங்களுக்குக் கதவைத் திறந்துவிட்டுள்ள போதிலும் சீனாவின் பொருளாதாரம்



படிப்பகம்

www.padippakam.com

# எதிர்க்கட்சிகளின் சமரசம்

"நாடு அடகு வைக்கப்பட்டுவிட்டது; ஏகாதிபத்தியங்களுக்குத் தாரை வார்க்கப்பட்டுவிட்டது; நாட்டின் இறையாண்மை பறிபோய் விட்டது" என்று "காட்" உடன்பாட்டை எதிர்த்து வீரதீர சவடால் அடித்த எதிர்க்கட்சிகள், தனித்தனியே பேரணி, பொதுக் கூட்டம், கருப்புக் கொடி, கடையடைப்பு என அடையாள எதிர்ப்பு தெரிவித்ததற்கு மேல் வேறொன்றும் செய்யவில்லை. சபாநாயகரின் தனியறையிலும், அமைச்சரவைக் கூட்டுக் கமிட்டிகளிலும் காங்கிரசு துரோகிகளுடன் ரகசிய சமரச பேரம் நடத்தி, நாடாளுமன்றத்தில் கூச்சல், அமளி, வெளி நடப்பு முதலானவற்றோடு அடங்கிப் போய்விட்டன.

முன்பு போபர்ஸ் பீரங்கி ஊழல் அம்பலமான போது மிருகபலமிக்க ராஜீவ் கும்பலின் கண்ணில் விரலை விட்டு ஆட்டிய எதிர்க்கட்சிகள், தற்போதைய நாடாளுமன்ற பலத்தைக் கொண்டு துரோகி ராவ் அரசை ஸ்தம்பிக்கச் செய்ய முடியும். நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கே "காட்" விதிகள் என்னவென்று தெரிவிக்காமல், ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட ராவ் அரசை எதிர்த்து எதிர்க்கட்சி எம்.பி.க்கள் ஒட்டு மொத்தமாகப் பதவி விலகி, நிர்ப்பந்திக்க முடியும்.

ஆனால் எதிர்க்கட்சிகளிடம் அத்தகைய திட்டமோ, கொள்கையோ கிடையாது. இவ்வாண்டில் 10 மாநிலங்களில் சட்டசபைத் தேர்தல் நடைபெற உள்ளதால், காங்கிரசு எதிர்ப்புக்கான முக்கிய துருப்புச் சீட்டாக தேர்தல் வெற்றிக்குப் பயன்படும் என்பதாலேயே எதிர்க்கட்சிகள் "காட்" விவகாரத்தைக் கையில் எடுத்துள்ளன. உழைக்கும் மக்கள் விழிப்புடனிருந்து இச்சந்தர்ப்பவாதிகளைத் தோலுரித்து, "காட்" எதிர்ப்புப் போராட்டத்தை முன்னேடுத்துச் செல்ல வேண்டியுள்ளது.

இன்னமும் வலுவான நிலையில்தான் உள்ளது. உலக வங்கியின் அறிக்கைப் படி, இன்னும் எட்டு ஆண்டுகளில் இந்தியாவின் ஏற்றுமதி 75,000 கோடியாக உயரும் போது, சீனாவின் ஏற்றுமதி இதைவிட ஏழு மடங்கு அதிகமாக உயரும். மேலும் "காட்" உடன்பாட்டில் கையெழுத்திடுவதால், "அதிகபட்ச வர்த்தக சலுகைக்குரிய நாடு" (MFN) என்ற ஏகாதிபத்தியங்களின் சலுகையும் சாதகமான நிலைமையும் சீனாவுக்குக் கிடைக்க உள்ளது. மேலும், சீனா, வலுவான பொருளாதாரத்தைக் கொண்டிருப்பதால் அமெரிக்காவைப் போல தனக்குச் சாதகமில்லாத "காட்" விதிகளை உதாசீனம் செய்துவிட்டு தனது சொந்த வர்த்தகச் சட்டங்களைப் பின்பற்றவும் முடியும்.

ஆனால் இந்தியாவின் நிலை வேறானது. சீனாவைப் போன்று இந்தியப் பொருளாதாரம் வலுவானதோ, ஏகாதிபத்திய நிர்ப்பந்தங்களை எதிர்த்து நின்று சமாளிக்கும் அளவுக்கு தேசியப் பொருளாதார ஆற்றலோ, அரசியல் உறுதிப்பாடோ இந்தியாவிடம் கிடையாது.

### பத்திரிகைகள் பரப்பும் பித்தலாட்டப் பிரமைகள்

"உலகின் 125 நாடுகள் கையெழுத்திடும் போது, நாம் மட்டும் "காட்" உடன்பாட்டை எதிர்த்து நிற்க முடியாது; தனிமைப்பட்டு போய் விடுவோம்; மாறிய உலக சூழ்நிலையில் நாம் பெரிதாக சிந்திக்க வேண்டும்; இன்னமும் கிணற்றுத் தவளையாக இருக்க முடியாது" என்று அரசும், 'இந்தியா டுடே' போன்ற பத்திரிகைகளும் பிரமையும் பீதியும் ஊட்டுகின்றன.

உலகின் பெரும்பாலான நாடுகள் கையெழுத்திடுவதாலேயே காட் ஒப்பந்தம் சரியானதாக, நியாயமானதாகி விடாது. அதன் விதிகள் என்னவென்று நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கே கூடத் தெரியாமல் மூடி மறைத்துவிட்டு குருட்டுத்தனமாக "காட்"டில் இணைப்பது எந்த வகையில் நியாயமாகும்? இந்தியாவின் பொருளாதாரத் தேவைகள் என்ன, வளர்ச்சிக்கான வழி முறைகள் என்ன என்று சுயமாகத் திட்டமிடுவதையே "காட்" ஒப்பந்தம் பறித்துக் கொள்ளும்போது கண்ணை மூடிக் கொண்டு கையெழுத்திடுவது துரோகத்தனமின்றி வேறென்ன? காட் உடன்பாட்டை ஆதரிக்காவிட்டால் தனிமைப் பட்டுப் போய் விடுவோம் என்றால், ஏழை நாடுகள் மட்டுமின்றி ஏகாதிபத்திய நாடுகளிலும் உழைக்கும் மக்கள் "காட்"டை எதிர்த்துப் போராடுவது ஏன்?

இதற்கு அரசோ, பத்திரிகைகளோ இன்று வரை பதிலளிக்கவில்லை. மக்கள் விரோத "காட்" உடன்பாட்டினால் ஏற்படப் போகும் கோரமான விளைவுகளையும், நாடெங்கும் "காட்" எதிர்ப்பு இயக்கங்கள் பெருகி வருவதையும் திட்டமிட்டே மூடி மறைத்து வருகின்றன. நான்கு முன்னாள் நீதிபதிகள், நாடாளுமன்றத்தின் 250 உறுப்பினர்கள், 3 மாநில அரசுகள், பல்வேறு விஞ்ஞான ஆராய்ச்சித் துறை தலைவர்கள் உள்ளிட்டு நாடும் மக்களும் "காட்" உடன்பாட்டுக்கு எதிராக நிற்பதைப் பற்றி அவை வாயே திறப்பதில்லை. இந்திய அதிகார வர்க்கத் தரகர்களில் சிலர், நாட்டை மறுகாலனியாக்கும் "காட்" உடன்பாட்டில் இந்தியாவைக் கையெழுத்திட வைப்பதற்காக நீண்ட காலமாகவே உள்ளிருந்தே சதி வேலைகளைச் செய்துள்ளனர். அன்வருல் ஹோடா என்று வர்த்தகத் துறை உயரதிகாரி இப்படி "காட்"டுக்கு விசுவாசமாக சேவை செய்ததன் மூலம் இப்போது "காட்" அமைப்பின் செயலக உறுப்பினராக உயர் பதவியை அடைந்துள்ளார். நாட்டை விற்கத் துணிந்துவிட்ட இத்தகைய துரோகிகளைப் பற்றி அறிந்திருந்தும், முதலாளித்துவப் பத்திரிகைகள் வாயே திறப்பதில்லை.

'காட்'டின் உதவி இயக்குனர் அன்வருல் ஹோடா; ஏகாதிபத்திய விசுவாச நாய்.



மிகப் பெரிய வல்லரசான ஜப்பானில் பெருகி வரும் போராட்டங்களையடுத்து, "காட்" உடன்பாட்டில் கையெழுத்திட்டதற்காக அந்நாட்டுப் பிரதமரே பகிரங்கமாக மன்னிப்புக் கேட்டார். தென் கொரியாவில் பிரதமரும் பெரும்பான்மை அமைச்சர்களும் பதவி விலகி மக்களிடம் பகிரங்க மன்னிப்புக் கோரினர். ஆனால் இந்தியாவில், நாட்டை விற்ற காங்கிரசுத் துரோகிகள், வெட்கமின்றி "காட்" உடன்பாட்டை நியாயப்படுத்தி வருகின்றனர். பத்திரிகைகளோ, இத்துரோகிகளை மன்னித்து, காட் பற்றிய பொய்யை விதைத்து மக்களை ஏய்த்து வருகின்றன. இந்தியா மறுகாலனியாக்கப் படுவதை எதிர்த்துப் போராட்டத்தில் இறங்கியுள்ள நாட்டு மக்கள் இத்தகைய திசை திருப்பல்களையும் பொய்கள் - மாயைகளையும் நம்பி ஏமாந்து விட முடியாது. நாட்டைக் காட்டிக் கொடுத்துவிட்ட எட்டப்பர்களின் மாய்மாலங்களை விழிப்புடனிருந்து முறியடித்து, "காட்" எதிர்ப்புப் போராட்டத்தை வீச்சுடன் முன்னெடுத்துச் செல்ல வேண்டிய தருணமிது.

● பாலன்



படிப்பகம்

www.padippakam.com



# சிவந்த கண்கள் கவனிக்கட்டும்

★ தேசிய பஞ்சாலைக் கழகம் (NTC) தான் நடத்திவரும் பஞ்சாலைகளை மூடுவதற்குப் புதிய வழிவகை ஒன்றைக் கடைப்பிடித்து வருகிறது. நீண்ட காலமாக மின் கட்டணங்களைக் கட்டாமல் இழுத்தடித்து, பின் மின் இணைப்பையே துண்டிக்கச் செய்வதுதான் அப்புதிய உத்தி. இதன் காரணமாக, பம்பாயில் மட்டும் 11 பஞ்சாலைகள் பாதிக்கப்பட்டு, 20,000 தொழிலாளர்கள் வீதியில் தள்ளப்பட்டுள்ளனர். மேலும், இப்பஞ்சாலைகளில் இயங்கிவரும் காங்கிரசு கட்சி சார்பு ஆர்.எம்.எம்.எஸ். தொழிற்சங்க தலைமையை மாஃபியாக்கள் கைப்பற்றியிருப்பதோடு, இக்கும்பலைக் கொண்டே தொழிலாளர்களை வேலையில் இருந்து விலகச் சொல்லி காங்கிரசு அரசும் பஞ்சாலை நிர்வாகமும் மிரட்டியும் வருகின்றன

★ வங்காள தேசத்தைச் சேர்ந்த அப்துல் ரஷீத் ''கிராம முன்னேற்ற நண்பர்கள் சங்கம்'' எனும் அமைப்பைச் சேர்ந்த சமூக சேவகர். இவர் முஸ்லிம் மதவாதிகளின் மிரட்டல்களுக்கும் கட்டளைகளுக்கும் அஞ்சாது தொடர்ச்சியாக கிராமப்புறங்களில் உள்ள படிப்பறிவற்ற ஏழை முஸ்லீம் பெண்களுக்கு கல்வி கற்பித்து வந்துள்ளார்; அப்பெண்கள் பர்தா அணியத் தேவையில்லை என்றும் எடுத்துக் கூறி வந்துள்ளார். இதனால் ஆத்திரமாகிப் போன மதவாதிகள், பொது இடத்தில் ரஷீதை நிற்க வைத்து செருப்பால் அடித்தும், அவரது தந்தையைக் கொண்டே தலைமுடியை மழிக்கச் செய்து தண்டித்தும் அவமானப்படுத்தியதோடு, அபராதமும் விதித்துள்ளனர்.

★ சமீபத்தில் பீகாரில் வி.இ.ப. நடத்திய ஊர்வலத்திற்கு, பிணம் எரிக்கும் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த சஞ்ஜித் சௌத்ரி என்பவரைத் தலைமையேற்கச் செய்தது. தங்களை சாதி பாராட்டாதவர்களாகக் காட்டும் வண்ணம், அன்று அத்தாழ்த்தப்பட்டவர் வீட்டில் சாதுக்கள் உணவருந்துவார்கள் என்றும் அறிவித்திருந்தது. உணவருந்தும் நேரம் நெருங்கியதும் வாசு தேவானந்த் என்ற சாமியார் தனக்கு நேரமில்லை என நழுவிக் கொண்டு விட்டார். அவரது வீட்டிற்குச் சென்ற இரு சாமியார்களுள் அயோத்தி ராமர் கோயில் பூசாரி நிருத்யா கோபால்தாஸ், ''தான் விரதம்'' என 'நாகரிகமாக' தனது சாதிப்பற்றை காட்டிக் கொண்டுள்ளார். மற்றொரு சாமியார், இலையின் முன் அமர்ந்து பார்ப்பன சடங்குகளை செய்து முடித்து சோறு போடும் முன்பே இலையை மூடிவிட்டு எழுந்துவிட்டார்!

★ இத்தாலியில் நடந்து முடிந்த பாராளுமன்றத்திற்கான தேர்தலில் மூன்று வலதுசாரி கட்சிகளின் கூட்டணியொன்று, மொத்தமுள்ள 650 இடங்களில் 366 இடங்களைக் கைப்பற்றியுள்ளது. இக்கூட்டணியில் ஓர் உறுப்பு கட்சியான ''தேசிய இணக்கம்'', பாசிச சர்வாதிகாரி முசோலினியின் நேரடி வாரிசாகத் தன்னை அறிவித்துக் கொண்டுள்ள நவீன நாஜிக் கட்சியாகும். மேலும் முசோலினியின் பேத்தி, இக்கட்சியின் சார்பாக மிலன் நகரிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டும் உள்ளார். இவ்வெற்றிக் களிப்பில் இக்கட்சியின் தலைவர், ''முசோலினி இந்நூற்றாண்டின் மிக உயர்ந்த அரசியல் மேதை; அவரது ஆட்சிக்காலம் மறு ஆய்வு செய்யப்பட வேண்டும்'' என அறிக்கை விடுத்துள்ளார். ஆனாலும் இத்தாலிய மக்கள் பாசிசம் வீழ்த்தப்பட்ட 49-வது நினைவு தினத்தையொட்டி மிகப் பிரம்மாண்டமான ஊர்வலம் நடத்தி, பாசிசத்திற்கெதிரான தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளனர்.

★ பத்மஜா மந்தி, மேற்கு வங்க மாநிலத்தைச் சேர்ந்த இறுதியாண்டு மருத்துவ கல்லூரி மாணவி; தாழ்த்தப்பட்ட மலை வாழ் சமூகத்தைச் சேர்ந்தவர். கல்லூரியில் சேர்ந்ததில் இருந்தே இவரை, ''எதையும் தெளிவாகக் கூறத் தெரியாதவர்'' எனப் பொருள் தரும் ''சோனார் துக்ரா'' என்ற வங்க மொழி வார்த்தையை அப்படியே ஆங்கிலத்தில் எழுதி (Sonar Tukra) சுருக்கி, ''எஸ்.டி'' என மேல்சாதி வெறி பிடித்த மாணவர்கள் கிண்டலடித்து வந்துள்ளனர். பலமுறை விடுதி அறையை விட்டு வெளியேற்றி வராந்தாவில் படுத்துறங்க நிர்ப்பந்தித்துள்ளனர். இம்முறை இவர் இறுதியாண்டு தேர்வுகளை எழுதுவதைத் தடுக்கும் முகமாக, இளநிலை மாணவிகளின் அறையில் சென்று தங்க உத்தரவிட்டுள்ளனர், நிர்வாகிகள். இத்துன்புறுத்தலுக்கு எதிராக அவர் போலீஸ் பாதுகாப்பை நாடியுள்ளதுடன், ''என்னையும் சோனல் கொத்தல் என்ற தாழ்த்தப்பட்ட மாணவியைப் போல் தற்கொலை செய்து கொள்ள நிர்பந்திக்கும் இவர்களுக்கு அடிபணிய மாட்டேன்'' என்று உறுதியாகக் கூறியுள்ளார்.

★ பொருளாதார நெருக்கடியோடு வேலையில்லா திண்டாட்டமும் அதிகரித்து வருவதன் காரணமாக பிரெஞ்சு அரசு வேலையில்லா இளைஞர்களுக்குக் கொடுத்து வந்த உதவித் தொகையைக் குறைத்துவிட்டது. இதனால் 1 லட்சத்துக்கும் அதிகமான இளைஞர்களும், மாணவர்களும் நாடு முழுவதும் 30-க்கும் மேற்பட்ட நகரங்களில் போராடத் தொடங்கினர். ஒரு வார காலமாக நடைபெற்ற இப்போராட்டங்களில் இளைஞர்களோடு அவர்களது பெற்றோர்களும் இணைந்து கொண்டுள்ளனர். போராட்டத்தின் வீச்சைக் கண்டு அரண்டு போன அரசாங்கம் சில சலுகைகளை அறிவித்த பின்தான் போராட்டத்தைக் கைவிடுவதாக அறிவித்தனர் பிரெஞ்சு இளைஞர்கள்!

★ நாட்டின் தொழிற்துறையையும் விவசாயத்தையும் ஏகாதிபத்தியங்களுக்கு அகலத் திறந்து விட்டுள்ள ராவ் அரசு, கல்வித் துறையிலும் அந்நிய மூதலீட்டிற்கு அனுமதி அளித்துள்ளது. இதன்படி 400 கோடி ரூபாய் திட்ட மூதலீட்டில் அமையவிருக்கும் விஞ்ஞானப் பல்கலைக்கழகத்தின் 50 சதவீத மூதலீட்டை வெளிநாட்டில் வாழும் இந்தியர்களிடமிருந்து திரட்டிக் கொள்ள ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இதோடு, இப்பல்கலைக்கழகத்தின் 25 சதவீத ஆசிரியர் பணி இடங்கள் வெளிநாடுகளிலிருந்து திரும்பும் இந்திய விஞ்ஞானிகளுக்கு ஒதுக்கப்படும்; மேற்பார்வை பேராசிரியர் பதவிகளோ வெளிநாட்டில் வாழும் இந்திய விஞ்ஞானிகளுக்கு மட்டும்தானாம்!

★ தனது முதல் கணவரை விவாகரத்து செய்து விட்டு, தன்னை மணம் புரிந்து கொண்ட ஷகேரா எனும் பெண்மணியைக் கொலை செய்த குற்றத்தின் கீழ் கர்நாடக போலீசார் சிரத்தானந்தா எனும் போலிச் சாமியாரைக் கைது செய்துள்ளனர். அப்பெண்மணியை மயக்கமடையச் செய்து, சவப்பெட்டியினுள் அடைத்து, அவரது பங்களாவிலேயே உயிரோடு புதைத்து விட்டிருக்கிறான். கடந்த மூன்றாண்டுகளாக கேட்பவர்களிடம் ''தனது மனைவி வெளிநாடு சென்றிருக்கிறாள்'' என நாடகமாடி, அப்பெண்மணியின் பல கோடி பெறுமான சொத்துக்களையும் ஏப்பம் விட்டுள்ளான் இவன். முரளி மனோகர் மிஸ்ரா எனும் இவன், எளிதாக பணமும், பெண்களின் உறவும் கிடைப்பதால் சாமியாராக மாறியதாகத் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளான்.

பெண் உரிமையை எதிர்க்கும் வங்கதேச பழமைவாதிகள்.





படிப்பகம்

www.padippakam.com

# கற்பழிப்பு, கொலை, கொள்ளை பேயாட்டமிடும் 'ஜெ' ஆட்சி

**போலீசு, கிரிமினல்; அரசியல்வாதிகளின் கூட்டுத் தாக்குதல்களும் அக்கிரமங்களும் கொடுமைகளும் மக்களின் வாழ்க்கையில் ஒரு பகுதியாகவே ஆக்கப்பட்டுவிட்டது.**

தமிழகத்தின் மோசமாகிவிட்ட சட்டம் - ஒழுங்கு பிரச்சினையைக் கிளப்பி காங்கிரசு கும்பல் ஆதாயம் தேடி வருகிறது. இதற்கு பதிலடி என்கிற பெயரில், தமிழகத்தில் நடக்கும் வழிப்பறி, கொள்ளை, கொலை சம்பவங்களுக்கு ''எனது ஆட்சியைக் கலைக்க டில்லி-காங். அரசு செய்யும் சதி'' என்று குற்றம் சாட்டி தனது சிறுபுத்தியைக் காட்டினார், ஜெயலலிதா. காங்கிரசு கும்பல் கூச்சல் போட்டதால் பத்திரிக்கைகளும் வால் பிடித்துக் கொண்டு நடந்த வழிப்பறி, கொள்ளை, கொலைச் சம்பவங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தன. மற்றபடி அன்றாடம் மக்கள் இப்பிரச்சினைகளால் பாதிக்கப்படுவதைப் பற்றி இவர்கள் கண்டு கொள்வதே இல்லை.

தென் மாவட்டங்களில் செக்கானூரணி, சோழவந்தான், திருமங்கலம் கொடைரோடு முதலிய பகுதியிலுள்ள நெடுஞ்சாலைகளில் வழிப்பறி, கொள்ளைகள் நடப்பது வழக்கம். இந்நிலை மற்ற மாவட்டங்களுக்கும் பரவி வருகிறது. சென்னை பெங்களூர் நெடுஞ்சாலையில் திருப்பெரும்புதூர் அருகே ஒரு நகை வியாபாரியின் கார் மறித்து கொள்ளையடிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து மதுரை வந்து கொண்டிருந்த பாண்டியன் போக்குவரத்துக் கழகப் பேருந்து ஒன்று நாட்டு வெடி குண்டு வைத்து தாக்கப்பட்டு, பயணிகளிடமிருந்து 24 பவுன் நகையும் பணமும் கொள்ளையடிக்கப்பட்டன.. இந்நாட்களில் சட்டசபையில் எதிர்கட்சியினர் பிரச்சினை எழுப்பவே, சில அதிரடி திட்டங்களை வெளியிட்டார் ஜெயா.

நெடுஞ் சாலைகளில் 50 கி.மீட்டருக்கு ஒன்றாக தகவல் தொடர்பு கருவியோடு ஆயுதந்தாங்கிய போலீசார் வாகனங்களில் காவல் புரியவும் 205 முக்கிய இடங்களில் புதிதாக சோதனைச் சாவடிகள் அமைக்கவும் ஜெயா போட்ட உத்தரவு அறைகுறையாக நிறைவேறியது. இதைக்காட்டி ஜெயாவும், அமைச்சர்களும் இனி வழிப்பறி கொள்ளை எதுவும் நடக்காது என தம்பட்டமடித்து பெருமை பேசினார்கள். ஆனால் சில நாட்களிலேயே திருச்சி - நொச்சியம் அருகே ''வேன்'' ஒன்று கொள்ளையடிக்கப்பட்டது. அதன் டிரைவரை தாக்கி விட்டு பயணிகளிடமிருந்த 60 பவுன் நகைகள் சூறையாடப்பட்டன.

நெடுஞ்சாலைகளில் குதிரை - லாடம், ஆணிகளைப் போட்டு, வாகனங்களைப் ''பஞ்சராக்கி'' கொள்ளையடிப்பது வழமையான முறை. அண்மைக்காலமாக தென்மாவட்டங்களில் ஓடும் லாரிகளிலேயே வாகனங்களில் துரத்தி, ஏறி சத்தமில்லாமல் தார்பாய், ''ஸ்டெப்புனி'' முதலியவற்றை கழற்றிக் கொண்டு குதித்து விடுகிற பிரபல கொள்ளையர்கள் ''தார்பாய்'' முருகன், பூமிநாதன் என்ற பட்டப்பெயர்களோடு வலம் வருகிறார்கள். செக்கானூரணி, சோழவந்தான், திருமங்கலம் பகுதி போலீசு நிலையங்களின் ஒத்துழைப்போடு இக்கொள்ளை தொடர்கிறது.

நெடுஞ்சாலைகளில் மட்டுமல்ல புறநகரங்களிலும், நகரின் மையப் பகுதிகளிலும் அன்றாடம் வழிப்பறி, கொலை, கொள்ளை, கற்பழிப்புகள் நடக்கின்றன. சென்னையில் மூன்று மாதங்களில் (ஜன. - மார்ச் '94) 94 சம்பவங்கள் நடந்துள்ளன. ஏப்ரல் மாதத்தில் 15 நாட்களில், 8 பெரிய கொள்ளைகள் நடந்துள்ளன. பத்திரிக்கைகளும் இவற்றிற்கு முக்கியமளித்து, சட்டசபையிலும் பிரச்சினை கிளப்பப்பட்டதால் வழக்கம் போலவே சில அதிரடி நடவடிக்கைகளை எடுத்தார் ஜெயா. 37 புதிய மாருதி ''ஜீப்''புகள், தகவல் தொடர்பு கருவிகளோடு சென்னை நகரில் போலீசு ''பாரா'' போடப்பட்டது. ஆனால் நிலைமை மாறியதாக இல்லை. மையமான கோடம்பாக்கம் பகுதியில் ஒரு மருத்துவமனை கணக்கரிடமிருந்து 2 லட்சம் ரூபாய் கொள்ளையடிக்கப்பட்டது. இதே நிலைதான் திருச்சி, மதுரை, கோவை முதலான நகரங்களிலும் தொடர்கிறது.

வேலியே பயிரை மேய்கிற நிலையில் மீண்டும் போலீசிடமே தீர்வு காண ஜெயலலிதா கைகாட்டினால் எப்படி குற்றங்கள் குறையும்? போலீசு நிலைய கற்பழிப்பு, கொலைகளே அதிகரித்து வருகிற நிலையில் இவர்களால் எப்படி வெளியில் நடக்கும் கற்பழிப்பு, கொலைகள் குறையும்? மாமூல் வாங்கிக் கொண்டு கிரிமினல்களுக்கு கொள்ளையடிக்க, வழிப்பறி - பிக்பாக்கெட் அடிக்க உரிமம் தருகிற போலீசே அவற்றைத் தடுக்கும் என்பது யாரை ஏய்க்க? ஜெயலலிதா என்னதான் குட்டிகரணம் அடித்தாலும் அதிரடி நடவடிக்கைகள் மேற்கொண்டாலும் மக்கள் இந்த போலீசை நம்பத் தயாராக இல்லை. அந்தக் காலம் மலையேறி விட்டது. அரசியல் தெரியாத - ''தினத்தந்தி'' படிக்காத பாமரர்கள்கூட ஜெயா ஆட்சியில் போலீசின் அக்கிரமங்கள் அதிகரித்து விட்டதைக் குமுறலோடு பேசிக் கொள்கிறார்கள்.

''குற்றப்பிரிவு போலீசார் உட்பட போலீசு துறையே ஜெயலலிதா மற்றும் அமைச்சர்களின் பாதுகாப்பிற்கு என அடிக்கடி சென்று விடுகிறார்கள். ஜெயலலிதா பிறந்த நாளை முன்னிட்டு வருடந்தோறும் பொது மன்னிப்பு என்ற பெயரில் அ.தி.மு.க-வினருக்கு வேண்டிய முக்கிய கிரிமினல்கள் விடுவிக்கப்படுகிறார்கள். குற்றவாளிகள் மீது நடவடிக்கை எடுக்க முடியாதவண்ணம் அ.தி.மு.க. அமைச்சர்களும் எம். எல். ஏக்களும் சசிகலாவின்

**நெடுஞ்சாலையின் தொடர் கொள்ளையைத் தொடர்ந்து 'ஜெ' எடுத்த 'அதிரடி' நடவடிக்கை; போலீசுக்கு மாமூல்தான் அதிகரித்தது. கொள்ளைகள் குறையவில்லை.**





படிப்பகம்

www.padippakam.com

# முத்தாண்டிக்குப்பம் சம்பவம் முத்தாய்ப்பான ஆதாரம்

முத்தாண்டிக் குப்பம் போலீசு நிலையத்தில் வசந்தா என்ற பெண் 'கற்பழித்து', கொலை செய்யப்பட்டதும், சம்பந்தபட்ட 5 போலீசார் தலைமறைவானதும் போலீசு கொட்டடிக் கொலை-'கற்பழிப்பு'க்கு மறுக்க முடியாத ஆதாரமாகியுள்ளது. பொருந்தா திருமணத்தில் திணிக்கப்பட்ட வசந்தா தனது காதலனுடன் உடன்போக்கு எய்தியதால் கிழக்கணவன் கொடுத்த புகாரின் பேரில் கைது செய்து 'கற்பழித்து', கொலை செய்தது போலீசு. சேலையில் தூக்கு மாட்டி தற்கொலை செய்து கொண்டதாக ஜோடித்தது, உண்மைய றிந்த பொதுமக்கள் கிளர்ந்தெழுந்து போலீசு நிலையத்தை முற்றுகையிட்டு தாக்க முற்படவே கொலைகாரர்கள் தலைமறைவாகி விட்டார்கள். ஜெயலலிதா வேறுவழியின்றி இக்கொலையை ஒத்துக் கொண்டு நடவடிக்கை எடுக்கக் கூறியதைத் தொடர்ந்து அப்போலீசார் மீது வழக்கு பதிவு செய்யப் பட்டது.

இச்சம்பவத்திற்காக சம்பந்தப் பட்ட போலீசு அதிகாரி திலகவதி மாற்றல் செய்யப்பட்டார். போலீசு அதிகாரிகளுள் தில[illegible]வதி ம[illegible] அவரது எதிர்ப்பாளர்கள[illegible]ாதிக் கொண்டு கொலைகாரர்களுக்கு உதவி செய்து தப்புவிக்க விடுவதாக தகவல் வருகின்றன. பாண்டிச்சேரி, திருப்பதி என கொலைகாரர்களை போலீசார் தேடுவதாகவும், திருச்சி ரயில் நிலையத்தில் பார்த்த இவர்களை இன்னொரு பிரிவு



போலீசார் தப்புவிக்க விட்டு விட்டதாகவும் பத்திரிக்கைகள் எழுதுகின்றன. போலீசு உயரதிகாரிகளே கொலைகாரர்களை ரகசியமாக பாதுகாப்பாக வைத்து விட்டு இப்படி கதை கட்டிவிட்டாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை. கொலை காரர்கள் நீதிமன்றத்தில் முன்ஜாமீன் எடுக்க மனு போட்டிருக்கிறார்கள். கிரிமினல் களையே தப்பிக்க வழி சொல்லுகிற போலீசு கும்பல் தமது சகாக்களையா தண்டித்துவிடப் போகிறது? போலீசு துறை கலைக்கப்படும் வரை இத்தகைய கொடுமைகள் ஒழியாது. மக்கள், போலீசு நிலையங்களைப் புறக்கணிப்பதும் ஊர் தோறும் புரட்சிகர பஞ்சாயத்து கமிட்டிகளை உருவாக்கி பிரச்சினைகளை தமக்குள்ளேயே தீர்த்துக் கொள்ளவும், போலீசு அமைப்புக்கு எதிராக போராடவும் துரிதமாக முன்வர வேண்டும் என்பதையே தொடரும் இந்நிலைமைகள் கோருகின்றன.

உறவினர்களும் அதிகம் குறுக்கீடு செய்கிறார்கள்'' என்று போலீசு அதிகாரிகள் குறைபட்டு கொள்கிறார்கள். இவை உண்மை என்றாலும் அரசியல்வாதிகள், கிரிமினல்களோடு போலீசு துறையே உணர்வுப்பூர்வமாகக் கூட்டு சேர்ந்து கொள்ளையடிப்பதும், கொடுமைகளை இழைப்பதும்தான் முழு உண்மை.

அண்ணாமலை நகர் போலீசு கொட்டடி கொலை, கற்பழிப்பிலிருந்து நேற்றைய முத்தாண்டிக்குப்பம் போலீசு நிலைய கொலை, கற்பழிப்பு வரை பிரச்சினையைப் பெரிதாக்காமல் தமது பதவியைப் பயன்படுத்தி உதவி செய்கிறது, ஜெயா கும்பல். சிறந்த சேவை செய்வதாகக் கூறி பரிசுகள், சலுகைகள் வழங்கி ஊக்குவிக்கிறது. மத்திய அரசு நிதி ஒதுக்கவில்லை என்று கூறிக் கொண்டே ஏராளமான நிதியை ஒதுக்கி, கண் இமைக்கும் நேரத்திற்குள் புதிய வாகனங்களை வாங்கித் தருகிறது. பிற மாநிலங்களைக் காட்டிலும் தமிழகத்தில் குற்றங்கள் குறைவு தான் எனக்கூறி போலீசை தட்டிக் கொடுக்கிறார், ஜெயா.

இதற்கு கை மாறாகத்தான் போலீசு, ஜெயா கும்பலுக்கு பாதுகாப்பு முதலான அனைத்து உதவிகளையும் செய்து வருகின்றன. அண்மையில் கூட திருச்சி - நொச்சியமருகே ''வேன்'' கொள்ளையடிக்கப்பட்ட சம்பவத்தில் தடயங்களை மறைத்து விசயத்தை போலீசு அமுக்கி விட முயற்சி செய்தது. எதிர்கட்சிகள் சட்டம் - ஒழுங்கு பிரச்சினையை கிளப்பிக் கூச்சல் போடுவதால், சட்டசபை கூட்டத் தொடர் முடியும் வரைக்குமாவது இது போன்ற சம்பவங்கள் பத்திரிக்கையில் பெரிய செய்திகளாகாமல் பார்த்துக் கொள்ளும்படி ஜெயா இட்ட ரகசிய உத்தரவின் பணியை விசுவாசத்தோடு போலீசு நிறைவேற்றுகிறது.

போலீசு, கிரிமினல், அரசியல்வாதிகளின் கூட்டுத் தாக்குதல்களும் அக்கிரமங்களும் கொடுமைகளும் மக்களின் வாழ்க்கையோடு ஒரு பகுதியாகி விட்டது. வாழ்க்கையோடு போராடிக் கொண்டிருக்கிற சாதாரண மக்கள் இவற்றிற்கு எதிராகவும் போராடத் தள்ளப் பட்டு விட்டார்கள். போலீசு யார், கிரிமினல் யார், அரசியல்வாதி யார் என இனம் பிரிக்க முடியாத வண்ணம் இவர்களின் கூட்டு வலுப்பெற்றும் ஒன்று கலந்தும் வருகிறது. இதற்கெதிராக தி.மு.க., பா.ம.க., சி.பி.ஐ., சி.பி.எம். முதலான கட்சிகள் எதுவும் போராட முன்வரவில்லை. தமது கட்சிப் பிரச்சினைகளிலும் பிழைப்புவாதத்திலுமே மூழ்கியுள்ளன. ஓட்டு ஆதாயத்திற்கு எந்த அளவிற்குப் பயன்படுமோ அந்த அளவிற்கு மட்டும் மூக்கை நுழைக்கின்றன.

இதைச் சாதகமாக்கிக் கொண்டு ஜெயா கும்பலின் போலீசு, கிரிமினல் ஆட்சிக் கொடுமைகள் தொடர்வதல்லாமல் அதிகரிக்கவும் செய்கின்றன. காங்கிரசு முதலான இந்த ஓட்டுப் பொறுக்கிகளின் அடையாள எதிர்ப்புகளை வெற்றுக் கூச்சல்கள் போட்டு, அதிரடி நடவடிக்கைகள் எடுத்துக் காட்டி திசை திருப்பவும் நீர்த்துப் போகவும் செய்துவிடுகிறார் ஜெயலலிதா. கேள்வி கேட்பாரற்ற முறையில் திமிரோடு தொடரும் இப்பேயாட்சிக்கு எதிராகப் போராட மக்கள் கட்டாயம் வீதிக்கு வந்தே தீரவேணடும்.



படிப்பகம்

www.padippakam.com

# கைத்தறி நூல் விலையேற்றம் பரிதவிக்கும் நெசவாளர்கள்

''புதிய பொருளாதாரக் கொள்கை''யில் கைத்தறி துறை முற்றாகப் புறக்கணிக்கப்படுகிறது. நெசவாளர்களோ பட்டினிச் சாவுக்கு தள்ளப்படுகிறார்கள்.

இராமையா. ஆந்திராவின் குண்டூர் மாவட்டத்தைச் சேர்ந்த 53 வயதான கைத்தறி நெசவாளி. 1991-ல் நரசிம்ம ராவ் அரசு ஆட்சிக்கு வந்ததும், நூல் விலைகள் தாறுமாறாக உயர்ந்ததன் விளைவாக அவரது பிழைப்புக்கான தொழிலே முடமாகிப் போனது. வறுமையிலும் கடன் சுமையிலும் தத்தளித்தார் இராமையா. எந்தத் தறி அவருக்கு வாழ்வளித்ததோ, அதிலேயே அவர் தூக்கு மாட்டிக் கொண்டு மாண்டு போனார். இராமையா மட்டுமல்ல; ஆந்திராவின் குண்டூர், பிரகாசம் மாவட்டங்களில் நூல் விலையேற்றத்தால் நசிந்து போன 70-க்கும் மேற்பட்ட நெசவாளர்கள் 1991-ம் ஆண்டில் தற்கொலை செய்து கொண்டு மாண்டு போனார்கள்.

இராமையாவின் மகன் வெங்கையாவுக்கு அப்போது 26 வயது. தந்தையைப் போலவே அவரும் ஒரு கைத்தறி நெசவாளி. தந்தையின் மறைவுக்கு பிறகு தனது இளம் மனைவி, குழந்தைகளோடும், விதவைத்தாய் - சகோதரிகளோடும் குடும்ப பாரத்தைச் சுமக்க வேண்டிய பொறுப்பு அவர் தலையில் விழுந்தது. மொத்த குடும்பமும் தறியிலேயே உழன்ற போதிலும், அரைப்பட்டினி - முழு ஏழ்மை நிலையிலேயே வெங்கையாவின் குடும்பம் தவித்தது. இவ்வாண்டு துவக்கத்தில் மீண்டும் நூல் விலை உயர்ந்ததும் வெங்கையா திக்கு முக்காடிப் போனார். அவரது தறியில் பூனை தூங்க ஆரம்பித்தது. கடன் சுமையோ அவரை விரக்தியின் விளிம்பிற்கே தள்ளியது. கடந்த மாதத்தில் அவர் பூச்சி மருந்து குடித்து மாண்டு போனார். மூன்றாண்டுகளில் அடுத்தடுத்து அக்குடும்பத்தில் தந்தையும் மகனும் மாண்டதைப் போலவே, குண்டூர் மாவட்டத்தில் 40-க்கும் மேற்பட்ட நெசவாளர் குடும்பங்களில் இத்தகைய துயரச் சம்பவங்கள் நடந்துள்ளன.

அது ஆந்திராவுக்கு மட்டுமேயான விதிவிலக்கான சம்பவம் அல்ல. நூல் விலையேற்றம் காரணமாக, நாடெங்கும் இலட்சக்கணக்கான கைத்தறி நெசவாளர்களும், பனியன் பின்னலாடைத் தொழிலாளர்களும் பட்டினிச் சாவுக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள். 1992-ம் வருடத்திலேயே பருத்தியின் விலை 55%-ம் நூலிழை விலை 35%-ம் உயர்ந்தது. ஆனால் பருத்தி ஆடைகளின் விலை 5% தான் அதிகரித்தது. இதன் விளைவாக கைத்தறி நெசவாளர்களின் ஊதியம் மேலும் குறைந்தது. இவ்வாண்டில் கைத்தறிக்குப் பயன்படுத்தப்படும் சிட்டா நூலின் விலை அடுத்தடுத்து 50% லிருந்து 90% வரை உயர்ந்துள்ளது. கடந்த ஏப்ரல் 3-ந் தேதியிலிருந்து சிட்டா நூலை வாங்குவது இல்லை என்று கைத்தறித் துணி உற்பத்தியாளர்கள் முடிவு செய்துள்ளதால், தறிகள் இயங்காமல் 10 லட்சத்துக்கும் மேற்பட்ட நெசவாளர்கள் வேலை இழந்து தவிக்கின்றனர்.



நூல் விலையேற்றத்தால் இயங்காமல் முடங்கிக் கிடக்கும் தறிகள்.

இதேபோல பனியன் பின்னலாடைத் தொழிலும் நூல் விலையேற்றத்தால் நெருக்கடியில் சிக்கித் தவிக்கிறது. கடந்த டிசம்பர் மாதம் 30-ம் தேதி வரை 40-ம் நெம்பர் ஹொசைரி பருத்தி நூல் 100 கிலோ கொண்ட பெட்டி ஒன்று ரூ. 8,500-க்கு விற்பனையானது. இருநாட்களில் அதாவது 1994 ஜனவரி முதல் நாளிலிருந்து பெட்டி ஒன்றுக்கு ரூ. 650 வீதம் விலை உயர்ந்தது. பின்னர் பிப்ரவரி மாதத்தில் மேலும் ரூ. 650 விலையேறியது. அதன் பிறகு மத்திய பட்ஜெட்டில் விதிக்கப்பட்ட ஆயத்தீர்வையின் காரணமாக ரூ. 250 வரியேறியது. அதைத் தொடர்ந்து கடந்த ஏப்ரல் மாதத்தில் பனியன் தொழில் வரலாற்றிலேயே இதுவரை காணாத அளவுக்கு பெட்டி ஒன்றுக்கு ரூ. 1200 வீதம் நூல் விலை உயர்ந்தது. ஏறத்தாழ 90 நாட்களுக்குள் 100 கிலோ கொண்ட நூலிழைப் பெட்டி ஒன்றுக்கு ரூ. 2,750 வரை விலை உயர்ந்து பனியன் தொழிலிலே இதுவரை கண்டிராத மிகப் பெரிய நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

இதன் விளைவாக, திருப்பூரில் மட்டும் ஒரு லட்சம் பனியன் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இதுதவிர பனியன் தொழிலைச் சார்ந்துள்ள ஸ்கிரீன் பிரிண்டிங், டையிங், பிளீச்சிங், ஸ்டீம் காலண்டரிங் முதலான தொழில்களில் ஈடுபட்டுள்ள 30,000 பேர் இன்று வேலையின்றித் தவிக்கின்றனர்.

நாட்டின் மொத்த ஜவுளி உற்பத்தியில் 20% பங்கு வகிக்கும் கைத்தறித் துறையானது, விவசாயத்துக்கு அடுத்தபடியாக உள்ள மிகப்பெரிய வேலை வாய்ப்புத் துறையாகும். ஏறத்தாழ 40 லட்சம் பேர் நேரடியாகவும், ஒரு கோடிப் பேர் அதைச் சார்ந்து பகுதி நேரமாகவும் பங்கேற்கும் துறையாகும். விவசாயத்தைப் போலவே, பெருமளவு மக்கள் சார்ந்துள்ள கைத்தறித் துறையையும் ஆளும் காங்கிரசுத் துரோகிகள் தொடர்ந்து புறக்கணித்து வருவதாலேயே நெருக்கடிகள் முற்றி இன்று நெசவாளர்கள் பட்டினிச் சாவுக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

நூலிழை விலையேற்றத்துக்கு தட்டுப்பாடே முதற் காரணமாக உள்ளது. ஆண்டுக்கு 275 நாட்களுக்கு கைத்தறி நெசவாளர்கள் வேலை செய்ய குறைந்தபட்சம் 45 கோடி கிலோ நூலிழை தேவை. ஆனால் 30 கோடி கிலோ நூல்



படிப்பகம்

www.padippakam.com

தான் கிடைக்கிறது. பற்றாக்குறையை ஈடு கட்ட தேசிய பஞ்சாலைக் கழகங்களும் (NTC) கூட்டுறவு நூற்பாலைகளும் சிட்டா நூலை உற்பத்தி செய்து கொடுக்க வேண்டும் என மத்திய அரசு கூறியுள்ளது. ஆனால்இது நடைமுறைப்படுத்தப்படுவதில்லை. மிக அற்ப அளவுக்கே அவை உற்பத்தி செய்து கொடுக்கின்றன.

இரண்டாவதாக, புதிய பொருளாதாரக் கொள்கை நடைமுறைக்கு வந்ததும் பருத்தியும், நூலிழையும் வரைமுறையின்றி ஏற்றுமதி செய்யப்படுவதால், தட்டுப்பாடும் பதுக்கலும் பெருகி நூல் விலை தாறுமாறாக உயர்ந்து கொண்டே போகிறது.

இவை தவிர, கைத்தறியை ஆட்சியாளர்கள் தொடர்ந்து புறக்கணித்து வருவதால் பெருகியுள்ள நெருக்கடிகளோ ஏராளம்.

★ சிட்டா நூல் தட்டுப்பாடு காரணமாக, மில்களிலும் விசைத்தறியிலும், பயன்படுத்தப்படும் கூம்பு நூலை வாங்கி, அதை கைத்தறி நெசவாளர்கள் சிட்டா நூலாக மாற்றிக் கொள்கின்றனர். கூம்பு நூலுக்கு மத்திய அரசு ஆயத் தீர்வை விதித்துள்ளதால், அந்த வரிச்சுமையையும் கைத்தறி நெசவாளர்கள் சுமக்க வேண்டியுள்ளது. இதுதவிர மில்களே உற்பத்தி செய்து தரும் கூம்பு நூலிழை விலை குறைவாகவும் சிட்டா நூலிழை விலை அதிகமாகவும் விற்கப்படுகிறது. கைத்தறித் துறையைப் பாதுகாப்போம் என்று சவடால் அடிக்கும் மத்திய அரசு, கூம்பு நூலிழை உற்பத்திக்கு மட்டுமே கணக்கற்ற வரிச் சலுகைகளை அறிவித்துள்ளது.

★ கைத்தறி நெசவாளர்கள் 40-ம் நெம்பர் நூலைத்தான் அதிகமாகப் பயன்படுத்துகின்றனர். ஆனால் மில்களோ 40-ம் நெம்பர் என்ற பெயரில் 41-ம் நெம்பர் நூலை விற்று ஏய்க்கின்றன. இதனால் நெசவாளர்களுக்கு ஏற்படும் பிரச்சனைகள் ஏராளம். மேலும் மில்கள் ஊடு இழையைத்தான் விநியோகிக்கின்றனவே தவிர, பாவு நூலைத் தருவதில்லை. இதனால் தறி நெய்யவே முடியாமல் நெசவாளர்கள் திண்டாட வேண்டியதாகிறது.

★ கடந்த மூன்றாண்டுகளில் சாய விலை பல மடங்கு அதிகரித்துவிட்டது. குறிப்பாக, தாவரங்களிலிருந்து பெறப்படும் இயற்கைச் சாயங்கள் பெருமளவு ஜப்பானுக்கும் ஜெர்மனிக்கும் ஏற்றுமதி செய்யப்படுவதால், தட்டுப்பாடு காரணமாக விலை தாறுமாறாக உயர்ந்துள்ளது. கடந்த ஆண்டின் தொடக்கத்தில் ரூ. 500-க்கு விற்கப்பட்ட ஒரு கிலோ பச்சை சாயம் இன்று ரூ. 2.000-க்கும் மேல் உயர்ந்துவிட்டது.

★ நசிந்து வரும் கைத்தறி நெசவாளர்களுக்கு கூட்டுறவு சங்கங்களில் கடனும் கிடைப்பதில்லை. கைத்தறி கூட்டுறவு சங்கங்களுக்கு செயல் மூலதனமாக குறைந்த பட்சம் 1200 கோடி ரூபாய் தேவை. ஆனால் கடந்த ஆண்டில் வெறும் 190 கோடி ரூபாய்தான் ரிசர்வ் வங்கியால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



**நூல் விலையேற்றத்தை எதிர்த்து கரூரில் ஜவுளி உற்பத்தியாளர்களும் தொழிலாளர்களும் நடத்திய ரயில் மறியல் போராட்டம்.**

★ கைத்தறித் துறை முடமாக்கப்பட்டுள்ள நிலையில், வரைமுறையின்றி விசைத்தறிகளுக்கு அரசு அனுமதியளித்து வருகிறது. இதுதவிர சட்ட விரோதமாகவே பல பகுதிகளில் விசைத்தறிகள் இயக்கப்படுகின்றன. உச்ச நீதிமன்றமே, ஒரு விசைத்தறியானது 6 கைத்தறிகளை விழுங்குவதாக கடந்த பிப்ரவரியில் கூறியுள்ளது. ஆனாலும் பெருகிவரும் விசைத்தறிகளைக் கட்டுப்படுத்த அரசு எந்த நடவடிக்கையும் எடுப்பதில்லை. ஒரு கைத்தறியில் உற்பத்தியாகும் லுங்கியின் விலை ரூ. 40 என்றால், விசைத்தறி லுங்கிகள் ரூ 25-க்கு விற்கப்படுகின்றன. இப்படி கைத்தறியின் சந்தையை விசைத்தறி விழுங்கி வருவதால் கோடிக் கணக்கில் கைத்தறித் துணிகள் விற்பனையின்றி தேங்கிக் கிடக்கின்றன.

★ கைத்தறிக்கென்று ஒதுக்கப்பட்ட துணி ரகங்களை, மில்களும் விசைத்தறிகளும் கள்ளத்தனமாக உற்பத்தி செய்வதாலும் கைத்தறித் துணிகள் தேங்கிப் போகின்றன. 1985-ல் கைத்தறிக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட 22 துணி வகைகளை தாங்களும் உற்பத்தி செய்ய மில்களும் விசைத்தறிகளும் நீதிமன்ற இடைக்கால உத்திரவைப் பெற்று கடந்த 8 ஆண்டுகளாக உற்பத்தி செய்கின்றன. இதன் விளைவாக விற்பனைக்கான வாய்ப்பே இன்றி கைத்தறித்துறை முடமாகிப் போயுள்ளது. கடந்த ஆண்டில் உச்சநீதி மன்றம் இந்த உத்திரவை ரத்து செய்த போதிலும், மில்களும் விசைத்தறிகளும் சில அற்ப மாற்றங்களுடன் இதே துணிகளை உற்பத்தி செய்து தாங்கள் சட்டப்படி நடந்து கொள்வதாக ஏய்க்கின்றன. மேலும் உச்சநீதி மன்ற உத்திரவும் பல ஓட்டைகளைக் கொண்டதாக உள்ளது. உதாரணமாக, கட்டம் போட்ட பருத்தி ஆடைகளை கைத்தறிக்கு அது ஒதுக்கிய போதிலும், முழு வண்ண, கோடுகள், வளைவுகள் கொண்ட டிசைன்களை கைத்தறிக்கு ஒதுக்குவது பற்றி அது எந்த முடிவும் தெரிவிக்கவில்லை. இதைச் சாதகமாக்கிக் கொண்டு இத்தகைய துணி வகைகளை மில்களும் விசைத்தறிகளும் உற்பத்தி செய்து குவிக்கின்றன.

இதேபோல, 1992-ல் நெருக்கடி ஏற்பட்ட போது, ஆந்திராவிலுள்ள கைத்தறி நெசவாளர்கள் பெண்களுக்கான ரவிக்கைத் துணிகளை வடிவமைத்து விற்பனை செய்தனர். ஆனால் அந்த டிசைன்களை மில்கள் காப்பியடித்து இப்போது மலிவு விலையில் விற்க ஆரம்பித்து விட்டன.

— இப்படி தொடர்ச்சியாக கைத்தறித்துறை புறக்கணிக்கப்படுவதாலும், தொழிலுக்கான எவ்வித பாதுகாப்பும் உத்திரவாதமும் இல்லாததாலும் கைத்தறித் துறையே நசிந்து போய்விட்டது. இத்

டங்கல் திட்டப்படி மேலை நாடுகளின் கட்டளைக்கேற்ப அற்ப விலையில் நூல் ஏற்றுமதியும் அதிக விலையில் இறக்குமதியும் செய்ய வேண்டும். அந்நிய துணிகள் இந்தியாவில் மலிவாக விற்பதையும் தடுக்க முடியாது.



படிப்பகம்

www.padippakam.com



ஆந்திர நெசவாளர்கள் நடத்தும் தெருமுனை நாடகம்.

# "எங்களையும் வாழ விடு!"

ஆந்திராவின் விஜயவாடா அருகிலுள்ள கிராமம் மங்களகிரி. முன்னிரவு நேரம். திடீரென பறை முழங்கும் பேரொலி. அதைக் கேட்டு ஆயிரத்துக்கும் மேற்பட்ட கிராம மக்கள் தண்ணீர் தொட்டி அருகிலுள்ள மைதானத்தில் திரளுகின்றனர். பெண்கள் உட்பட உழைத்துக் களைத்த நெசவாளர்கள் சிலர் பாடத் தொடங்கியதும் ஒரு புதிய வகை நாடகம் அரங்கேறுகிறது. ஒப்பனை இல்லை; ஒலி பெருக்கிகள் இல்லை; தொழில் முறை நடிகர்களும் இல்லை. நெசவாளர்களே நடிகர்களாக, அவர்களது வாழ்க்கைப் போராட்டத்தைப் படம் பிடித்துக் காட்டுகிறார்கள். கடன் சுமையில் மூழ்கித் தத்தளிக்கும் கைத்தறி நெசவாளர்களின் வாழ்க்கைப் பிரச்சினையை, அவர்கள் கொத்தடிமைகளாக உழல்வதை, பட்டினிச் சாவுக்குத் தள்ளப்படுவதை, ஓட்டுக் கட்சிகளின் துரோகத்தை அவர்களது நாடகம் யதார்த்தமாகச் சித்தரிக்கிறது. அந்த நாடகம் தான் "எங்களையும் வாழ விடு!". பூர்ண சந்திரராவ் எனும் முற்போக்குக் கலைஞர் தயாரித்துள்ள இந்தத் தெருமுனை நாடகம், ஐதராபாத், அனந்தபூர், சித்தூர், நெல்லூர், குண்டூர் மாவட்டங்களில் பிரபலமாகி நெசவாளர்கள் விழிப்புற்று, போராட்டத்திற்கு அணி திரளுவதைக் கண்டு ஆட்சியாளர்கள் பீதியில் உறைந்து போயுள்ளனர்.

தனையும் போதாதென்று அரசு நடைமுறைப்படுத்தி வரும் புதிய பொருளாதாரக் கொள்கையால் கைத்தறித் துறையானது படுபாதாளத்தில் தள்ளப்பட்டுவிட்டது. குறிப்பாக, கடந்த மூன்றாண்டுகளாக பணக்கார விவசாயிகளும் நிலப்பிரபுக்களும் உணவு தானியங்களையும் பருத்தியையும் நேரடியாக வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய தாராள அனுமதியும் சலுகையும் அளிக்கப்பட்டுள்ளது. கச்சா பஞ்சும் நூலிழையும் இப்படி வரைமுறையின்றி ஏற்றுமதி செய்யப்படுவதால், தட்டுப்பாடு அதிகரித்து, நூல் விலை தாறுமாறாக உயர்ந்து வரலாறு காணாத நெருக்கடிக்குள் ஜவுளித் துறை சிக்கிக் கொண்டுள்ளது.

எல்லாவற்றுக்கும் மேலாக, தற்போது "காட்" (டங்கல்) ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திட்டுள்ளதால் இந் நெருக்கடிகளிலிருந்து மீண்டெழ இனி வாய்ப்பே இல்லாமல் போய்விட்டது. டங்கல் ஒப்பந்தப்படி, 10 ஆண்டுகளுக்கு ஜவுளித் துறையில் உள்ள கட்டுப்பாடுகள் அனைத்தும் நீக்கப்பட்டு, மேலை நாடுகளின் கட்டளைக்கேற்ப அற்ப விலைக்கு இந்தியா ஏற்றுமதி செய்ய வேண்டும். அந்நாடுகள் விதிக்கும் விலைக்குத்தான் இந்தியா நூலை வாங்க வேண்டும். மேலும் ஏகாதிபத்தியங்கள் தமது நாட்டு துணிகளை இந்தியாவில் மலிவு விலைக்கு விற்பதைத் தடுக்கவும் முடியாது. வெள்ளைக்காரன் நமது நாட்டைக் காலனியாக்கி ஆண்டபோது, இங்கிருந்து பருத்தியை மான்செஸ்டருக்கு ஏற்றுமதி செய்து அங்கிருந்து ஆடைகளை இறக்குமதி செய்ததைப் போலவே, தற்போதைய "காட்" ஒப்பந்தத்தின் மூலம் நாட்டை மறுகாலனியாக்கும் பாதையில் காங்கிரசத் துரோகிகள் இழுத்துச் செல்கின்றனர்.

இதன் விளைவாக, பல லட்சக் கணக்கான கைத்தறி நெசவாளர்களும், பனியன் பின்னலாடைத் தொழிலாளர்களும் தமது வாழ்வை இழந்து, பட்டினிச் சாவுக்குத் தள்ளப்பட்டுள்ளனர். நூல் விலையேற்றத்தை எதிர்த்து இரயில் மறியல் உட்பட பல்வேறு போராட்டங்களில் அவர்கள் இறங்கிய பின்னரும் மத்திய அரசு நூலிழை மீதான ஆயத்தீர்வையை சற்றே குறைத்துள்ளதே தவிர, இத்தொழிலைப் பாதுகாக்கவோ, பாதிக்கப்பட்ட நெசவாளர்களுக்கு நிவாரண உதவி அளிக்கவோ அது முன் வரவில்லை. நூல் விலை ஏற்றத்துக்கு மத்திய அரசைக் குற்றம் சாட்டும் பாசிச ஜெயா அரசோ, நூலிழை மீது விதிக்கப்பட்டுள்ள 2% கலால் வரியையும், கைக்குட்டைகளுக்கு பார்டர் போட்டால் விதிக்கப்படும் 3% கூடுதல் வரியையும் நீக்க மறுக்கிறது. ஏற்கனவே கடந்த ஆண்டில் ஏற்பட்ட மழை மற்றும் வெள்ளத்தால் தறிகளையும் [illegible] பத்தியான துணிகளையும் இழந்து [illegible]ரித வித்துக் கொண்டிருக்கும் மதுரை - செல்லூர் நெசவாளர்களுக்கு இன்று வரை தமிழக அரசு எந்த நிவாரண உதவியும் செய்யவில்லை. இந்நிலையில் நூல் விலையேற்றப் பேரிடியால் செல்லூர் நெசவாளர்கள் பிச்சை எடுக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

எதிர்க்கட்சிகளோ, நெசவாளர்கள் போராடத் தொடங்கியதும் அரசியல் ஆதாயம் கருதி அதனை ஆதரிக்கின்றனவே தவிர, இந்நெருக்கடிக்கான காரணங்களை விளக்கி, தமது தலைமையில் நெசவாளர்களைத் திரட்டிப் போராடுவதற்கான திட்டமோ, கொள்கையோ அவர்களிடம் கிடையாது. வேறொரு பிரச்சினை முன்னணிக்கு வந்ததும் இதைக் கிடப்பில் போட்டுவிட்டு ஓடிவிடுவதே அவர்களின் வாடிக்கையாக உள்ளது. எனவே இத்தகைய மண் குதிரைகளை நம்பி இனிமேலும் பயணம் செய்ய முடியாது. ஓட்டுக்கட்சிகளைப் புறக்கணித்துவிட்டு, கைத்தறி நெசவாளர்களின் நரம்பைத் தறியேற்றியுள்ள காங்கிரசத் துரோகிகளுக்கும் அவர்களது எஜமானர்களான ஏகாதிபத்தியங்களுக்கும் எதிராக புதிய - புரட்சிகர தலைமையின் கீழ் நெசவாளர்கள் கிளர்ந்தெழ வேண்டும். நூல் விலையேற்றத்துக்கு எதிரான போராட்டத்தை இரண்டாவது சுதந்திரப் போராக விரிவாக்கி முன்னேடுத்துச் செல்ல வேண்டும்.

★ குமார்



படிப்பகம்

www.padippakam.com

## மூடநம்பிக்கை ஒழிப்பு பிரச்சாரக் கூட்டம்

திருச்சி - சிந்தாமணி, வெனிஸ் தெருவில் சாமியாடும் ஒருவர் அதே தெருவில் உள்ள ஒரு பெண்ணுக்குப் பேய் பிடித்துள்ளதாகக் கூறி நெருப்பைக் கையில் கொட்டி ஏறி நின்றதோடு, அடித்து பேய் ஓட்டியதில் கை, கால்கள் ரணமாகிப் போனது. இம்மடத்தனத்திற்கு எதிராக பகுதி இளைஞர்கள் பலர் ஆத்திரமாகி பு.மா.இ.மு.-வினரிடம் நடவடிக்கை எடுக்க கோரினர். 23.4.94 அன்று இப்பிரச்சினைத் தொடர்பாக பு.மா.இ.மு. பொதுக்கூட்டம், கலைநிகழ்ச்சிகள் மூலமாக மூடநம்பிக்கை ஒழிப்பு பிரச்சாரம் செய்தது. ம.க.இ.க., பெண்கள் விடுதலை முன்னணியினரும் இப்பிரச்சார இயக்கத்தில் கலந்து கொண்டு பல மூடநம்பிக்கை ஒழிப்பு நிகழ்ச்சிகளையும் செய்து காட்டினர். அரிசி செம்பை கத்தியால் தூக்கிக் காட்டுவது, சூடத்தை கொளுத்தி விழுங்குவது, தீச்சட்டி ஏந்துவது என பலவற்றை செய்துகாட்டி தோழர்கள் அறிவியல் பூர்வ விளக்கமளித்தனர். பொதுக்கூட்டத்தின் மூலம், சாமியாடி இதுபோன்று ஏய்த்து பிழைப்பவர்களுக்கு எச்சரிக்கை விடப்பட்டது. பகுதிமக்கள் 300க்கும் மேற்பட்டவர்கள் கூடி, ஏராளமாக நிதியளித்து ஆதரவளித்தனர்.

## மே நாள் இயக்கம்

கரூரில் பு.மா.இ.மு. சார்பாக மே நாள் ஊர்வலம் நடத்த திட்டமிட்டு முறையாக அனுமதி கோரப்பட்டது. பகுதியில் உள்ள ராமச்சந்திரன் என்ற எஸ்.ஐ., தொடர்ந்து ஒரு வருடமாக பொதுக்கூட்டம், ஊர்வலம் என எதற்கும் அனுமதி மறுத்து 'உணர்வு பூர்வமாக' செயல்படுகிறார். மற்றவர்களுக்கெல்லாம் அனுமதி தரும் இவர் பு.மா.இ.மு. என்றால் மட்டும் தருவதில்லை. இம்முறை மே நாள் ஊர்வலத்திற்கும் கடைசி நேரத்தில் வந்து அடாவடித்தனமாக அனுமதி மறுக்கப்பட்டது. ஊர்வலத்திற்காக கூடியவர்களை போலீசு "போட்டோ" எடுக்க முயன்றது, முறியடிக்கப் பட்டது. பேருந்து நிலையத்தில் தட்டிகள் கட்ட விடாமல் தடுத்த எஸ்.ஐ., தான் இருக்கும்வரை எந்த நிகழ்ச்சிக்கும் அனுமதி கிடையாது என்றும் நேரில் கூறினார். இனி நீதிமன்றத்தின் மூலம் அனுமதி பெற்று நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

சென்னை, திருச்சி, மதுரை, சாத்தூர் முதலான பல பகுதிகளில் மே நாள் இயக்கம் பல்வேறு வடிவங்களில் எடுக்கப்பட்டதோடு நாடு மீண்டும் காலனியாக்கப்படுவதற்கு எதிராக சூளுரை எடுத்து பிரச்சாரம் செய்யப்பட்டது.

## லெனின் பிறந்த நாள்: உற்சாகமான விழா

மாமேதை லெனின் பிறந்த நாளையொட்டி சூளுரை ஏற்கும் கையெழுத்துச் சுவரொட்டிகளை 21-ந் தேதி இரவு தஞ்சை நகரில் மக்கள் கலை இலக்கியக் கழக ஆதரவாளர்கள் ஒட்டிக் கொண்டிருந்தனர். அப்போது கீழ்வாசல் போலீசு நிலையத்தைச் சேர்ந்தவர்கள் வந்து தோழர்கள் கர்ணன், முருகேசன், பன்னீர் செல்வம் ஆகிய மூவரையும் கைது செய்து அழைத்துச் சென்றனர். போலீசு நிலையத்தில் கடுமையாக - காட்டுமிராண்டித்தனமாகத் தாக்கியுள்ளனர். தாங்கள் ம.க.இ.க அமைப்பின் ஆதரவாளர்கள் என்று கூறிய போதும் அமைப்பையும் தரக்குறைவாகப் பேசி தாக்கியுள்ளனர். பார்ப்பன 'ஜெ' ஆட்சியில் போலீசு கும்பல் வெறிபிடித்து கண்ணில் பட்டவர்களை எல்லாம் கடித்துக் குதறத் தொடங்கி விட்டது.

ஏப்ரல் - 22 லெனின் பிறந்த நாளை முன்னிட்டு கரூர், பு.மா.இ.மு. சார்பாக தாந்தோணி மலைப் பகுதியில் அரைக் கூட்டம் நடத்தப்பட்டது. கொடி ஏற்றி லெனின் படம், முழக்கத் தட்டிகள் வைக்கப்பட்டது. லெனினின் வாழ்க்கை வரலாறு பற்றி விளக்கிப் பேசப்பட்டது. மேலும் பகுதியில் உள்ள லெனின் சிலைக்கு மாலை போட்ட சி.பி.ஐ. கட்சியினரிடம் அவ்வாறு செய்ய அவசியமில்லை எனப் பிரச்சாரம் செய்ததோடு மாலையும் எடுக்கப்பட்டது.

உத்தம பாளையம் வட்டாரம் வி.வி.மு. சார்பில் லோயர் கேம்ப் கிளையில் லெனின் 126-வது பிறந்த தின விழா தோழர் இராமையா தலைமையில் நடந்தது. ஊர் பெரியவர்கள் உட்பட சுமார் 200 பேர் விழா கூட்டத்தில் கலந்து கொண்டனர். சிறுவர், இளைஞர்களுக்கான விளையாட்டுப் போட்டி நடத்தப்பட்டதில் 70 பேர் பங்கேற்றனர். விழாவின் அவசியம் குறித்து சிறப்புரையாற்றப்பட்டது. பலத்த மழை பெய்தும்கூட மக்கள் கலைந்து செல்லாமல் இறுதிவரை நிகழ்ச்சிக்கு இருந்து ஆதரவு தந்தனர். பெண்கள் தாமாக முன்வந்து பாட்டுப் போட்டியில் கலந்துகொண்டதும், தொழிலாளர்கள் நன்கொடை அளித்ததோடு அமைப்பில் சேர விருப்பம் தெரிவித்ததும் குறிப்பிடத்தக்கது.




## 'மார்க்சிஸ்டு'களின் நேர்மைக்கு வகைமாதிரி

கடந்த 28-3-94 அன்று சி.பி.ஐ., சி.பி.எம்., பார்வார்டு பிளாக் மூன்று கட்சிகள் இணைந்து தஞ்சையில் பேரணி, பொதுக்கூட்டம் நடத்தின. இதற்கு தமிழகத்தின் பல ஊர்களில் இருந்து அவர்களின் தொண்டர்கள் வாகனங்களில் வந்தனர். லாரி, வேன்கள் எல்லாம் மக்கள் கலை இலக்கியக் கழகத்தின் ஒலிப்பேழைகளான அசுரகானம், இருண்டகாலம் பாடல்களை ஒலிபரப்பிக் கொண்டு வந்ததைப் பரவலாகப் பார்க்க முடிந்தது. சி.பி.எம். தலைமைகள் இந்தப் பாடல்களைப் போடக் கூடாது எனத் தடுத்தும் தொண்டர்கள் மீறி ஒலிப்பரப்பிக் கொண்டு வந்துள்ளனர்.

கலைக் குழுவினர் இதே ஒலிப்பேழைப் பாடல்களைத் திருடி, சிலவரிகளை மாற்றி தமது நிகழ்ச்சிகளில் பாடுவதை சி.பி.எம்., தலைவர்கள் ஊக்குவிக்கின்றனர். அவ்வாறு பொது இடங்களில்பாடும் பொழுது பார்வையாளர்கள் இது ம.க.இ.க., பாடல்கள் என்று சுட்டிக் காட்டினால்கூட நேர்மையுடன் இதை அவர்கள் ஒத்துக் கொள்வதில்லை. ஒருபுறம் உணர்வு பூர்வமாக பாடலைத் திருடி திட்டமிட்டு பாடுவதையும் மறுபுறம் தொண்டர்கள் தாமாக விரும்பி பாடலை ஒலிபரப்பும் போது தடுப்பதையும் பார்க்கையில் அவர்களின் அறிவு நாணயமற்ற செயலும் அச்சமும் அரசியல் ஒட்டாண்டித்தனமும்தான் வெளிப்படுகிறது. "புதிய ஜனநாயகம்", "புதிய கலாச்சாரம்" பத்திரிக்கைகளை படிக்கக்கூடாது என தமது அணிகளுக்கு உத்தரவு பிறப்பித்த 'மார்க்சிஸ்டு'கள் ம.க.இ.க., பாடல்களை கேட்கக் கூடாது என ஏன் உத்தரவு போடவில்லை? உத்தரவு போடுவார்களானால் வரவேற்போம்! ஏனெனில் அடிக்க அடிக்கத்தான் பந்து எகிறும்; முரண்பாடுகளையும் உண்மையையும் தொண்டர்கள் அப்பொழுதுதான் விரைவில் உணர்வார்கள்.

—ம.க.இ.க., தஞ்சை.



படிப்பகம்

www.padippakam.com

## நாட்டை சுடுகாடாக்கும் ''காட்'' உடன்பாடு

ரேஷன் கார்டு மூலம் பொது மக்களுக்கு வழங்கப்படும் மண்ணெண்ணெயின் அளவு மேலும் குறைக்கப்படும் என்று அண்மையில் தமிழக உணவு அமைச்சர் வீரப்பன் அறிவித்துள்ளார். மத்திய அரசின் ஒதுக்கீடு 11,000 கிலோ லிட்டரிலிருந்து 7,000 கிலோ லிட்டராகக் குறைக்கப்பட்டு விட்டதால், அளவைக் குறைப்பதைத் தவிர வேறு வழியில்லை என்று கூறியுள்ளார். இதேபோல சர்க்கரை ஒதுக்கீட்டையும் மத்திய அரசு குறைத்துவிட்டதால், இனி ரேஷனில் வழங்கப்படும் சர்க்கரையின் அளவும் குறைக்கப்படும். டங்கல் திட்டத்தால் (''காட்'') பொது விநியோக முறைக்கு ஆபத்து வராது என்று காங்கிரசு துரோகிகள் நம்பச் சொன்னார்கள். அது எவ்வளவு பெரிய மோசடி என்பது இப்போது நிரூபணமாகிவிட்டது.

இந்தியாவிலேயே தரமான, தரங் குறைந்த தேயிலை ரகங்கள் போதிய அளவுக்கு தாராளமாக உற்பத்தியாகும் போது, வெளிநாடுகளிலிருந்து தேயிலை இறக்குமதி செய்ய மத்திய அரசு முடிவு செய்துள்ளது. இலங்கையில் தேயிலை குறைவான விலைக்குக் கிடைப்பதால், தேசங் கடந்த ஏகாதிபத்திய நிறுவனங்களான புரூக்பாண்ட், லிப்டன், நெஸ்லே முதலானவையும், இந்தியாவின் டாடா டீ, ஏ.வி.டி. போன்றவையும் இலங்கையிலிருந்து தேயிலையையே இறக்குமதி செய்து பின்னர் வெளிநாடுகளுக்கு மறு ஏற்றுமதி செய்ய மத்திய அரசிடம் அனுமதி பெற்றுள்ளன. இதன் விளைவாக உள்நாட்டுத் தேயிலை விற்பனையாகாமல் தேங்கிப் போய் விலை சரிந்துள்ளதோடு, தேயிலை பயிரிடும் சிறு விவசாயிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். கடந்த மூன்று மாதங்களாக ஏற்றுமதிக்காக இந்தியத் தேயிலை வாங்கப்படவேயில்லை. தேக்கம் காரணமாக ஒரு கிலோ தேயிலை ரூ 25-க்கு வீழ்ச்சி அடைந்து விட்டது. நீலகிரி மாவட்டத்தில் மட்டும் தேயிலையைப் பதப்படுத்தும் 40 சிறு ஆலைகள் மூடப்பட்டுள்ளன. 120 ஆலைகள் மூடு விழாவுக்குக் காத்து நிற்கின்றன. தேயிலை பயிரிடும் பருவம் தொடங்கிவிட்ட போதிலும், சிறு விவசாயிகள் எவரும் பயிரிட முன் வரவில்லை. மாற்று வழி தெரியாமல் நீலகிரி மாவட்டத்தில் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிறு விவசாயிகள் பரிதவித்துக் கொண்டிருக்கின்றனர்.

''காட்'' (டங்கல்) ஒப்பந்தத்தால், பணப்பயிர் ஏற்றுமதி பெருகும்; விவசாயிகள் லட்சாதிபதிகளாகி விடுவார்கள் என்று காங்கிரசுத் துரோகிகள் நம்பச் சொன்னார்கள். அது எவ்வளவு பெரிய மோசடி என்பது இப்போது நிரூபணமாகிவிட்டது.

**போராடிய தலித்துகளை நாயைப் போல போலீசார் இழுத்துச் செல்லும் கொடூரம்**



## அம்பேத்காருக்கு அவமரியாதை சாதிவெறி போலீசு அதிகார வர்க்கத்தின் கொட்டம்

உத்திரப் பிரதேச மாநிலத்தில் ஆயிரக் கணக்கான ஏக்கர் நிலங்களை நிலப்பிரபுக்கள் அபகரித்துக் கொண்டிருக்கும் போது, அம்பேத்காருக்கு சிலை வைக்க ஒரு துண்டு நிலத்தைத் தர அதிகாரிகள் அனுமதி மறுத்து வருகிறார்கள். கூட்டணி ஆட்சியில் பங்கேற்றதும், ஒவ்வொரு மாவட்டத்திலும் அம்பேத்காரின் சிலையை நிறுவ பகுஜன் சமாஜ் கட்சி திட்டமிட்டது. இதன்படி மீரட்டில், வீட்டு வசதி வாரிய நிலத்தில் தலித்துகள் சிலையை நிறுவ முற்பட்டதும் அதிகாரிகள் இதற்கு எதிர்ப்பு தெரிவித்து அனுமதி மறுத்தனர். ஆனாலும் தலித்துகள் ஆயிரக்கணக்கில் திரண்டு கடந்த மார்ச் 30-ந் தேதியன்று சிலையை நிறுவினர். அடுத்த சில மணி நேரத்தில் போலீசு துணையுடன் அதிகாரிகள் இச்சிலையை அகற்றிவிட்டனர். இதனால் ஆத்திரமடைந்த தலித்துகள் மறியல் போராட்டத்தில் இறங்கியதும் போலீசு நடத்திய துப்பாக்கிச் சூட்டில் இரண்டு தலித்துகள் பலியாகினர். 25 பேர் படுகாயமடைந்தனர்.

போலீசின் கொலை வெறியாட்டத்தைக் கண்டு மீரட் நகரமே கொந்தளித்தது. தலித்துகள் ஆயிரக் கணக்கில் திரண்டு சாலை மறியலில் ஈடுபட்டதோடு போலீசு நிலையங்களை முற்றுகையிட்டு போராட்டத்தில் இறங்கினர். முலயம்சிங் அரசு கூடுதல் போலீசுப் படையைக் கொண்டு வந்து குவித்து கடுமையாக ஒடுக்கியதும், மூன்று நாட்களுக்குப் பிறகு தலித்துகளின் போராட்டம் முடிவுக்கு வந்தது. போலீசார் 500-க்கும் மேற்பட்ட தலித்துகளைக் கைது செய்து கொட்டடியில் அடைத்து சித்திரவதை செய்தனர். அவர்களது கைகளைக் கட்டி நாயைப் போல வீதியில் இழுத்துச் சென்று அவமானப்படுத்தினர். இத்தனைக்கும் பிறகும் தலித்துகளின் கட்சியான பகுஜன் சமாஜ் கட்சி வாயே திறக்கவில்லை. அம்பேத்கார் சிலையை அகற்றி அவமானப்படுத்திய அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கக் கூட அது கோரவில்லை. கூட்டணி அரசின் பதவி சுகத்தை இழக்கவும் அது தயாராக இல்லை. சாதி வெறிபிடித்த அதிகார வர்க்க - போலீசு - அரசு எந்திரத்தைக் கொண்டே சமூக நீதியை நிலைநாட்டிவிடலாம் என்று அது இன்னமும் பகற்கனவு காண்கிறது. ஆனால் அதன் தவறான அரசியல் கொள்கையால் தலித்துகள் தொடர்ந்து பலியாகி வருகிறார்கள்.

## காங்கிரசு-பி.ஜே.பி. குண்டர்களின் பாசிசக் கூட்டுத் தாக்குதல்

சர்தார் சரோவர் அணைக்கட்டுத் திட்டத்தால் ஏற்படும் பாதிப்புகளையும், இதனால் பல்லாயிரக் கணக்கான பழங்குடி மக்கள் தமது நிலத்தை இழந்து வெளியேற்றப்படுவதையும் எதிர்த்து நர்மதா பாதுகாப்பு இயக்கத்தினர் (NBA) தொடர்ந்து போராடி வருகின்றனர். இதைத் தொடர்ந்து மத்திய சுற்றுச்சூழல்


படிப்பகம்

www.padippakam.com

மந்திரி கமல்நாத், கடந்த மார்ச் 15-ந் தேதியன்று பழங்குடி மக்களுக்கு ஏற்படும் பாதிப்புகளை ஆராய ஓர் உண்மையறியும் குழுவை குஜராத் மாநிலத்துக்கு அனுப்பினார். ஆனால் சர்தார் சரோவர் திட்டத்தை ஆதரிக்கும் காங்கிரசுக் கட்சியும் பாரதீய ஜனதாவும் இதைக் கடுமையாக எதிர்த்து போராட்டத்தில் இறங்கின. மார்ச் 16-ந் தேதியிலிருந்து ஆர்ப்பாட்டம், பேரணிகளை நடத்திய இக்கட்சிகள், உண்மையறியும் குழுவினரை அடித்து விரட்டின. மார்ச் 21 அன்று பரோடாவில் உள்ள நர்மதா பாதுகாப்பு இயக்கத்தின் அலுவலகத்தை முற்றுகையிட்டு அவ்வியக்கத்தின் செயல் வீரர்களையும் மிருகத்தனமாக தாக்கியுள்ளன. காங்கிரசு - பாரதீய ஜனதா தலைவர்களும், எம்.எல்.ஏ.க்களும் தமது குண்டர் படையுடன் வந்து கோப்புகள், புத்தகங்கள், பிரசுரங்கள், வீடியோ சாதனங்கள் முதலானவற்றைச் சூறையாடிச் சென்றனர். போலீசாரோ, நர்மதா பாதுகாப்பு இயக்கத்தினரை வெளியேற்றினார்களே தவிர, குண்டர்களைத் தடுக்கவில்லை.

இதில் கொடுமை என்னவென்றால், குஜராத் மாநில நாளேடுகள் இத்தாக்குதலை வரவேற்றுள்ளன. ''மக்கள் போராட்டம் ஓங்கட்டும், நர்மதா இயக்கத்தினர் வெளியேறட்டும்'' என்றும் தலையங்கம் தீட்டி இப்பாசிசத் தாக்குதலை மேலும் உசுப்பி விட்டுள்ளன. பாரதீய ஜனதா - காங்கிரசு குண்டர்களின் காட்டுமிராண்டித் தனத்தை எதிர்த்து பல்வேறு சுற்றுச் சூழல்வாதிகளும், மனித உரிமை இயக்கத்தினரும் கண்டனம் தெரிவித்த போதிலும், குண்டர்கள் மீது அரசு இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆட்சியாளர்களின் கொள்கைகளையும் திட்டங்களையும் எதிர்ப்போருக்கும் உரிமை அளிப்பது தான் இந்திய ஜனநாயகத்தின் மாண்பு என்று முதலாளித்துவவாதிகள் பீற்றிக் கொள்கிறார்கள். ஆனால் அது எவ்வளவு பெரிய மோசடி என்பதை காங்கிரசு - பாரதீய ஜனதா பாசிச குண்டர்களே தமது ரௌடித்தனத்தால் நிருபித்து விட்டார்கள்.

## சட்டபூர்வமாக வரும் ''தடா'' 'சூத்திர' நீதிபதியின் ஆளும் வர்க்கச் சேவை

காலனிய கால ரௌலட் சட்டத்தைவிட மிகக் கொடிய பாசிசச் சட்டமான பயங்கரவாத ''தடா'' சட்டத்தை ஐந்து உச்சநீதி மன்ற நீதிபதிகள் அடங்கிய குழு, அரசியல் சாசனப்படி செல்லத்தக்கது என்று அண்மையில் தீர்ப்பளித்துள்ளது. இந்தத் தடா சட்டம், அரசியல் சாசனத்தில் வகுத்தளிக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளைப் பறிப்பதால் இதனை ரத்து செய்ய வேண்டும் எனக்கோரி உச்சநீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த 400-க்கும் மேற்பட்ட ரிட் மனுக்களை ஒரே நொடிப் பொழுதில் தள்ளுபடி செய்து இத்தீர்ப்பு எழுதப்பட்டுள்ளது. இதோடு, மற்றுமிரு பாசிசக் கருப்புச் சட்டங்களான பயங்கரவாதப் பகுதி (சிறப்புக்கோர்ட்) சட்டத்தையும், குண்டர்கள் தடுப்புச் சட்டத்தையும் உச்சநீதி மன்றம் சட்டபூர்வமானதாக அங்கீகரித்துள்ளது.

பயங்கரவாதத் ''தடா'' சட்டப்படி, ஒருவரை வெறும் சந்தேகத்தின் அடிப்படையில், முதல் தகவல் அறிக்கை (FIR) கூடத்தராமல், விசாரணையின்றி ஈராண்டுகளுக்குச் சிறையிலடைக்க முடியும். ''தடா'' கைதிகள் பிணையில் வெளிவர முடியாது. விசாரணை ரகசியமாகவே நடக்கும் (அதாவது, அங்கே போலீசாரே நீதிபதிகளாக இருப்பர்). ''தடா'' கைதியிடமிருந்து உண்மையை வரவழைக்க போலீசார் எத்தகைய காட்டு மிராண்டித்தனமான சித்திரவதையும் செய்யலாம். ''தடா'' கைதி தான் குற்றமற்றவர் என்பதை தானே நிரூபித்துக் கொள்ள வேண்டும். இத்தகைய விதிமுறைகள் காலனிய கால ரௌலட் சட்டத்தில் கூட இருந்ததில்லை.



பாசிச வெறியாட்டம்; காங் - பா.ஜ.க. குண்டர்களால் சூறையாடப்பட்ட நர்மதா பாதுகாப்பு இயக்கத்தின் அலுவலகம்.

அடிப்படை ஜனநாயக உரிமைகளையும் உயிர் வாழும் உரிமையையும் பறிக்கும் இக்கொடிய கருப்புச் சட்டத்தைக் கொண்டு பஞ்சாப் போலீசார் பொது மக்களைப் பீதியூட்டிப் பணம் பறிக்கவும், தங்களின் பழி வாங்கும் வெறிக்காகவும் கேடாகப் பயன்படுத்தினர். குஜராத்தில் கைது செய்யப்பட்ட 14,000 ''தடா'' கைதிகளில் தங்களின் உரிமைகளுக்காகப் போராடிய தொழிலாளர்கள், மாணவர்களோடு அப்பாவிப் பெண்களும், ஏதுமறியாக் குழந்தைகளும் கூட அடங்குவர். பம்பாய் குண்டு வெடிப்புச் சம்பவத்துக்குப் பிறகு அப்பாவி முஸ்லிம்கள் மீது இக்கொடிய சட்டத்தை ஏவி காங்கிரசு அரசு வதைத்தது. புலிகளை ஒடுக்குவது என்ற பெயரில், ''தமிழன்'' என்று சொன்னாலே பிரிவினைவாத - பயங்கரவாதப் பீதியூட்டி, புரட்சியாளர்களையும், ஈழவிடுதலை ஆதரவாளர்களையும் 'தடா' சட்டத்தின் கீழ் சிறையிலடைத்தது பார்ப்பன - பாசிச ஜெயா அரசு. பிரதமர் நரசிம்மராவுக்கு எதிராகக் கருப்புக் கொடி காட்டியதைக் கூட பயங்கரவாதமாகச் சித்தரித்து, போராடிய மகளிர் அமைப்பினரை 'தடா' சட்டத்தின் கீழ் சிறையிலடைத்தது ஆந்திர அரசு. நாடு முழுவதும் 1985-லிருந்து 1993 வரை 50,000-க்கும் மேற்பட்டோர் இப்பாசிச சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர். இப்படி அப்பாவிகள் மீதும் அரசியல் பழி வாங்கும் முகமாகவும் இச்சட்டம் கேடாகப் பயன்படுத்தப்படுவதை ஒப்புக் கொண்டுள்ள ராவ் அரசு, இதைக் கட்டுப்படுத்த சட்ட வழிமுறை ஒன்றைக் கொண்டு வரப்போவதாக ஈராண்டுகளுக்கு முன்பு நாடாளுமன்றத்தில் அறிவித்தது. ஆனால் இன்று வரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. மாறாக, தற்போதைய உச்சநீதி மன்றத் தீர்ப்பின் மூலம் ''தடா''வை சட்டபூர்வமானதாக நியாயப்படுத்துகிறது.

இத்தனைக்கும் பிறகும் போலிக் கம்யூனிஸ்டுகள் உள்ளிட்டு எந்தவொரு ஓட்டுக்கட்சியும் இப்



படிப்பகம்

www.padippakam.com

பாசிச சட்டத்தையும் தீர்ப்பையும் எதிர்த்து சிறு முணுமுணுப்பைக் கூட வெளிக்காட்டவில்லை. அதே சமயம், காலனிய கால ரௌலட் சட்டத்தை எதிர்த்து உயிர் நீத்த ஜாலியன்வாலாபாக் தியாகிகளின் 75-வது நினைவு நாளை காங்கிரசு துரோகிகளுடன் சேர்ந்து கோலாகலமாகக் கொண்டாடியுள்ளன.

இச்சட்டத்தைக் கொண்டு வர காங்கிரசு அரசு என்னென்ன வாதங்களைக் கூறியதோ, அவற்றையெல்லாம் நியாயப்படுத்தி இத்தீர்ப்பை வழங்கிய ஐந்து உச்ச நீதி மன்ற நீதிபதிகளின் குழுவின் தலைவராக இருந்தவர், இரத்தினவேல் பாண்டியன் என்ற தமிழர். பிற்பட்டோருக்கான இட ஒதுக்கீடு சலுகையைக் கொண்டு உச்சநீதி மன்ற நீதிபதியாகியுள்ள 'சூத்திரர்'. ஐந்து நீதிபதிகளில் இருவர் சில அம்சங்களில் முரண்பட்டபோது கூட, தமிழனைக் கனவில் கூட அச்சுறுத்தும் ''தடா'' சட்டத்தை அவர் எதிர்க்கவில்லை. தமிழ் நாட்டு சூத்திர நீதிபதி, பாசிச ஆளும் வர்க்கங்களுக்குத்தான் விசுவாசமாகச் சேவை செய்துள்ளார். பார்ப்பனனோ, சூத்திரனோ - எவனாயிருந்தாலும் அரசு உயர் பதவிகளில் இருந்து கொண்டு செய்வதெல்லாம் ஆளும் வர்க்க சேவைதான் என்பதை பாண்டியனாரின் தீர்ப்பு மீண்டும் நிரூபித்துக் காட்டிவிட்டது. பிற்பட்டோர் அரசு உயர் பதவிகளுக்கு வந்தால் சமூக நீதியும், சமூக மாற்றமும் நடக்கும் என்று காதில் பூ சுற்றும் மண்டல் ஆதரவாளர்கள் இதற்கு எப்படி விளக்கமளிக்கப் போகிறார்கள்?

## புரட்சியாளர்களின் மாநாடு புதிய நம்பிக்கை

**கல்கத்தா நகரைக் குலுக்கிய பேரணி; புரட்சியாளர்கள் தலைமையில் புதிய போர்ப்படை.**

நக்சல்பாரி புரட்சிகரக் குழுக்களின் மக்கள் திரள் அமைப்புகள் கூட்டாக நிறுவியுள்ள அகில இந்திய அடக்குமுறை எதிர்ப்பு மக்கள் அரங்கத் (AIPRF) தின் இரண்டாவது மாநாடு கல்கத்தா நகரில் கடந்த மார்ச் 20-21 தேதிகளில் எழுச்சியோடு நடந்துள்ளது. ஆந்திரா, பீகார், மே.வங்கம், மகாராஷ்டிரா ஒரிசா, மத்திய பிரதேசம், கர்நாடகா, தமிழ்நாடு என பல்வேறு



மாநிலங்களிலிருந்து திரண்டு வந்த ஒன்றரை லட்சத்துக்கும் மேற்பட்ட உழைக்கும் மக்கள் நடத்திய பேரணியால் கல்கத்தா நகரமே குலுங்கியது. குறிப்பாக, கூலி-ஏழை விவசாயிகளும், தாழ்த்தப்பட்ட - பழங்குடி மக்களும் பெருந்திரளாகப் பங்கேற்ற இம்மாநாடு, ஏகாதிபத்தியக் கொள்ளையையும், நிலப்பிரபுத்துவ சுரண்டல் - அடக்குமுறையையும் நிர்மூலமாக்க சூளுரைத்ததோடு, ''காட்'' ஒப்பந்தம் கையெழுத்தாகும் ஏப்ரல் 15-ந் தேதியை டங்கல் எதிர்ப்பு - கறுப்பு நாளாகக் கடைபிடிக்குமாறு அறைகூவல் விடுத்தது. நக்சல்பாரி புரட்சியாளர்களின் தலைமையிலான மக்கள் திரள் அமைப்புகள் கூட்டாக நடத்தியுள்ள இம்மாநாடு, உழைக்கும் மக்களிடம் புதிய நம்பிக்கையை விதைத்துள்ளது.

## ராவ் கும்பலின் ரகசிய சதி

நாட்டை ஏகாதிபத்தியங்களிடம் மறு அடகு வைத்துவிட்ட ராவ் கும்பல், இப்போது அமெரிக்காவின் நிர்ப்பந்தத்தால் அணு ஆயுதப் பரவல் தடுப்பு ஒப்பந்தத்தில் (NPT) கையெழுத்திடவும், ''அக்னி'' ஏவுகணைத் திட்டத்தைக் கைவிடவும் உத்தேசித்து வருகிறது. இதற்காக, கடந்த ஏப்ரல் 23-24 தேதிகளில் இந்திய அமெரிக்க அதிகாரிகள் லண்டனில் ரகசியமாகப் பேச்சு வார்த்தைகள் நடத்தியுள்ளனர். இந்தியாவின் வெளியுறவுத்துறை மற்றும் பாதுகாப்புத்துறை அமைச்சகங்களுக்கே தெரியாமல் பிரதமர் அலுவலகத்தால் தேர்வு செய்யப்பட்ட அதிகாரிகளைக் கொண்டு இந்த ரகசிய பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது. இந்தியத் தரப்பில் என். கிருஷ்ணன் என்ற முன்னாள் தூதரக உயரதிகாரி தலைமையிலும், அமெரிக்க தரப்பில் அரசுத்துறை துணைச் செயலர் ராபர்ட் இன்ஹார்ன் தலைமையிலும் அதிகாரிகள் ரகசிய பேச்சு வார்த்தை நடத்தியுள்ளனர். மேலும் இத்தகைய ரகசிய பேரமும் பேச்சுவார்த்தையும் முதன் முறையாக நடப்பதல்ல; நான்காவது முறையாக நடந்துள்ளது.

இந்த உண்மைகள் அம்பலமாகி, நாடாளுமன்றத்தில் எதிர்க் கட்சிகள் கூச்சலிடத் தொடங்கியதும் இந்திய அரசும், அமெரிக்காவும் அப்படி எதுவுமே நடக்கவில்லை என்று திடலடியாக மறுத்தன. பின்னர் மேலும் ஆதாரங்கள் வெளியானதும்; உடல்நிலை சரியில்லை என்று நாடாளுமன்றத்துக்கே வர பயந்து கொண்டு பிரதமர் ராவ் வீட்டிலேயே முடங்கிக் கிடந்தார். இரகசிய பேரம் நடத்திய அதிகாரிகள் மழுப்பினார்களே தவிர, மறுக்கவில்லை. லண்டனிலுள்ள இந்தியத் தூதரகம் வேறுவழியின்றி, பாதுகாப்புப் பிரச்சினைகள் குறித்து இருநாட்டு அதிகாரிகள் மட்டத்தில் பேச்சு வார்த்தை நடத்தப்பட்டதாக இப்போது ஒப்புக் கொண்டுள்ளது.

அமெரிக்காவின் நிர்ப்பந்தங்களுக்குப் பணிந்து அணு ஆயுதப் பரவல் தடுப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட மாட்டோம்; உலக நாடுகள் அனைத்தும் தழுவியதாக இருந்தால்தான் ஒப்பந்தத்தை ஏற்போம் என்று இதுவரை இந்தியா சவடால் அடித்து வந்தது. ஆனால் அமெரிக்கா மனித உரிமை - காஷ்மீர் விவகாரம், சூப்பர் 301 வர்த்தகத் தடைச்சட்டம் முதலானவற்றை ஆயுதங்களாகக் கொண்டு தொடர்ந்து மிரட்டத் தொடங்கியதும், இந்தியா தனது கொள்கையை மாற்றிக் கொண்டு அமெரிக்க நிர்ப்பந்தங்களுக்குப் பணிந்து போக தீர்மானித்து விட்டது. மே 19-ல் ராவும் - கிளிண்டனும் சந்திப்பதற்கு முன்னேற்பாடாகவே இந்த ரகசிய பேரமும் பேச்சுவார்த்தைகளும் நடந்துள்ளன.

இந்தியாவின் தலைவிதியையும் பாதுகாப்பையும் அமெரிக்காவின் காலடியில் தள்ள ராவ் துரோகக்



படிப்பகம்

www.padippakam.com

கும்பல் எத்தகைய ரகசிய சதிச் செயல்களையும் செய்யத் தயங்காது என்பதையே இது மீண்டும் நிரூபித்துக் காட்டுகிறது. காங்கிரசு கும்பலை இன்னும் விட்டு வைத்தால் நாட்டையே ரகசியமாக ஏலம் போட்டு விற்று விடுவார்கள்!

## யானைக்காலாக பணவீக்கம் திவாலாகும் பொருளாதாரம்

பணவீக்கமும் விலைவாசியும் உயராது என்று நம்பச் சொல்லி காங்கிரசு துரோகிகள் பட்ஜெட்டைச் சமர்ப்பித்த இரு மாதங்களுக்குள், பணவீக்கம் 17% ஆக உயர்ந்துவிட்டது. 1991-ல் ராவ் கும்பல் ஆட்சிக்கு வந்ததும் ஏகாதிபத்தியங்களின் நிர்பந்தப்படி ரூபாயின் மதிப்பைக் குறைத்து பணவீக்கத்தை தீவிரமடையச் செய்தது. பின்னர் கடந்த ஈராண்டுகளாக புள்ளி விபர - சதவீதக் கணக்குகளைக் காட்டி சதிராடி, பணவீக்கம் குறைந்துவிட்டதாக நம்பச் செய்தது. இப்போது எல்லா பித்தலாட்டங்களும் அம்பலப்பட்டு, ஒற்றை இலக்கமாக இருந்த பணவீக்கம் இரட்டை இலக்கமாக உயர்ந்துவிட்டது. இரட்டை இலக்க பணவீக்கம் என்பது பொருளாதாரம் திவாலாகும் திசையில் செல்வதையும், பொருளாதாரத்தின் மீது தனது பிடியை அரசாங்கம் இழந்துவிட்டதையும் நிரூபிக்கிறது என்று முதலாளித்துவவாதிகளே இப்போது ஒப்புக் கொள்கின்றனர்.

பட்ஜெட் சமர்ப்பிக்கப்பட்ட போது அந்நியச் செலாவணி இருப்பு ரூ. 39,000 கோடியாக உயர்ந்துள்ளது என்று பெருமையாக நிதியமைச்சர் குறிப்பிட்டார். டாலருடன் ரூபாயை இணைத்து நாணய மாற்றத்துக்கு தாராள வழிவகை செய்ததும் பங்குச் சந்தையில் கோடிக்கணக்கில் அந்நிய மூலதனம் பாயத் தொடங்கியதைக் கண்டு, இந்தியப் பொருளாதாரம் நாலுகால் பாய்ச்சலில் முன்னேறுவதாக நிதியமைச்சர் பீற்றிக் கொண்டார். ஆனால் தொழில் வளர்ச்சியோ 4%-ஐத் தாண்டவில்லை. அதே சமயம் பணவீக்கமோ 17% ஆக உயர்ந்தது. நிதிப்பற்றாக்குறையோ 65,000 கோடியிலிருந்து 95,000 கோடியாக அதிகரித்துவிட்டது. இதன் விளைவாக ரூபாயின் மதிப்பு இனி செல்லாக் காசாகிவிடும்.

சுருக்கமாகச் சொன்னால், பண வீக்கம் என்பது அறிவிக்கப்படாத மற்றொரு விலையேற்றம்! உழைக்கும் மக்களின் ஊதியத்தை மதிப்பிழக்கச் செய்யும் மற்றொரு மறைமுக வரி. காங்கிரசுத் துரோகிகள் நாட்டை ஏகாதிபத்தியங்களிடம் மறு அடகு வைத்து விலையேற்றத்தையும் வேலையின்மையையும் பெருக்கியதோடு, பண வீக்கத்தின் மூலம் உழைக்கும் மக்களின் உண்மை ஊதியத்தையும் வீழ்ச்சியடையச் செய்து வறுமைப் படுகுழியில் தள்ளிவிட்டுள்ளனர். இனி பூசணிக்காய் அளவுக்குப் பணத்தைக் கட்டிக் கொண்டு போய், சுண்டைக்காயைத் தான் வாங்க முடியும்! புரிந்து கொள்ளுங்கள், இதுதான் புதிய பொருளாதாரக் கொள்கையின் 'சாதனை!'

## பழப்பண்ணைகளால் பாழாகும் விவசாயம்

இமயமலைப் பகுதியில் தீவிர ஆப்பிள் சாகுபடி திட்டத்தின் விளைவாக அங்கு சுற்றுச்சூழல் கடுமையாகப் பாதிக்கப்பட்டு வருகிறது. இங்கு ஆண்டுக்கு 10 லட்சம் டன் ஆப்பிள் உற்பத்தியாகிறது. ஆனால் ஆப்பிள்களைப் பெட்டிகளில் அடைப்பதற்காக ஆண்டுக்கு ஏறத்தாழ ஒரு லட்சம் டன் அளவுக்கு மரங்கள் வெட்டப்பட்டு வருகின்றன. உலக வங்கி, ஐரோப்பிய பொருளாதாரச் சமூகம், எப்.ஏ.ஓ. ஆகியவையும் இந்தோ - இத்தாலியக் கூட்டு நிறுவனமும் ஆப்பிள் பயிரிடவும் ஏற்றுமதி செய்யவும் இந்தியாவுக்குக் கோடிக் கணக்கில் கடன் கொடுத்துள்ளன. இதன் விளைவாக, மத்திய இமயமலைப் பகுதியில் ஒரு லட்சம் ஹெக்டேர் ஓக் மரக்காடுகள் அழிக்கப்பட்டு ஆப்பிள் பயிரிடப்படுகிறது. இதுதவிர ஆப்பிள் பழப் பண்ணைகளுக்கு சாலை போடப்பட்டு 40,000 கி.மீ. அளவுக்கு காடுகள் அழிக்கப்பட்டுள்ளன.



ஆப்பிள் பயிரை கணக்கற்ற நோய்களும், பூச்சிகளும் தாக்குவதால், பெருமளவு ரசாயன உரங்களும் பூச்சிக் கொல்லி மருந்துகளும் பயன்படுத்தப்படுகின்றன. இதனால் காட்டுப் பகுதியிலுள்ள அரிய தாவரங்களும் மூலிகைகளும், நன்மை செய்யும் பூச்சியினங்களும் அழிந்து வருகின்றன. குறிப்பாக, கார்வால் பகுதியில் ''மாசீர்'' எனும் அரிய மீன் இனம், ரசாயன மருந்துப் பெருக்கத்தால் அழிந்தே போய்விட்டது. இதோடு இமயமலைப் பிராந்திய நதிகளும் ஆறுகளும் மட்டுமின்றி வங்காள விரிகுடாக் கடலே நஞ்சாகிப் போயுள்ளதாக சுற்றுச்சூழல்வாதிகள் கூறுகின்றனர்.

இதுதவிர, ஆப்பிள் பயிருக்குத் தொடர்ச்சியாக தண்ணீர் வேண்டும். இதற்காக, நிலத்தடி நீரை வரைமுறையின்றி உறிஞ்சி எடுப்பதால், சுற்றுப்புற பகுதிகளில் தண்ணீர் வற்றிப்போய் விவசாயமே செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. மேலும், காடு அழிப்பினாலும் நிலத்தடி நீரை உறிஞ்சி எடுப்பதாலும் இப்பகுதியில் மண் சரிவும் நில நடுக்கமும் ஏற்படும் பேரபாயம் பெருகியுள்ளது. இதில் வேடிக்கை என்னவென்றால், பழப் பண்ணைகளை நிறுவி காடுகளை நாசமாக்கும் அதே ஏகாதிபத்தியங்கள்தான், காடு வளர்க்கவும் கடன் கொடுக்கிறது. ஏகாதிபத்தியங்களின் பித்தலாட்டத்திற்கு இதைவிட வேறு சான்று தேவையில்லை. அண்மைக்காலமாக ஏகாதிபத்திய நாடுகளுக்குப் பழங்களையும் தேக்கு மரங்களையும் ஏற்றுமதி செய்யும் நோக்குடன் பங்குச் சந்தை திடீர் முதலாளிகளும், நிலப்பிரபுக்களும் கோடிக்கணக்கில் முதலீடு செய்து நன்செய் நிலங்களை வளைத்துப் போட்டு வருகின்றனர். சுற்றுச்சூழலை மட்டுமின்றி இந்திய விவசாயத்தையே நாசமாக்கும் இத்தகைய நாசகாரப் பண்ணைகளுக்கு எதிராக விவசாயிகள் கிளர்ந்தெழுந்து போராட வேண்டியதுதான் இனி பாக்கியிருக்கிறது.

**60 நாட்களில் பணவீக்கம். 17% ஆக உயர்ந்து விட்டது; பொருளாதாரத்தின் மீதான பிடியை இந்திய அரசு இழந்து வருகிறது.**


படிப்பகம்

www.padippakam.com




● முற்போக்கு சக்திகள் இணைந்த கூட்டணி ஆட்சி முறை இந்தியாவில் அமையுமா?

-ரா. நாச்சிமுத்து, போடி.

☆ ''முற்போக்கு சக்திகள்'' என்று எவற்றைக் குறிப்பிடுகிறீர்கள் என்று தெரியவில்லை. இன்றைய நாடாளுமன்ற ஆட்சி முறையை ஏற்றுக் கொண்டுள்ள எல்லா அரசியல் கட்சிகளும்தாம் தம்மை முற்போக்கு சக்தி என்று கூறிக் கொள்கின்றன. தமிழக காங்கிரசு, ஜெயலலிதாவால் துரத்தப்பட்ட முன்னாள் அமைச்சர்கள், சுப்பிரமணியசுவாமி, இன்னும் பிற அனோமதேயங்கள் தற்போது இணைந்து அமைத்துள்ள கூட்டணிக்கும் கூட ''முற்போக்கு'' என்று பெயர் சூட்டியுள்ளனர். இது ஒருபுறம் இருக்க, இந்தியாவின் தற்போதைய நாடாளுமன்ற ஆட்சி முறைப்படியான ஒரு கட்சி ஆட்சி நீடிப்பதற்கான வாய்ப்பு குறைந்து கொண்டே போகிறது. ஆகவே, ஒரு குறிப்பிட்ட காலம் தற்காலிகமாகவேணும் ''கூட்டணிக் கூத்து'' நடப்பதற்கு வாய்ப்பிருக்கிறது. ஆனால் அது முற்போக்கு சக்திகளின் கூட்டணியாக இருக்காது; சந்தர்ப்பவாத, பிழைப்புவாதக் கூட்டணியாகவே இருக்கும்.

● அறிவொளி இயக்கம் என்றால் என்ன? அரசும்-அதன் உறுப்புகளும் அதற்கென தயாரிப்புகளும், இயக்கமும் பெருமளவில் எடுத்துச் செல்கின்றனவே, ஏன்? அறிவுஜீவிகளும் அவ்வியக்கத்தில் தங்களை ஈடுபடுத்துவது ஏன்? தமிழ் நாட்டிலேயே பசும்பொன் மாவட்டத்தை முழு எழுத்தறிவு பெற்ற மாவட்டமாக அறிவித்தார்கள். இருப்பினும் இம்மாவட்டத்தில் 'கை' நாட்டு வைப்போர் பெரும்பான்மையாக இன்றுவரை இருக்கிறார்கள், ஏன்? அறிவொளி இயக்கத்தால் யாருக்கென்ன பயன்? அதன் நோக்கமென்ன?

-க.சோ.நன்னன், மானாமதுரை

☆ 1984-ல் பாசிச ராஜீவ் ஆட்சிக்கு வந்ததும் பகட்டான சில திட்டங்களை அறிவித்தார். அவற்றில் இந்த நூற்றாண்டு முடிவதற்குள் ''அனைவருக்கும் கல்வி'', ''அனைவருக்கும் அடிப்படை சுகாதாரம்'' போன்றவை சில. ஆனால் அவை அவரது ஆட்சிக் காலத்திலேயே கருச்சிதைவடைந்து விட்டன. அதே சமயம், கேரளத்தில் சில தன்னார்வக் குழுக்கள் ஒரு சில மாவட்டங்களில் அனைவருக்கும் குறைந்தபட்சம் எழுத்தறிவிப்பது - எழுதவும் படிக்கவும் பயிற்றுவிப்பது - என்ற திட்டத்தை மேற்கொண்டன. கல்லூரி மாணவ - மாணவிகள், படித்த இளைஞர்கள் இதற்காகப் பணியாற்ற ஆர்வமுடன் முன்வந்தனர். ஒரு சில மாவட்ட ஆட்சியாளர்களும் சிறிது ஒத்துழைப்பு வழங்கினர். இந்தப்பணி பரவி, வளர்ந்து ஒரு சில ஆண்டுகளில் சில மாவட்டங்களும், பிறகு முழுமாநிலமும் எழுத்தறிவு பெற்றதாக அறிவித்து மாநாடு கூட்டிக் கொண்டாடினர்.

இந்த முயற்சியை முன் மாதிரியாகக் கொண்டு மத்திய - மாநில அரசுகளின் உதவியுடன், தன்னார்வ-சமூக சேவை அமைப்புகளை முன்னிறுத்தித் துவங்கப்பட்டது தான் அறிவொளி இயக்கம். பின்னர் அது நேரு இளைஞர் மையம் (நேரு யுவக் கேந்திரா) போன்று மாவட்ட ஆட்சியாளர்களின் மூலம் அரசு மறைமுகமாக இயக்குவதானது. சில மாவட்ட ஆட்சியாளர்களுக்கு சீர்திருத்த சமூக சேவையாகவும், சிலருக்குப் பொழுது போக்காகவும், சிலருக்கு சுய விளம்பரத்துக்காகவும், சிலருக்கு அதிகாரம் செலுத்தும் இன்னொரு வாய்ப்பாகவும் இந்த அறிவொளி இயக்கம் மாறிவிட்டது. இதில் கணிசமான அளவு உள்நாட்டு, வெளிநாட்டு நிதி புரளுவதால் காங்கிரசு, அதிமுக மற்றும் போலிக் கம்யூனிஸ்ட் கட்சிகள் நல்ல மேய்ச்சல் நிலமாகக் கருதிப் புகுந்து கொண்டுள்ளன. குறிப்பாக, இதன் காரணமாகவே ''மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு'' கட்சியின் ஆசிரியர் சங்கமும், இளைஞர் அமைப்பும் அதிக ஈடுபாடு காட்டுகின்றன. இந்த இயக்கத்தினைச் சிலர் தமது ஒழுக்கக் கேட்டிற்குப் பயன்படுத்துவதாக கோவை போன்ற இடங்களில் இருந்து செய்திகள் வந்துள்ளன. சொந்த ஆதாயம் கருதியும், சீர்திருத்தவாத சுயதிருப்தி காரணமாகவும் அறிவுஜீவிகளில் சிலர் இவ்வியக்கத்தில் ஈடுபடுகின்றனர். அமெரிக்கா, ஐரோப்பிய சமூகம், ஜப்பான் போன்ற மேல்நிலை வல்லரசுகளின் நலன்களுக்காக இயங்கும் உலகவங்கி, சர்வதேச நிதிநிறுவனம் ஐ.எம்.எஃப், ஆகியவற்றின் உத்திரவுப்படி வரும் புதிய பொருளாதாரக் கொள்கைக்கு இந்த நாட்டின் மேட்டுக் குடியினரைக் கொண்ட விரிந்த சந்தையை மட்டுமல்ல; குறைந்த பட்ச கல்வி, மற்றும் வாழ்நிலையைக் கொண்ட மலிவான உழைப்புச்சந்தையும் அவசியமாக உள்ளது. ஆகவே, மேலை நாடுகளில் கஞ்சித் தொட்டி, வேலையற்றோர் ஊதியம் போன்ற திட்டங்கள் இருப்பதைப் போல இங்கே சத்துணவுத்திட்டம், முதியோர் ஊதியம், அறிவொளி இயக்கம் போன்றவை துவங்கப்படுகின்றன. எல்லா அரசுத் திட்டங்களிலும் இருப்பதைப் போல — குடும்பக்கட்டுப்பாட்டில் முதியோருக்கும், மணமாகாதவருக்கும் அறுவைச் சிகிச்சை செய்து கணக்குக் காட்டுவது போல — எழுத்தறிவிப்பதிலும் முழுநிறைவு பெற்றதாக மோசடி செய்யப்படுகிறது.

## அறிவொளி இயக்கம் நோக்கம் என்ன?

● ''பார்ப்பனருக்கு உத்தியோகம் கொடுப்பதை நிறுத்திவிட்டால் லஞ்சப்பழக்கம் நின்றுவிடும். ஏனென்றால் பார்ப்பனருக்குத் தேவை அதிகம்'' - 17.1.1991-ல் திராவிடர் கழகம் வெளியிட்டுள்ள ''அய்யாமொழி'' (பெரியார் பொன் மொழிகள்) என்ற கையடக்க நூலில் (பக்.58) இந்தப் பொன்மொழி அமைந்துள்ளது (பெரியார் சொன்னதாக). இது எவ்வகையில் ஏற்புடையது?

-கவிஞர் நவதிலக், மானாமதுரை.

☆ இதே பெரியார்தான் பின்வருமாறு கூறியதாக 20.3.94 விடுதலை செய்தி வெளியிட்டது. ''தேர்தலில் கம்யூனிஸ்டுகளை ஆதரித்தோம். நான் படாதபாடுபட்டு, கஷ்டப்பட்டு உழைத்து வெற்றி தேடித்தந்தோம். அவர்கள் வெற்றி



படிப்பகம்

www.padippakam.com

கிடைத்ததும் நம்மைப் பற்றி எந்த விதமான கவலையும் படாமல் ஆந்திரப் பார்ப்பனர் பிரகாசத்திடம் போய்க் கெஞ்சினார். இது கூடாது என்று நான் எண்ணினேன். இந்தச் சமயத்தில் எழுதினேன் தைரியமாக கம்யூனிஸ்ட் மூலம் பிரகாசம் வருவதை விட, காங்கிரசு கட்சியைச் சார்ந்த ஆச்சாரியார் வருவது நல்லது என்றேன். ஆச்சாரியருக்கு என் ஆதரவு முழுவதும் கிடைக்குமென்றேன், மற்றவர்கள் திட்டும் பொழுதும் கூட, அவரை நான் ஆதரித்தேன்; அவர் இலஞ்சத்துக்கு வழிவிடமாட்டார் என்றேன்; இந்த எம்.எல்.ஏ.க்களை வாலாட்ட விடமாட்டேன்''. இப்படிச் சயமுரண்பாடுகளைக் கொண்டவராகத்தான் பெரியார் இருந்தார். இதையே வீரமணி வசதிக்கேற்பப் பயன்படுத்திக் கொள்கிறார்.

நமது கருத்துப்படி, பார்ப்பனர்களா, அல்லாதவர்களா என்ற அடிப்படையில் யார் லஞ்ச ஊழலில் ஈடுபடமாட்டார்கள் என்று பார்ப்பதே தவறானது. இந்த பார்ப்பனர்கள் கடவுளுக்கும், சட்டத்துக்கும் பயந்து நேர்மையானவர்கள்; ஆகவே லஞ்சஊழல், அதிகார முறைகேடுகளில் ஈடுபட மாட்டார்கள் என்று ராஜாஜி, காமராஜ் ஆட்சிக் காலத்து சம்பவங்கள் சிலவற்றைத் திரும்பத் திரும்பக் கூறி பார்ப்பன ஏடுகள் பொய்ப்பிரச்சாரம் செய்கின்றன. அந்தக் காலத்திய மூந்தார வழக்கில் டி.டி. கிருஷ்ணமாச்சாரி சிக்கியதில் இருந்து சமீபத்திய வங்கி-பங்குச் சந்தை மோசடி வரை பார்ப்பனர்கள்தாம் நேர்மையானவர்கள் என்ற பிரச்சாரம் பொய்யானதென நிரூபித்து விட்டன. அதேபோல பார்ப்பனர்கள் தாம் லஞ்ச ஊழல், அதிகாரமுறைகேடுகளில் ஈடுபடுவார்கள்; பார்ப்பனர்கள் அல்லாதவர்கள் ஈடுபடமாட்டார்கள் என்கிற பொருள்படும் பெரியாரின் பொன்மொழியும் தவறானதுதான்! கருணாநிதி, எம்.ஜி.ஆர் ஆட்சிக்காலத்தில் இதை நம்முன்னே காணவில்லையா? பெரியார் காட்டிய அந்த தவறான நிலைப்பாடு இப்போது பரிணாம வளர்ச்சியடைந்து விட்டது, கையுங்களவுமாகப் பிடிபட்ட சுகாதாரத்துறைச் செயலாளர் இன்பசாகரன், உச்சநீதி மன்ற நீதிபதி ராமசாமி போன்ற லஞ்ச ஊழல் பேர் வழிகள், தாம் பார்ப்பனர் அல்லாதவர் என்பதற்காக பழிவாங்கப்படுவதாகக் கூறித் தப்பித்துக் கொள்வதும், வீரமணிகள் அதற்கு வக்காலத்து வாங்குவதும் இதையே காட்டுகின்றன.

● *பஞ்சாபையும், காஷ்மீரையும் தனித்தனி நாடுளாக்கித் தரும்படி தீவிரவாதிகள் போராடுகின்றனர். இதனை இந்திய அரசு துப்பாக்கியால் அடக்கிக் கொண்டிருக்கிறது. தனிநாடு கேட்டால் கொடுத்துவிட வேண்டியது தானே! இதனால் இந்திய அரசுக்கு என்ன நட்டம்? அப்பேற்பட்ட பெரிய வல்லரசு ரஷியாவே துண்டுதுண்டாகி பலதனி நாடுகளாகப் பிரியும் போது இந்தியா பல துண்டுகளாக போனால்தான் என்ன? தனியாகப் பிரிந்து சென்றால் மக்களுக்கு ஒரு வேளை ஏதேனும் நன்மைகள் கிடைக்க வாய்ப்பு உள்ளதா?*

*-டி.சீனுவாசன், காடாம்புலியூர்.*

☆ காஷ்மீரில் யாரும் தனிநாடு கோரவில்லை; ஜம்மு-காஷ்மீர் விடுதலை முன்னணி சுயநிர்ணய உரிமை கோரித்தான் போராடுகிறது. பாகிஸ்தான் ஆதரவு மதவாதக் குழுக்கள் காஷ்மீரைப் பாக்.குடன் இணைக்கக் கோருகின்றன. பஞ்சாபில் ஒரு பிரிவு சீக்கியத் தீவிரவாதிகள் மட்டுமே காலிஸ்தான் என்ற தனி நாடு கோருகின்றனர்; அகாலிக் கட்சிகள் கேட்பது மாநில சுயாட்சி தான். ஆனால் பஞ்சாப், காஷ்மீர் உட்பட எல்லா தேசிய இனங்களுக்கும் இந்தியாவுடன் இணைந்திருக்கவோ, பிரிந்து போகவோ சுயநிர்ணய உரிமை வேண்டும் என்கிறோம், நாம். ஆனால் துப்பாக்கி முனையில் தேசிய இனங்களை அடைத்து வைத்திருக்கிறது இந்திய அரசு. சுயநிர்ணய உரிமை கோரும் இயக்கங்களை பயங்கரவாதிகள் - பிளவுவாதிகள் என்று முத்திரை குத்தியும், இந்தியா எப்போதும் ஒரு நாடாக இருந்து வந்திருக்கிறது என்று புளுகியும், தேசிய ஒருமைப்பாடு - ஐக்கியம் என்று கூப்பாடுபோட்டும் வருகிறது. தனிநாடு என்ன? சுயநிர்ணய உரிமை என்கிற ஜனநாயக உத்திரவாதம் தருவதற்குக் கூட மறுத்துவருகிறது. இந்தியத் தரகு அதிகார வர்க்க முதலாளிகளின் வேட்டைக்காடாக பஞ்சாபையும், காஷ்மீரையும் தக்கவைத்துக் கொள்ள வேண்டும் என்பதுதான் இதன் நோக்கம். இப்போது இந்திய அரசின் கீழுள்ள பகுதிகள் மட்டுமல்ல; தெற்கே இலங்கை, மாலத்தீவு, மேற்கே பாகிஸ்தான், ஆஃப்கானிஸ்தான், வடக்கே நேபாளம், திபேத், பூடான், கிழக்கே பர்மா ஆகியவையும் இணைந்த ''அகண்ட பாரதம்'' அடையவேண்டும் என்பதுதான் இந்திய ஆளும் வர்க்கங்களின் பேராசை. அப்படி இருக்கும்போது பஞ்சாபையும், காஷ்மீரையும் விட்டுவிட அவர்களுக்கு மனம் ஒப்புமா?

## லஞ்சம் ஒழிய பார்ப்பனர்களின் வேலை ஒழியணுமா?

● *உங்கள் கருத்துப்படி நாட்டை ஆள்வது மறைமுகமாக நிலப் பிரபுக்கள் மற்றும் தொழில் அதிபர்கள் என்றால், இலங்கைக்கு நாடுபிடிக்கும் ஆசையுடன் இந்திய இராணுவம் சென்றபோது எந்தவகையில் இவர்கள் அந்தச் செயலுக்கு ஆதரவு கொடுத்தார்கள்? அவ்வாறு பிறநாடுகளை ஆக்கிரமிப்பதன் மூலம் நிலப் பிரபுக்கள், தரகு முதலாளிகளுக்கு என்ன நன்மை?*

*-ரமேஷ், சேப்ளாநத்தம்.*

☆ தெற்கு ஆசியா முழுவதையும் கைப்பற்றித் தனது மேலாதிக்கத்தை நிறுவுவதன் மூலம் தமது அகண்ட பாரதக் கனவை ஈடேற்றிக் கொள்ளும் துணை வல்லரசு விரிவாக்கக் கொள்கையை இந்திய ஆளும் வர்க்கங்கள் நீண்ட காலமாகப் பின்பற்றி வருகின்றன. இதற்காக தமது கைக்கருவியான இந்திய அரசாங்கத் தூண்டுவதும் தமது கட்டுப்பாட்டில் உள்ள மக்கள் தொடர்பு சாதனங்கள் மூலம் ''தேசிய'' வெறி, யுத்தவெறி கிளப்புவதும், யுத்தத் தயாரிப்பு நிதியளிப்பதும் என்று மறைமுகமாக ஆளும் வர்க்கங்கள் செயல்படுகின்றன. கிழக்கு பாகிஸ்தானாக இருந்த கிழக்கு வங்கத்துக்குள் இந்திய இராணுவத்தை ஏவி, அதை வங்கதேசமாக மாற்றிய சிறிதுகால ஆக்கிரமிப்புக்குள்ளாகவே இந்தியத் தரகு முதலாளிகளின் பொருட்கள் அங்கு குவிக்கப்பட்டன; உலக சணல் உற்பத்தியில் தெற்கு ஆசியா ஏகபோக நிலை வகிக்கிறது; அதில் தனது பிடியை மேலும் வலுப்படுத்திக் கொள்ள வங்கதேச சணலைக் கடத்தி வந்து இந்தியாவில் குவித்தது. இது போல தனது சந்தையை விரிவுபடுத்திக் கொள்ள இலங்கை-ஈழ ஆக்கரமிப்பு பயன்படும் என்று இந்தியத் தரகு முதலாளிகள் கருதினர். அரசர்கள் ஆண்ட காலத்தைப்போல பிரபுத்துவ நிலப்பிரபுக்களுக்கு அந்நிய ஆக்கிரமிப்பு நேரடிக் கொள்ளைக்குப் பயன்பட்டது; அதைப்போல இன்றைய நிலப்பிரபுக்களுக்கு அந்நிய ஆக்கிரமிப்பு பயன்படாது; என்றாலும் அவர்களின் ''அகண்ட பாரதம்'' போன்ற ஆதிக்க வெறிக்குத் தீனி போடுவதாக இருக்கும்.



படிப்பகம்

www.padippakam.com

# பெரியாரை வீரமணியிடமிருந்து விடுதலை செய்வோம் வாரீர்!

திராவிடர் கழகத்தின் ஒரு பிரிவுத் தலைவரான கி.வீரமணி மானமிழந்து அப்பட்டமாகவே பார்ப்பன பாசிச ஜெயாவின் பாதச் சேவையில் இறங்கி விட்டார்; வேறு எந்த பார்ப்பன எதிர்ப்பு அமைப்பையும், குறிப்பாக புதிய ஜனநாயகத்தைக் குறை கூறும் தார்மீக உரிமை இனிமேலும் அவருக்குக் கிடையாது; ஆகவே, பு.ஜ.வுக்கு எதிரான 'விடுதலை' தொடருக்கு நாம் பதில் எழுத வேண்டிய அவசியமில்லை; பார்ப்பன எதிர்ப்பில் அவரது துரோகமும், பு.ஜ.வின் உறுதியும் நடைமுறையில் நிரூபிக்கப்பட்டு விட்டது - என்று பல தோழர்களும் கருத்துத் தெரிவித்தனர். அது உண்மை தான். ஆனாலும் பு.ஜ.வுக்கு எதிராகவும் தன்னை நியாயப்படுத்தியும் வீரமணி கும்பல் பரப்பியுள்ள தவறான கருத்துக்களை முறியடிக்க வேண்டியதன் அவசியம் கருதி இத் தொடரை மேலும் தொடர்கிறோம்.

புதிய ஜனநாயகம் உறுப்பினராகவோ, தலைமைக்கோ பார்ப்பனரை வைத்துக் கொள்வதும் கொள்ளாததும் அதன் உரிமம் என்று கூறுகிறது ''விடுதலை'' ஏடு. ''அதைப் போல, பார்ப்பனர்

களால் நீண்ட நெடுங்காலமாக பாதிக்கப்பட்ட ஒரு சமுதாயம் தங்கள் உரிமைக்கும் - மேம்பாட்டிற்கும் பாடுபடுவதற்கு ஒரு அமைப்பை உருவாக்கி செயல்படுவதற்கு உரிமையிருக்கிறது அல்லவா? தங்கள் உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்ள அந்த அமைப்பில் பார்ப்பனர்களைச் சேர்த்துக் கொள்ளக் கூடாது என்பதும் நியாயமான உரிமை தானே! இந்த அடிப்படையில் 1916 - இல் உருவானது தானே நீதிக்கட்சி என்னும் தென்னிந்திய நலவுரிமைச் சங்கம்?'' என்று கேட்கிறது விடுதலை.

மேல்கரையில் நின்று கொண்டு ஓடை நீரைக் கலக்கி விடும் நரி, ஆட்டுக்குட்டியின் மீது பழி போடுவதைப் போன்று கேள்விகள் கேட்கிறது, விடுதலை. இவர்களோ, இவர்களது முன்னோடிகளான நீதிக்கட்சியினரோ ஒரு அமைப்பை உருவாக்கிக் கொள்ளவும், அதில் பார்ப்பனர்களைச் சேர்க்காமல் இருக்கவும் உரிமை இல்லை என்று எங்கேயாவது நாம் கூறினோமா? இல்லையே! பின் இந்தக் கேள்வியை ஏன் எழுப்ப வேண்டும்? பார்ப்பனப் பிறப்பாளர்களிடம் எத்தகைய அணுகுமுறை வைத்துக் கொள்வது என்பதற்கான உரிமை உண்டு என்று கூறும் இவர்கள் தானே அந்த உரிமையை மறுக்கும் வகையில் நமக்கு எதிராக அவதூறு செய்வதும், முத்திரை குத்துவதும் தமது நடைமுறையாகக் கொண்டிருக்கிறார்கள்.

உண்மையில் நாம் கூறுவதெல்லாம், பார்ப்பனர்களால் நீண்ட நெடுங்காலமாக பாதிக்கப்பட்ட ஒரு சமுதாயத்தின் பெயராலும், அதன் உரிமைக்கும் - மேம்பாட்டிற்கும் பாடுபடுவதாகவும் வீரமணி கும்பலும் அதன் முன்னோடிகளும் உரிமை கொண்டாட முடியாது என்பது தான்; ஏனென்றால் இவர்கள் நீண்ட நெடுங்காலமாக பார்ப்பனர்களுடன் கூட்டுச் சேர்ந்து தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட உழைக்கும் மக்களை அடக்கி ஒடுக்கி வந்த முன்னாள் அரசர்கள், நிலப்பிரபுக்கள், மிட்டா - மிராசுகள், பெரும் வணிகரின் பிரதிநிதிகள் தாம்!

இந்த நீதிக்கட்சித் தலைவர்களைப் பற்றி அண்ணாதுரை என்ன எழுதினார், ''அன்று (1937-ஆம் ஆண்டு) நாம் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி நடத்திய போது இந்த அரண்மனைவாசிகளின், ஆகாப் பேர்வழிகளின் தொடர்பு இருந்தது. தொடர்பு தான் தோழமை அல்ல.... அந்தத் தொடர்பு நம்மை வேறு கட்சியினர் அலட்சியமாகக் கருதவே உதவிற்று. சீமான்கள் மோகனப் புன்னகையை நம் பக்கம் சில சமயம் வீசுவர். கொள்கையைப் பற்றிய திட்டம் என்றாலோ எள்ளும் கொள்ளும் அவர்கள் முகத்தில் வெடிக்கும். காங்கிரசை எதிர்க்க ஒரு படை திரட்டி தயாராக வைத்திருப்பதாக துரைமார்களிடம் கூறி, சுயலாபம் தேடிக் கொள்வதொன்றே அரண்மனையில் அரசியல் நடத்திய அந்த அபூர்வ மனிதர்களின் நோக்கம்'' (அண்ணாதுரை, ஜமீன் இனாம் ஒழிப்பு)

மேலும் அவர் எழுதுகிறார், ''தஞ்சை மாவட்டத்தில் சாம்ப சிவ அய்யர், சாமியப்ப முதலியார் - ஆரியர் - திராவிடர் என்று நாம் நினைக்கிறோம். ஒருவரைக் காங்கிரசு என்றும் மற்றவரை ஜஸ்டிஸ் என்றும் சொல்கிறோம். அவரவர்களுக்கு வேறு வேறு கொடி இருப்பதாக நாம் எண்ணுகிறோம். பெருமையுடன் பேசிக் கொள்கிறோம்.

''குத்தகை - வாரத் தகராறு - இவைகளின் காரணமாகக் கிளர்ச்சி நடக்கும் போது, என்ன காண்கிறோம்? ஆரிய சாம்பசிவ அய்யரும், திராவிடச்சாமியப்பாவும் காங்கிரசு மந்திரி பாஷ்யம் அய்யங்காருடன் பேசி, திராவிட கந்தசாமியின் கொட்டம் ஒடுக்கப்பட வேண்டும் என்ற மந்திராலோசனை செய்யும் வேடிக்கையை - வேடிக்கையா அது? வேதனை!''

இப்படி அண்ணாதுரையாலேயே வருணிக்கப்பட்ட நீதிக்கட்சித் தலைவர்கள் ''பார்ப்பன ஆதிக்கத்தில் இருந்து பார்ப்பனரல்லாத மக்களை விடுவித்தலை'' தமது அடிப்படைகளில் ஒன்றாகக் கொண்டு செயல்பட்டதாகப் புளுகுகிறது, வீரமணி கும்பல். சிறுபான்மையினராக இருந்தாலும் புராண, இதிகாச காலத்தில் இருந்தே பார்ப்பனர்கள் தமக்கே உரிய சாதி ஆதிக்க உணர்வோடு இருந்தனர்; பிற இனமக்களை சூழ்ச்சியால், வஞ்சகமாய் வெற்றி கொண்டு மேல் சாதி ஆதிக்கத்தை நிலை நிறுத்தி வந்தனர்; அவர்களையும் அவர்களது தத்துவத்தையும் எதிர்த்துப் பேசியவர்களையும், இயக்கமாக வளர்ந்தவர்களையும் எத்தகைய இழிவான, கொடுமையான செயல்களைச் செய்தாவது ஊடுருவி அழித்து வந்தனர்; இதை அறிந்துதான் நீதிக்கட்சித் தலைவர்கள் எச்சரிக்கை உணர்வோடு நீதிக்கட்சியில் பார்ப்பனர்களைச் சேர்ப்பதில்லை என்று விதி செய்தனர் என்கிறது விடுதலை.

1994 ஜனவரி 4-ந் தேதி இப்படி எழுதிய அதே விடுதலை ஏடு அதே தொடரின் ஆறாவது நாள் - அதாவது ஜனவரி 10-ந் தேதி பின்வருமாறு எழுதுகிறது:

பார்ப்பனரல்லாத இயக்கமாக நீதிக்கட்சி வளர்ந்த கால கட்டத்தில் ''உத்தியோகத்தில் உள்ள பார்ப்பனர்களின் ஆதிக்கத்தை ஒழிப்பதிலேயே தீவிரமாக இருந்ததுதான் - அன்றைய நீதிக்கட்சி! சமுதாயத்துறையில் பார்ப்பனர்களின் ஆதிக்கத்தை எதிர்க்காமல் இருந்தவர்கள் அன்றைய நீதிக்கட்சித் தலைவர்களில் பெரும்பான்மையானோர்''.

''பெரியார் நீதிக்கட்சியில் பொறுப்பேற்றவுடன்தான் (1938) அந்த இயக்கத்தில் பார்ப்பன எதிர்ப்பு என்பது சமூக, அரசியல், பொருளாதாரத் துறைகளில்



படிப்பகம்

www.padippakam.com

ஏற்படத் துவங்கியது'' 1944-ல் நீதிக் கட்சி திராவிடர் கழகமாக பெயர் மாற்ற மட்டுமல்ல, பண்பு மாற்றம் அடைந்த பிறகுதான் ''ஊசலாட்டமற்ற பார்ப்பன எதிர்ப்பு'' நீதிக்கட்சியில் இல்லாத திராவிடர் கழகத்தில் ஏற்பட்ட கூறுகளில் ஒன்றானது என்றும் எழுதுகிறது, விடுதலை.

ஆகவே, நீதிக்கட்சித் தலைவர்கள் பற்றிய அண்ணாதுரை எழுதிய மதிப்பீடா? விடுதலையே ஜனவரி 4-இல் எழுதிய மதிப்பீடா? அதற்கே முரணாக விடுதலை ஏடு ஜனவரி 10-இல் எழுதிய மதிப்பீடா? எது - உண்மை என்பதுதான் நமது கேள்வி? நீதிக்கட்சித் தலைவர்கள் பார்ப்பனரல்லாத ஒட்டு மொத்த சமுதாயப் பிரதிநிதிகளாக உரிமை பாராட்டுவது சரியா? இதைத்தான் நாம் மறுக்கிறோமே, தவிர அவர்களும், அவர்களது வாரிசுகளும் ஒரு அமைப்பை வைத்துக் கொள்ளவும், அதில் பார்ப்பனர்களை உறுப்பினர்களாக சேர்க்காமல் இருக்கவும் உள்ள உரிமையை நாம் எங்கே, எப்போது மறுத்தோம்?''

அதேபோல, பார்ப்பனர்களாய்ப் பிறந்தவர்கள் எவரும் துரோகம் செய்ய மாட்டார்கள்; அவர்களில் எவரும் ஆபத்தானவர்கள் அல்ல என்பது நமது வாதமே அல்ல. மேல்சாதி ஆதிக்கம், அதை நிலைநிறுத்திக் கொள்வதற்காக சூழ்ச்சி வஞ்சகங்களில் ஈடுபடுவதும், அதற்காக எத்தகைய இழிவான, கொடுமையான முறைகளை மேற்கொள்வதும், எதிரான இயக்கங்களில் ஊடுருவி அழிப்பதும் பார்ப்பனர்களிடம் கிடையாது என்பதும் நமது வாதமல்ல. அப்படி எங்கேயும் எப்போதும் நாம் எழுதியதோ பேசியதோ இல்லை. அதற்கு மாறாக, அவற்றை அம்பலப்படுத்தி, நமது அமைப்பு ஒரு குறுகிய காலத்தில் தி.க.வை விட வீச்சாகவே இயக்கங்கள், பிரச்சாரங்கள் நடத்தி வருகிறது. ம.க.இ.க. வெளியிட்டுள்ள ''அசுர கானம்'' ஒலி நாடாவே இதற்குத் தக்க ஆதாரமாக உள்ளது.

இந்த உண்மைகளை மறைத்து விட்டு, பார்ப்பனர்களின் துரோகப் பண்புகளுக்கு புத்தர் காலத்தில் இருந்து டங்கல் திட்டத்தை ஆதரித்து விவசாயிகளுக்கு சரத்ஜோஷி துரோகம் இழைத்தது வரை சான்றுகள் இருப்பதாக வாதம் புரிகிறது, விடுதலை. ஆனால் இந்தச் சான்றுகள், பார்ப்பனர்கள் அனைவரும், அந்தச் சாதியில் பிறந்துவிடுவதினாலேயே விதிவிலக்கற்ற முறையில் அனைவரும் துரோகப் பண்புடையவர்கள். என்று முடிவுக்கு நிருபணம், ஆதாரமாகி விடுமா?

நமது கேள்வி இதுதான்! மேல்சாதி ஆதிக்கம், சூழ்ச்சி, வஞ்சகம், இழிவான, கொடுமையான முறைகளால் தமக்கு எதிரான அமைப்புகளில் ஊடுருவி அழிப்பது ஆகிய இந்தத் துரோகப் பண்புகள் பார்ப்பனர்களாய்ப் பிறந்தவர்களிடம் மட்டும்தான் உள்ளவையா? இவை சாதிப் பிறப்பால் பிறவிக் குணமாக ஏற்பட்டவையா? சாதி - சமூக வளர்ப்பு - வாழ்வு முறையினால் ஏற்பட்டவையா? இந்தத் துரோகப் பண்புகள் மற்ற பிற சாதிகளில் பிறந்தவர்களிடம் இல்லையா? மாறாக, ''விடுதலை''யின் வாதங்களை பொய்ப்பிக்கும் சான்றுகள் பலவற்றையும் நாம் தர முடியும். புராண, இதிகாச காலத்திற்கு முன்பிருந்தே பார்ப்பன சனாதன, வருணாசிரம முறையையும் தத்துவத்தையும் எதிர்த்துப் போராடி, பார்ப்பனர்களால் பழிவாங்கப்பட்ட



> நீதிக்கட்சித் தலைவர்கள் பார்ப்பனீய எதிர்ப்பை தமது அடிப்படைகளில் ஒன்றாகக் கொண்டு செயல்பட்டதாக புளுகுகிறது, வீரமணி கும்பல்.

பார்ப்பனர்களாய்ப் பிறந்தவர்களும் உண்டு; தாழ்த்தப்பட்ட சக்கிலிப் பெண்களை மணந்து, அவர்களோடு வாழ்ந்த முத்துப்பட்டன் என்கிற பார்ப்பனன் வஞ்சகம் - துரோகத்தால் கொல்லப்பட்ட கதைப் பாடல் இன்றும் தென் பாண்டி சீமையில் பிரபலமாக உள்ளது. பீகாரில் தார்பங்கா மாவட்ட ஆட்சி அலுவலக கடைநிலை ஊழியராக பணியாற்றும் ''பார்ப்பனர்'' கீலானந்த் ஜா. இவர் மீனாத்திதேவி என்ற தாழ்த்தப்பட்ட பெண்ணை மணந்ததற்காக மேல் சாதி அதிகாரிகள் ஊதியம் கொடுக்க மறுத்தும், பொய்க் குற்றங்கள் சாட்டி வேலை நீக்கம் செய்தும் துன்புறுத்துகின்றனர்; இவற்றுக்கு அஞ்சாத கீலானந்த் ஜா பாட்னா மற்றும் டில்லி அரசு தலைமையகங்கள் முன்பு பல நாட்கள், பலமுறை குழந்தை குட்டிகளுடன் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தினார்; தாழ்த்தப்பட்ட மனைவிக்கு துரோகம் செய்து விட்டு ஓடி விடவில்லை. ''சமூக நீதிக் காவலர்''களான வி.பி.சிங், லல்லு ஆட்சிகளிலும் இவருக்கு நியாயம் கிடைக்கவில்லை.

சிறுபான்மையினர், பழங்குடி மக்கள் கமிசன் தலைவராக இருந்து ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி சர்மா, மத்திய பிரதேச ஆதிவாசிகள் உரிமைக்காக போராடிய பார்ப்பனர்; இதற்காக இவர் கடந்த ஆண்டு மேல் சாதி அதிகாரிகளால் விலங்கிட்டு உள்ளாடையுடன் ஊர்வலமாக இழுத்துச் செல்லப்பட்டார். இப்படியே பல சான்றுகள் கூற முடியும். இதே போலத்தான் நீதிக்கட்சியின் ஆட்சிக் காலத்தில் ''பார்ப்பனரல்லாதார் மீது துவேஷமின்றி'' நேர்மையாகவும், பாரா பட்சமின்றியும் சட்டப் பேரவைத் தலைவராகச் செயலாற்றினார் சர்.பி. இராஜகோபாலாச்சாரியார் என்று நீதிக்கட்சி வரலாறே குறிப்பிடுகிறது. இது, ''உள்ளிருந்தே அடுத்துக் கெடுக்கும் நரித்தனம்; பார்ப்பனர்களது பிறவிக்குணம்; அதற்கு விதிவிலக்கே கிடையாது'' என்கிற வாதத்தை மறுப்பதாகும் என்று நாம் சான்று காட்டியிருந்தோம்.

இதற்குப் பதில் சொல்ல முடியாத ''விடுதலை'' அசுரன், தனது ''பிறவிக் குண'' வாதத்தை நியாயப்படுத்த சில பித்தலாட்டங்களை வைத்துள்ளார். சர்.பி. இராஜகோபாலாச்சாரி பற்றி பு.ஜ. எடுத்துக் காட்டிய மேற்கோள் 1923-இல் நடந்த சம்பவம் பற்றி பண்டித எஸ். முத்துசாமி பிள்ளை எழுதிய ''நீதிக்கட்சி வரலாறு'' என்ற புத்தகத்தில் உள்ளது; அச்சம்பவம் பெரியார் நீதிக்கட்சித் தலைவராக (1938-இல்) பொறுப்பேற்பதற்கு முன்பு நடந்தது; அன்றைய நீதிக்கட்சி உத்தியோகத்தில் உள்ள பார்ப்பனர்களின் ஆதிக்கத்தை ஒழிப்பதிலேயே தீவிரமாக இருந்தது; அதன் தலைவர்களில் பெரும்பான்மையோர் சமுதாயத்துறையில் பார்ப்பனர்கள் ஆதிக்கத்தை எதிர்க்கவில்லை; 1944-இல் நீதிக்கட்சி திராவிடர் கழகமாகப் பெயர் மாற்றம் மட்டுமல்ல பண்பு மாற்றம் அடைந்துவிட்டது; நீதிக்கட்சியிடம் இல்லாத ஊசலாட்டமற்ற பார்ப்பன எதிர்ப்பு திராவிடர் கழகத்தில் ஏற்பட்டுவிட்டது; ஆகவே நீதிக்கட்சி வரலாறில் பண்டித முத்துசாமி பிள்ளை எழுதிய சம்பவம் திராவிடக் கழகத்துக்கு தொடர்பு இல்லாதது ஆகும்; அதை எடுத்துப் போட்டு தி.க.வின் செயல்பாட்டில் முரண்பாடு என்று பு.ஜ. எழுதுவது அறிவு நாணயமற்ற செயல்'' என்கிறார், விடுதலை அசுரன்!

''முதல் இந்தி எதிர்ப்புப் போராட்டத்திற்குத் (1937-40) தலைமையேற்று வழி நடத்திய பெரியார், பட்டுக்கோட்டை அழகிரி போன்ற தலைவர்கள் வரிசையில் ஒன்பதாவது சர்வாதிகாரி



படிப்பகம்

www.padippakam.com

யாக, போராட்ட தளபதியாக இராஜகோபாலாச்சாரியார் இருந்தார்; இப்போராட்டத்தில் பங்கு கொண்டு இரண்டு முறை சிறை சென்ற வேலூர் துளசி அம்மாள் பிறப்பால் பார்ப்பனரே'' என்று நாம் சான்று காட்டியதற்கும், மேற்படி காரணங்களையே கூறியுள்ளது, விடுதலை. அதோடு, அப்போராட்டம் கட்சியால் வரையறுக்கப்பட்டு, கட்சி உறுப்பினர்கள் மட்டுமே நடத்தியதல்ல; இந்தி எதிர்ப்பு என்ற ஒரு கொள்கையை மையப்படுத்தி நடத்தியதால் கடவுள் நம்பிக்கையாளர்கள் உட்பட பலதரப்பட்ட மக்களும் தாமே கலந்து கொண்டனர்; ஆகவே அதில் ''முன்னணிப் பொறுப்பில் பார்ப்பனர்களை அமர்த்தக் கூடாது என்பதை மறுப்பதற்கான வாய்ப்பு இல்லை'' என்று தமது ''சின்னப்புத்தி''யுடன் விளக்கமளிக்கிறார் விடுதலை அசுரன்.

''நீதிக்கட்சி திராவிடர் கழகமாக பண்பு மாற்றம் அடைந்தபின், மேற்கொண்ட நிலைப்பாடுகளைக் குற்றம் சொல்ல, திராவிடர் கழகத்திற்கு முந்திய நீதிக்கட்சிக் காலத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சிப் போக்குகளை ஆதாரமாகக் காட்டுவது நியாயமாகுமா? என்று (10/1/94) விடுதலை கேட்கிறார்.

நியாயந்தான்! தி.க.வின் எந்த நிலைப்பாட்டைக் ''குற்றம் சொல்ல'' அந்த இராஜகோபாலாச்சாரியாரை நாம் சான்று காட்டினோம். ''பார்ப்பனராகப் பிறந்த அனைவருமே நம்பிக்கை துரோகம் செய்து விடுவார்கள். அடுத்துக் கெடுக்கும் நரித்தனமும், சூழ்ச்சியும் அவர்களது ரத்தத்திலேயே ஊறியவை; இதற்கு விதிவிலக்கே கிடையாது'' என்பதுதான் வீரமணி போன்றவர்களது வாதம். ஆனால் திராவிடர் கழகத்தின் அனுபவமும் அணுகுமுறையுமே இதற்கு மாறானது என்பதற்குச் சான்றுகள் கூற முடியும்'' (பு.ஜ. '93 ஆக. பக். 21) இதற்கான சான்றாகத்தான் சர்.பி. இராஜகோபாலாச்சாரியாரைப் பற்றி ''நீதிக்கட்சி வரலாறி''ல் எழுதியுள்ளதை எடுத்துக் காட்டினோம்.

சர்.பி. இராஜகோபாலாச்சாரியார் எப்படிப்பட்ட பண்புகளைக் கொண்டிருந்தார்; வீரமணி போன்றவர்கள் குறிப்பிடும் நம்பிக்கைத் துரோகம், அடுத்துக் கெடுக்கும் நரித்தனமும் சூழ்ச்சியும் ஆரிய ரத்தத்திலேயே ஊறிய பண்புகளைக் கொண்டவராக அவர் இல்லை என்பதுதானே அடிப்படை. அவர் பற்றிய சம்பவங்கள் எப்போது நடந்திருந்தால் என்ன. அவை பெரியார் தலைமையில் ஊசலாட்டமற்ற பார்ப்பன எதிர்ப்பு திராவிடர் கழகமாகப் பண்பு மாற்றம் அடைவதற்கு முன்பு நடந்திருந்தால் என்ன? பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனம் வெளியிடும் ''நீதிக்கட்சி வரலாறு'' நூலை பண்டித முத்துசாமி பிள்ளை எழுதியிருந்தால் என்ன? அன்றைய நீதிக்கட்சித் தலைவர்கள் பார்ப்பனர்களிடம் எத்தகைய அணுகுமுறையைக் கொண்டிருந்தால் என்ன? வீரமணி போன்றவர்கள் குறிப்பிடும் பண்புகள் பார்ப்பனர்கள் அனைவருக்கும் பொருந்தக் கூடியவை அல்ல என்பதற்கு சான்றாக இராஜகோபாலாச்சாரி இருந்தார் - வாழ்ந்தார் என்கிற உண்மையை மேற்கண்ட காரணங்கள் பொய்ப்பிக்கின்றனவா? இல்லை, அக்காரணங்களால் அவர் பற்றிய மதிப்பீடே தவறாகிவிடுமா?



திராவிடத் தலைவர்கள் பார்ப்பனர்களுடன் சேர்ந்து தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட உழைக்கும் மக்களை அடக்கி, ஒடுக்கி வந்த முன்னாள் அரசர்கள், நிலப்பிரபுக்கள், மிட்டா - மிராசுகள், பெரும் வணிகரின் பிரதிநிதிகள்தாம்!

'விடுதலை' அசுரனின் வாதம்தான் என்ன? பண்பு மாற்றமடைந்த தி.க.வாக இருந்திருந்தால் இராஜகோபாலாச்சாரி பற்றி அவ்வாறு வரலாறு எழுதியிருக்காது; இப்போதைய நிலைப்பாட்டின்படி எல்லாப் பார்ப்பனர்களும் நம்பிக்கைத் துரோகிகள், அடுத்துக் கெடுக்கும் நரித்தனமும் சூழ்ச்சியும் ரத்தத்திலேயே ஊறிய பண்பினர்; இராஜகோபாலாச்சாரியும் அப்படித்தான் இருந்தார்; தி.க. தலைமையில் - ''பெரியாரியல் அடிப்படையில்'' இந்தி எதிர்ப்புப் போராட்டம் நடந்திருந்தால் இராஜகோபாலாச்சாரியாரை முன்னணிப் பொறுப்பில் அமரவிடாமல் தடுத்திருப்போம்; நீதிக்கட்சித் தலைவர்கள் பார்ப்பன எதிர்ப்பில் ஊசலாட்டமாக நடந்து கொண்டனர், இவை தானே!

இப்படி சுழற்றிச் சுழற்றிப் பித்தலாட்டமான வாதங்கள் புரியும் விடுதலை அசுரன், இராஜகோபாலாச்சாரி பற்றி முத்துசாமி பிள்ளை எழுதியவை நீதிக்கட்சியின் நேர்மையைக் குறிப்பதாகவும், ''தனிப்பட்ட பார்ப்பனர்களுக்குத் தாங்கள் எதிரிகள் அல்ல'' என்று மிகத் தெளிவானமுறையில் எடுத்துக் காட்டுவதாகவும் கூட வாதிடுகின்றார். முதலில் பார்ப்பன எதிர்ப்பில் ஊசலாட்டம் காரணமாக இராஜகோபாலாச்சாரியாரைப் பாராட்டிவிட்டதாகவும், இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் முன்னணிப் பொறுப்பளித்து விட்டதாகவும், அதையே அறிவு நாணயமற்ற முறையில் நாம் எடுத்துக் காட்டுவதாகவும் வாதிடுகிறார் அசுரன்; அடுத்து பத்தியிலேயே அந்தநடவடிக்கைகள் நீதிக்கட்சியினர் நேர்மையாகவும், பார்ப்பனர்களிடம் காழ்ப்பின்றி நடந்ததற்கும் சான்றுகள் என வாதிடுகிறார். ஆனால் இராஜகோபாலாச்சாரி எப்படிப்பட்ட பண்புகளைக் கொண்டிருந்தார் என்பது தான் அடிப்படையே தவிர, நீதிக்கட்சியினர் எப்படி நடந்து கொண்டனர் என்பது இரண்டாவதாக, வருவதுதான்!

அடுக்கடுக்காகப் புளுகுபவர், நெருக்கடியில் சிக்கி உளறுவதைப்போல மேற்படி சான்றுகளால் திணறிப் பிதற்றுகிறார், விடுதலை அசுரன். ''பெரியாரியல் அடிப்படையில் நடக்கும் போராட்டங்களில் எது ஒன்றையும் (இட ஒதுக்கீடு, இந்தி எதிர்ப்பு, கருவறை நுழைவு, தமிழ் மொழி வழிபாடு, அனைத்துச் சாதியினரையும் அர்ச்சகராக்கப் போராட்டம் போன்றவை) இதுவரை எந்த முற்போக்குப் பார்ப்பனரும் ஆதரித்தது கிடையாது. சில போராட்டங்களுக்கு பார்ப்பனர் கொடுத்த ஆதரவை வேண்டாம் என பெரியாரோ, திராவிடர் கழகமோ ஒதுக்கியதில்லை'' (விடுதலை 10/1/94) இந்த இரண்டு வரிகளின் உள்ள சுயமுரண்பாட்டைக் கண்டாலே விடுதலையின் பித்தலாட்டங்கள் நிருபணமாகிவிடும். முதல் வரியில், இதுவரை எந்த முற்போக்குப் பார்ப்பனரும் பெரியாரியல் அடிப்படையில் நடக்கும் போராட்டங்களில் எது ஒன்றையும் ஆதரித்தது கிடையாது என்கிறார். அடுத்த வரியில் ஒரு சில போராட்டங்களுக்கு பார்ப்பனர் ஆதரவு கொடுத்ததாகவும், அதை வேண்டாம் என பெரியாரோ, தி.க.வோ ஒதுக்கியது இல்லை என்கிறார். எது உண்மை?

அப்படி ஒரு சில போராட்டங்களை ஆதரித்த பார்ப்பனர் பற்றித்தான் புதிய ஜனநாயக செய்திகள் தெரிவித்ததாகவும், அவை அனைத்தும் இரண்டு போக்குகளுக்கே ஆதாரமாகும் என்று கூறி மேலும் பித்தலாட்ட வாதம் புரிகிறார், விடுதலை அசுரன்.



படிப்பகம்

www.padippakam.com

''1. நீதிக்கட்சி திராவிடர் கழகமாக பண்பு மாற்றம் அடைவதற்கு முன்பு தேர்தலில் நிலைப்பாடு பற்றியும், ஆட்சியில் முக்கிய பொறுப்புகளைப் பார்ப்பனருக்குக் கொடுப்பது பற்றியும் தெளிவான நிலைப்பாடு இயக்கத்தில் இருக்கவில்லை. அந்தக் காலகட்டத்தில் உள்ள பார்ப்பனர் பற்றிய செய்திகளை, பெரியாரின் திராவிடர் கழகத்தின் நிலைப்பாடுகளுக்கு முரணானவை என்று காட்ட முயன்றது அறிவு நாணயமற்றது.

''2. திராவிடர் கழகமாகப் பண்பு மாற்றம் அடைந்தபின் இயக்கத்தில் உறுப்பினராக பார்ப்பனர்களை அனுமதிக்காமல், தேர்தலில் பங்கேற்காமல், பார்ப்பனர்கள் கொடுத்த ஆதரவை ஒதுக்காமல் செயல்பட்டது. பார்ப்பனர்களின் ஆதரவைப் பெறுவதோடு மட்டுமின்றி இயக்கத்தில் அனுமதித்து முக்கிய பொறுப்புகள் கொடுப்பது என்பது மேற்சொன்ன நிலைக்கு முற்றிலும் வேறான நிலையாகும். இத்தகைய வேறான நிலையை நியாப்படுத்துவதற்காக புதிய ஜனநாயகம் மேற்சொன்ன வாதத்தை வைப்பது எப்படி நியாயமாகும்?'' (விடுதலை 10/1/94)

முதலாவதாக, பெரியாரின் திராவிடர் கழகமாக பண்பு மாற்றம் அடைந்து, பார்ப்பனர் பற்றிய தெளிவான முடிவெடுப்பதற்கு முன்போ, பின்போ பொதுவாக ஒரு சில போராட்டங்களுக்கு ஆதரவு கொடுத்த பார்ப்பனர்களைப் பற்றி புதிய ஜனநாயகம் எழுதவில்லை. பார்ப்பனர்கள் அனைவருமே நம்பிக்கைத் துரோகம், அடுத்துக் கெடுக்கும் நரித்தனம், சூழ்ச்சி ஆகியவை ரத்தத்திலே ஊறிய பிறவிக் குணம் கொண்டவர்கள் என்கிற வீரமணி போன்றவர்களது வாதம் தவறானது என்பதற்குச் சான்றுகளாக விளங்கும் பார்ப்பனர்களைத் தான் குறிப்பாக எடுத்துக்காட்டினோம். ''பிறவிக் குணம்'', ''சாதிப்புத்தி'' என்று பொதுவில் வாதாடும் விடுதலை அசுரன், அந்த வாதம் நாம் சான்றுகளாகக் காட்டிய பார்ப்பனர்களுக்கும் எப்படிப் பொருந்தும் என்று நிரூபிக்க முடியவில்லை. இதை மூடி மறைப்பதற்காக இராஜகோபாலாச்சாரி பற்றிக் கூறியவை எப்போது நடந்தன, நீதிக்கட்சியினரின் ஊசலாட்டம், தெளிவின்மை என்று திசை திருப்பிப் பித்தலாட்டம் செய்கிறார். உண்மையில் இதுதான் அறிவு நாணயமற்ற செயல்.

இரண்டாவதாக, பார்ப்பனர்களின் ''பிறவிக் குணம்'', ''சாதிப் புத்தி'' என்று வீரமணிகள் கூற்றும் தவறானது என்பதற்குப் பிற்காலத்தில் சான்றுகளாக விளங்கிய பார்ப்பனர்கள் சிலரையும் புதிய ஜனநாயகம் குறிப்பாக எடுத்துக்காட்டியது; ஏதோ ஒரு சில போராட்டங்களுக்கு ஆதரவு தரும் பார்ப்பனர்களைப் பற்றியோ, அதை தி.க. ஒதுக்காமல் ஏற்பது பற்றியோ நாம் எழுதவில்லை. அதற்கும் பதிலளிக்கும் திராணியற்ற விடுதலை அசுரன், இயக்கத்தில் உறுப்பினர்களாக பார்ப்பனர்களை அனுமதிக்காமல், தேர்தலில் பங்கேற்காமல், பார்ப்பனர்களின் ஆதரவை ஒதுக்காமல் தாங்கள் ஏற்பதாகவும், அதைக்காட்டி இயக்கத்தில் பார்ப்பனர்களை அனுமதித்து முக்கிய பொறுப்பு கொடுப்பதை பு.ஜ. நியாயப்படுத்துவதாகவும் வாதிடுகிறார்.



துரோகம், அடுத்து கெடுக்கும் நரித்தனம் - சூழ்ச்சி பார்ப்பனர் அல்லாதவரிடமும் உள்ளது. அன்று ராஜாஜி காலில் விழுந்த ராமநாதனைப் போல் எம்.ஜி.ஆர்., ஜானகி, ஜெயலலிதா காலில் விழுந்தவர்கள் வீரமணி உட்பட இன்று எத்தனைப் பேர்? 'துரோக'ப் பண்புகளுக்கு பிறவிக் குணமா காரணம்?

உண்மை என்ன? பிறப்பால் பார்ப்பனர்களாகிய எவரையும் புதிய ஜனநாயகம் இயக்கத்தில் சேர்ப்பதோ, முக்கிய பொறுப்புகளுக்கு அனுமதிப்பதோ தவறானது; ஏனென்றால் நம்பிக்கை துரோகம், அடுத்துக் கெடுக்கும் நயவஞ்சகம், நரித்தனம், சூழ்ச்சி ஆகியவை விதிவிலக்கின்றி பார்ப்பனர்கள் அனைவரின் ரத்தத்திலேயே ஊறிய 'பிறவிக் குணம்' - இப்படி பு.ஜ.வுக்கு எதிராக வைக்கப்பட்ட வாதத்தை ஏற்க மறுத்த நாம், பிறவிக்குணம் - பிறப்பு அடிப்படையில் ஒருவரின் பண்புகளைத் தீர்மானிப்பது என்பதே தவறானது என்கிற விளக்கிமளித்தோம். பார்ப்பனர்களாகப் பிறந்தவர்கள் அனைவருமே அப்படிப்பட்ட பண்புடையவர்கள் அல்ல என்பதற்கு அவர்களது அனுபவத்தில் இருந்தே சில சான்றுகளையும் குறிப்பிட்டோம். அதன் மூலம் பார்ப்பனர்களாய்ப் பிறந்தவர்களிடம் நாம் கொண்டுள்ள அணுகுமுறை சரியானதுதான் என நியாயப்படுத்தினோம்.

நாம் சான்றுகளாகக் காட்டிய பார்ப்பனர்களுக்கும் தமது பிறவிக்குணம் பற்றிய சித்தாந்தம் பொருந்தும் என்று விடுதலையால் நிரூபிக்க முடியவில்லை. அதற்குப் பதிலாக, பார்ப்பனர்களில் நம்பிக்கை துரோகம் செய்துவிட்டவர்களைச் சான்று காட்டி, ''ம.க.இ.க.வில் உள்ள பார்ப்பனர்கள் சரத்ஜோஷியாகவும், பி. இராமமூர்த்தியாகவும் ஒரு காலத்தில் அம்பலமானால் ஆச்சரியமில்லை'' என்று தனது எதிர்பார்ப்பை எழுதுகிறது விடுதலை.

ஏற்கனவே நாம் கூறியபடி, பார்ப்பனர்களில் நம்பிக்கை துரோகிகள், அடுத்துக் கெடுக்கும் நரித்தனம் - சூழ்ச்சி ஆகிய பண்புடையவர்கள் கிடையாது என்பதல்ல நமது வாதம்; ஆனால், இதே பண்புகள் பார்ப்பனரல்லாத பலரிடமும் உள்ளதே அதற்கு என்ன காரணம் - அடிப்படை? இராவணனிடத்தில் ஒரு விபீடணன் இருந்தானே! நீதிக்கட்சித் தலைவர்களில் ஒருவராகவும், பெரியாரின் செயலாளராக இருந்து அவருடன் ரஷ்யப் பயணம் போய் வந்த இராமனாதன் இந்த இயக்கத்துக்கு துரோகம் செய்து கட்சிமாறி இராஜாஜியுடன் போய் சேர்ந்து கொண்டாரே! எம்.ஜி.ஆர், ஜானகி, ஜெயலலிதா காலிலே விழுந்த, வீரமணியால் அமைச்சர் பெருமக்களாகப் பாராட்டப்படுபவர்கள் உள்ளனரே! ஏன், வீரமணியே ஒரு இனத் துரோகியாக இருக்கிறரே! திருவாரூர் தங்கராசு, சிதம்பரம் கிருஷ்ணசாமி, செல்வேந்திரன், பாப்பாரப்பட்டி சம்பந்தன் போன்றவர்களை, வீரமணி துரோகிகள் என்கிறாரே! இவர்களின் 'துரோக'ப் பண்புகளுக்கு பிறவிக் குணம்தான் காரணம் - அடிப்படை 'என்று கூறலாமா? இல்லை என்றால் இவர்களின் ரத்தத்தில் துரோகப் பண்புகள் எப்படி ஊறின என்பதை விடுதலை விளக்க வேண்டும்?

அடுத்து ''பிறவிக் குணம்'', ''சாதிப் புத்தி'' என்கிற அவர்களது சித்தாந்தத்திற்கு, எப்படி மேலும் முட்டாள்தனமான இனவாத (RACIAL) விளக்கமளித்து தாம் பகுத்தறிவே இல்லாதவர்கள் என்று வீரமணிகள் நிரூபிக்கிறார்கள் என்பதைப் பார்ப்போம். — தொடரும்.

Published and owned by R.SHANMUGARAJ, 4, Samiyar Thottam, Alandur Road, Saidapet, Madras - 600 015
Printed by him at EZHIL PRINTS, 321, Arcot Road, Madras - 600 024, Editor: R.SHANMUGARAJ

படிப்பகம்

www.padippakam.com






அடுத்த அடி எடுத்து வைக்க முடியாதபடி பாதங்களும் சோற்றைக் கூட எடுத்துத் தின்ன முடியாதபடி உள்ளங் கைகளும் பொத்து இர ணமாகிப் போயின அரு கிலுள்ள படத்திலுள்ள இருவருக்கு. நோய் முற் றியதால் விரலை ஒருவர் இழந்து நிற்க, மற்றொரு வருக்கோ தொழு நோய் வந்தது போன்று முகமே விகாரமாகிப் போனது. வேலைக்கோ, விருந் துக்கோ மட்டுமல்ல, ஊருக்கு வெளியே ஒதுங்கப் போனாலும் அவமானப்பட்டுதான் திரும்புகின்றனர் இவர்கள். மேற்கு வங்கத்தின் ஆறு மாவட்டங்களில் இப்படி 1 1/2 லட்சத்துக் கும் அதிகமானோர் உடலெங்கும் இரண மான குரூரமாய் உருமாறிப் போய், மூலையில் முடங்கிப் போய் மரணத்தை யும் தழுவும் நிலையில் உள்ளனர். அம் மாவட்டங்களின் நிலத்தடி நீரில் ''ஆர்ச னிக்'' என்னும் இரசாயனப் பொருள் கூடுதலாகிப் போனது தான் இந் நோய்க் கான காரணம். சுத்தமான குடிநீரும் சத் தான உணவுமே இந்நோயைக் குணப்ப டுத்த போதுமானது. ஆனாலும் 'மார்க் சிஸ்டு'கள் ஆட்சியிலும் அந்த விஷ நீர் தான் அப்பகுதி மக்களுக்கு குடிநீர். சத் தான உணவு பற்றி வேறென்ன கேள்வி வேண்டியிருக்கிறது?



# இதுதான் இன்றைய இந்தியா

ஆள்பாதி ஆடை பாதி என்பார்கள். இதோ இப்பெண்மணி தனது உடலில் கூடுதலாகி விட்ட கொழுப்பைக் குறைக்க நவீன சிகிச்சை பெறுகிறார். என் றும் இளமை மாறாது உடலைக் கட்டுக் குலையாமல் வைத்திருக்க இவர்களுக் காக ஐந்து நட்சத்திர விடுதிகளிலும் மருத் துவமனைகளிலும், தனியாகவும் தொடங்கி நடத்தப் பெறும் ''உடல் நல கூடங்கள்'' பெரு நகரெங்கும் பெருத்து விட்டன. கட்டணமும் அதிகமில்லை; மாதம் 3000 தான்! இதோடு உடல் எடை யைக் கூட்டாது தேவையான சக் தியை மட்டும் தரக் கூடிய நவீன உணவு வகைகளும் கூட சந்தைக்கு வந்து விட் டன.



இவர்களின் ஆடம்பர - உல்லாச வாழ்க்கைத் தேவைகளுக்குப் புதிய பொருளாதாரக் கொள்கை எனும் பெய ரில் வரி விலக்கு அளிக்கும் அரசு, உழைக்கும் மக்கள் நோயில் விழுந்து விட்ட நிலையிலும் அரசு மருத்துவ மனைகளில் கட்டணம் வசூலித்து சுரண்ட திட்டமிடுகிறது. இந்த அநியாயத் தைக் கண்டு தாளாது இன்னும் எத்தனை நாள் தான் நாம் மனதுக்குள்ளேயே பொறுமுவது?

படிப்பகம்